152

Approved by the Text-Book Committee for Class Use.
de Consolidated List Parts I & II Dated 2-6-'42, Pag 89 & 105

152

TAMIL

CHUDAR VĀCHAKAM

BOOK VIII

(According to the New Syllabus)

18 OCT 1946

BY

VIDWAN S. G. GANAPATI IYER, B.O.L.,
&
VIDWAN MISS M. MASILLAMANI, M.A., L.T.

PUBLISHE

VE
E
ES

Copyright]

தமிழ்ச் சுடர் வாசகம்

எட்டாம் புத்தகம்.

18 OCT 1945
MADRAS

ஆசிரியர்

வித்வான் ச. கு. கணபதி ஐயர், B. O. L.
தலைமைத் தமிழாசிரியர்
சேவாசதன உயர்தரப் பாடசாலை, சேத்துப்பட்டு, சென்னை

வித்வான்-மேரி மாசில்லாமணி அம்மையார், M.A., L.T.,
தமிழ் விரிவுரையாளர்,
பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை

494.81186

953

வேங்கடராமா அண்டு கம்பெனி,
பிரசுரகர்த்தர்கள்,
எஸ்பிளனேட், சென்னை.

[உரிமை பதிவு] 1945 [விலை அணா 12

First Edition 1941
Latest Reprint, May 1945

P3119

Printed at the Liberty Press, Madras

முகவுரை

தமிழ்ச்சுடர் வாசக வரிசை துரைத்தனத்தார் புதிதாக வெளியிட்டுள்ள பாடத் திட்டத்தை முற்றிலும் தழுவி எழுதப் பெற்றவையாகும். மாணவர்களுக்குப் பெரிதும் பயன் படத்தக்க விஷயங்கள் மிகுந்த கவனத்துடன் தேர்ந்தெடுத்து இவற்றில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில பகுதிகளின் தொடர்பு விளங்குவதற்காக, அவசியமான விவரங்கள் வேறு விதமான எழுத்தில் அவ்வப் பகுதியின் தலைப்பில் தரப்பெற்றுள்ளன.

வினாக்களும், கட்டுரையாக்கப் பயிற்சிகளும், இலக்கணப் பயிற்சிகளும் தகுந்த பரிசோதனையின்மேல் எழுதப் பெற்றவையாகும்.

பாடங்கள் எவ்வகையிலும் மாணவர்களுக்குத் தமிழ் மொழியினிடத்து ஆர்வம் தரும் வகையில் அமைந்திருப்பது ஒரு சிறந்த அமைப்பாகும். நகைச்சுவை இவ்வரிசைகளில் தக்க இடம் பெற்றிருக்கிறது. சுருங்கக் கூறுமிடத்து, இவ்வரிசை மாணவர்களைப் புத்தகப் பிரியர்களாக்குமென்பதில் ஐயமில்லை என்னல் வேண்டும்.

இங்ஙனம்,

ஆசிரியர்கள்.

953

நன்றியுரை

இப்புத்தகத்துள் வந்துள்ள பாடங்களுள் 'பழங்கால மாணவர்' (பாடம் 1) 'நான் கண்ட நல்லிடங்கள்' (பாடம் 12) என்பன வித்துவான் ச. கு. கணபதி ஐயர் பி. ஓ. எல். அவர்கள் எழுதிய கட்டுரைக் கலம்பகம் என்ற புத்தகத்தினின்றும் எடுக்கப் பட்டவை யாகும். 'மண்ணை வளப்படுத்தல்' (பாடம் 3) அன்னார் தம் தோட்டப் பயிற்சி என்ற புத்தகத்தினின்றும் எடுத்துக்கொள் ளப் பட்டதாகும். 'டாடாவும் இந்தியாவும்' (பாடம் 6) என்பது அன்னார் எழுதிய 'ஜேம் ஷட்ஜி நஸர் வாஞ்சி டாடா' என்ற நூலிலிருந்து எடுத்துக்கொண்டதாகும். 'வில்லி பாரத வரலாறு' (பாடம் 7) அன்னார் எழுதிய வில்லி பாரதத் திறவுகோல் என்ற புத்தகத்தினின்றும் எடுத்துக்கொள்ளப் பெற்றதாகும். குலிஸ் தான்—பூஞ்சோலை' (பாடம் 5) என்பது திரு. க. நா. சுப்ரமண்யம் அவர்கள் 'கலைமகள்' என்ற சிறந்த மாதப் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிய கட்டுரையின் திரட்டாகும். 'காவியமும் கணக்கும்' (பாடம் 8)என்பதும் 'ஸ்ரீசைலயாத்திரை' என்பதும் திரு சேனாபதி யவர்கள் கலைமகளில் எழுதி வெளியிட்ட கட்டு ரைகளாகும். 'பாட்டியும் பேர்த்தியும்' (பாடம் 9) என்பது திரு 'ஜோதி' அவர்கள் எழுதியது. 'தாமஸ் எடிசன் என்பது வித்துவான் எஸ் முத்துவையங்கார், பி. ஏ. (ஆனர்ஸ்), எல். டி., அவர்கள் கலைமகளில் வெளியிட்டுள்ளதாகும். 'கவியரசு தாகூர்' (பாடம் 16) என்பது திரு வி. ஜி. துரைசாமி அவர்கள் எழுதிக் கொடுத்ததாகும்.

இவைகளை இப்புத்தகத்துள் சேர்த்துக்கொள்வதற்குத் தங்கள் அனுமதியை அளித்துள்ள ஆசிரியர்களுக்கும் பிரசுர கர்த்தர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்:

ஆசிரியரும், பதிப்பாளரும்

பொருளடக்கம்

எண்	விஷயம்			பக்கம்
1.	பழங்கால மாணவர்	....	....	1
2.	வீரப் பெண்மணி	....	....	7
3.	மண்ணை வளப்படுத்தல்	....	....	13
4.	மூன்று வலைஞர்கள்	....	....	21
5.	குலிஸ்தான்—பூஞ்சோலை	....	....	23
6.	டாடாவும் இந்தியாவும்	....	....	29
7.	வில்லிபாரத வரலாறு	....	....	35
8.	காவியமும் கணக்கும்	....	....	42
9.	பாட்டியும் பேர்த்தியும்	....	....	54
10.	நரசிம்மாவதாரம்	....	....	58
11.	பக்த ஆகஸ்தீன்	....	....	67
12.	நான் கண்ட நல்லிடங்கள்	....	....	73
13.	மணிமேகலையின் தனிமை	....	....	79
14.	தாமஸ் எடிசன்	....	....	81
15.	நாவடக்கம்	....	....	88
16.	கவியரசு தாகூர்	....	....	94
17.	ஸ்ரீ சைல யாத்திரை	....	....	103
18.	ஸ்ரீ ஆண்டாள்	....	....	112
19.	குறியீடுகள்	....	....	118

எண்	விஷயம்	பக்கம்
	செய்யுள் மஞ்சரி	
1.	திருமந்திரம்	122
2.	திருக்குறள்	123
3.	நீதிநெறி விளக்கம்	124
4.	மோசம்போன கழுதை	125
5.	இராமர் வில்வளைத்தல்	131
6.	மகன் பிரிவுக்கு மறுகல்	133
7.	தனிப்பாடல்	134
	குறிப்புரை	137

தமிழ்ச் சுடர் வாசகம்

எட்டாம் புத்தகம்

1. பழங்கால மாணவர்

இராமாயண மகாபாரத காலம் முதல் கி. பி. 11-ஆம் நூற்றுண்டு முடிய இதிகாச புராண காலமாகும். இதனைப் பழங்கால மென்றும் கூறலாம். இக்காலத்தில் மாணவர்கள் சிறந்த நிலையில் இருந்துவந்தார்கள்; அதனுல் நாடும் சிறப்புற்றிருந்தது.

அக்காலத்தில் ஒரு மாணவனுக்கு ஏழு, எட்டு வயதானவுடன் அவன் ஓர் ஆசிரியரிடம் சேர்ப்பிக்கப் பெற்றுவந்தான். அவன், பல வருஷங்கள் குருவுடன் வாசம் செய்து வரவேண்டியவனுனன். அவனுடன் அவனைப் போன்ற வேறு மாணவர்களும் அந்த ஆசிரியரிடம் கல்வி பயின்று வந்தார்கள். மாணவர்கள் தங்களுடைய பெற்றோர்களைப் பிரிந்து குருவினிட மிருந்து கல்வி கற்று வந்தமையைக் குருகுலவாசம் என்பார்கள். தேவகுலம் என்பது தேவாலயத்தைக் குறிப்பதுபோல் குருகுலம் என்பது குருவின் உறைவிடத்தைக் குறிக்கும்.

ஆதி காலத்து மாணவர்களுக்கு அமைந்த ஆசிரியர்கள் ஆடம்பர வாழ்க்கையில் வெறுப்புள்ளவர்கள்; நல்ல

பழக்கங்களை உடையவர்கள். காடுகளிலும், மலைகளிலும், நதி தீரங்களிலும் இயற்கை யன்னை கொலு வீற்றிருக்கும் தனியிடத்தில் அவ்வாசிரியர்கள் வசித்து வந்தார்கள். அதனால் தூய காற்றும் நீரும் நிலனும் மாணவரின் உடல் வளர்ச்சிக்கு ஏற்றவையாக அமைந்திருந்தன.

இயற்கை வழியில் கல்வி பயின்று வந்தமையால் மாணாக்கர்களின் அறிவு கூர்மையாக இருந்தது. மூற் பகுதி யெல்லாம் மனனஞ் செய்வதற்கும், பிற் பகுதி ஆராய்ச்சி செய்வதற்குமாகக் குருகுல வாசம் அமைந் திருந்தது. மாணவர்கள் தங்கள் ஆசிரியரிட மிருந்து கற்றுக் கொண்டவற்றைவிடக் கேட்டுக் கொண்டவை யும், அவருடைய நடையைக் கண்டு நேரில் அறிந்து கொண்டவையும் மிகப் பலவாம்.

ஒவ்வொரு மாணவனும் தன் தன் வசதிகளைத் தானே தேடிக்கொள்ளுமாறு ஆசிரியர்கள் மாணவர் களைப் பழக்கி வந்தார்கள். பிள்ளைகள் தினந்தோறும் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று உணவைப் பிக்ஷையாகப் பெற்றுவருவார்கள். மாணவ நிலையில் பிக்ஷை யெடுப்பது இழிவாகக் கருதப்படவில்லை. மாண வன் பிக்ஷை யெடுப்பது இன்றும் சில சாதியினரிடத் தில் போலிச் சடங்காக உபநயனங்களில் நடைபெற்று வருவதை நாம் காணலாம். எளிய வாழ்க்கையோடு கூடிய இயற்கை நிலையில் ஈடுபட் டிருந்ததனால் அவர் களுக்கு வேண்டிய பொருள்கள் மிகக் குறைவாகவே இருந்தன. இயற்கைக் காட்சியும், மனமொத்த சகபாடி களின் கூட்டுறவும், ஆசிரியர்களின் அன்பும், தாங்கள் கற்று வந்த கல்வி முறையின் அமைப்பும் மாணவர்

களுக்கு அளவற்ற மகிழ்ச்சியை யளித்து வந்தன. வீட்டின் நினைவு அவர்களைத் துன்புறுத்த வில்லை. தங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தாங்களே தேடிக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தபடியால் இளமையிலேயே அவர்களுக்குக் காரிய நிர்வாக சக்தி ஏற்பட்டது.

அவர்கள் அறிவுப் பயிற்சியில் மிக்கவர்கள். உடற் பயிற்சியில் அதற்கு இளைத்தவர்கள் அல்லர்; நீந்துதல், மல்யுத்தம், சிலம்பம், ஆயுதப்பயிற்சி முதலியவைகள் கல்வியின் ஒரு பாகமாக இருந்து வந்தன. அதனால் குருகுல மாணவர்கள், உடல் வலிமை வாய்ந்தவர்களாக வும், நோயற்றவர்களாகவும் இருந்து வந்தார்கள்.

நகரங்களில் அரசவைகளில் அடிக்கடி பிரசங்கங்கள் நடைபெறுவது வழக்கம். அவற்றிற்குக் குருகுலவாசிகள் தங்கள் ஆசிரியர்களுடன் சொல்வதுண்டு. இதனால் பல பெரியவர்களின் பழக்கமும், உலகாநுபவமும் மாணவர் களுக்கு எளிதில் அமைந்தன.

குருகுல வாசத்தின் இறுதியில் மாணவர்கள், தாங் கள் கற்ற கல்வியை அனுபவத்தில் விசாலப்படுத்திக் கொள்ளத் தேச சஞ்சாரம் செய்து வந்தார்கள். தேச சஞ்சார மின்றி ஒரு மாணவன் மணஞ்செய்து கொள்ளச் சாத்திரங்கள் இடந்தரவில்லை. மாணவர் தேச சஞ்சாரம் செய்வது அறவே ஒழிந்துவிட்ட நம் காலத்தில், மண வினைக்கு முன்பு மணமகன் மாணவ வேடத்தோடு காசி யாத்திரை செய்து வருதல் என்ற வழக்கம் மட்டும் இருந்து வருவது மேற்குறித்த சாத்திரங்களின்படி நாம் நடக்கிறோம் என்பதைக் காட்டவேதான். இந்தியாவில் முக்கிய ஸ்தலங்களும் தீர்த்தங்களும் தேசத்தின் பல கோடி

களில் அமைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன? ஒரு கோடியிலுள்ள மக்கள் மற்றொரு கோடிக்குச் சென்று உலக ஞானம் பெறுவதற் கென்றே யன்றோ! தேச சஞ் சாரத்தை மேற்கொண்டு இக்கால மாணவர்கள் பல சங்கங் களைக் கண்டு தங்கள் கல்வியறிவைப் பெருக்கிக்கொண்டார் கள்! தாங்கள் நேரிற் கண்டவற்றையும், கேட்டவற்றையும், அநுபவித்தவற்றையும் பிற்காலத்தாரும் உணரும்படி சுவடிகளிற் பொறித்து வந்தனர். அவர்கள் ஆராய்ந்து எழுதி வைத்த விஷயங்களையே நாம் இப்பொழுது பாராட் டிப் படித்து வருகிறோம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து குருகுலங்களை ஆதரிக்கத் தக்க சிறந்த அரசர்கள் இல்லா மற் போனார்கள். அவைகள் நிறுவப்பெற்றிருந்த காடுகள் முதலியவை கொள்ளைக் கூட்டத்தாரின் தாயகமாயின. தேச சஞ்சாரம் செய்வதில் பல இடையூறுகள் குறுக்கிட் டன. பலவிதமான குழப்பங்களுக்கிடையில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை விட்டு நெடுங்காலம் பிரிந்திருக்க விரும்ப வில்லை. இந் நிலையில் குருகுலங்கள் வீழ்ச்சியுற்றமை வியப் பன்று.

பழங்கால மாணவ நிலையைப் பின்பற்றி நம் காலத் தில் கற்பிப்பதில் பல புதிய முறைகள் தோன்றியுள்ளன. மாணாக்கர்கள், விஷயங்களைத் தாங்களே சோதனை செய் தோ நேரிற்கண்டோ தெரிந்துகொள்வதுதான் கல்வி யென்றும், ஆசிரியர்கள், மாணாக்கர்களுக்குத் துணையாக நின்று உபாயங்களைக் கற்பிக்கவேண்டுமென்றும் பலர் எண்ணுகின்றனர். ஆதிகால மாணவர்கள் பல விடங் களுக்குச்சென்று விஷயங்களை நேரிற்கண்டு தெளிவடைந்

ததுபோல் இவர்களும் தேச சஞ்சாரம் செய்ய வேண்டு மென்றும், எல்லோரும் தேச சஞ்சாரம் செய்வது இயலாத காரியமாதலால் பள்ளிகளை யொட்டிப் பொருட்காட்சிச் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்றும், ஒளி விசித் திரப் படங்கள், திரைப்படங்கள் முதலியவையும் கல்வி அபிவிருத்திக்கு அவசிய மென்றும் பலர் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். குருகுல வாசத்தில் மாணவர்கள் ஆசிரிய ருடன் இருந்து வந்ததுபோல் தற்கால மாணவரும் ஒழுக 'ஹாஸ்டல்' வாழ்க்கையை வற்புறுத்துவோர் பலராவர். ஆதிகால மாணவர்கள், தங்கள் புத்தியை மட்டுமன்றி கை யையும் கண்ணையும் பயன்படுத்தி வந்ததுபோல் இக்கால மாணவர்களும் நடக்கவேண்டி அவர்களுக்குப் பள்ளிகளில் தொழிற் கல்விப் பயிற்சி வேண்டுமென்று ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அக்கால மாணவர்களுக்கு இருந்தது போல உடற்பயிற்சிக்கு வேண்டிய வசதிகளை இக்கால மாணவர்களும் பெறப் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன.

I. வினாக்கள்

1. குருகுலமாணவர்களுக்குக் காரிய நிர்வாக சக்தி எதனால் உண்டாயிற்று?
2. முன்காலக் கல்வி முறைப்படி நடக்கிறோம் என்பதற்கு அறிகுறியாக நம் சடங்குகளில காணப்படுபவை எவை?
3. பழங்காலக் கல்வி முறையை ஒட்டி இக்காலத்தில் என்ன செய்யப்படுகின்றன?
4. குருகுலங்களின் வீழ்ச்சிக்குக் காரணங்கள் எவை?
5. எதிர்ப்பதம் தருக: இழிவு, குறைவு, இயற்கை, ஆதரவு.

II. கட்டுரை யாக்கம்

தேசசஞ்சாரம் என்பதைப் பற்றி 15 வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக. [அவசியம் - தற்கால வசதிகள் - நன்மைகள்.]

III. இலக்கணம்

1. கீழுள்ள தொழிற் பெயர்களில் விகுதி பெற்றவை எவை? பெறுதவை எவை?

கூறல், கல்வி, பழக்கம், குத்து, வந்தனம், வெறுப்பு, ஈடு, குறை, காட்சி, கேடு, பயிற்சி.

2. பகைவர் அர்ஜுனனுக்கு இளைத்தார். இங்கே 'இளைத்தார்' என்பது வினைமுற்று. இந்த முற்று பெயராக வருவதுண்டு. (உ-ம்) 'இளைத்தார் எல்லாம் ஓடிவிட்டனர்'—வினைமுற்று பெயர்ச்சொல்லாக வந்தபோது அப்பெயர் வினையாலணையும் பெயர் எனப்படும். இளைத்தார் என்பது இளைத்தவர் என்றும் வரும்.

'அவர்கள் அறிவுப் பயிற்சி' என்று தொடங்கும் பந்தியிலுள்ள வினையாலணையும் பெயர்களைக் கூறுக.

IV. வாக்கிய அமைப்பு

'வீட்டை நினைந்து அவர்கள் துன்புறவில்லை' இதில் நினைந்து என்பதை நினைப்பு என்று மாற்றி, 'வீட்டின் நினைப்பு அவர்களைத் துன்புறுத்தவில்லை' என்றும் மாற்றலாம்.

கீழ்வரும் தொடர்களை அவற்றுக்கு நேரே தரப்பட்ட சொல் வரும்படி மாற்றி யெழுதுக.

i கூடி வாழ்ந்ததால் மேன்மை யுற்றனர்கள் (கூட்டுறவு)

ii. நாடு சிறந்திருந்ததுக்குக் காரணம் (சிறப்புக்கு)

iii. ஆதரிக்கத்தக்க சிறந்த அரசர் (ஆதரவு)

2. வீரப் பெண்மணி

தமிழ் மக்கள் படைப்புக்காலம் தொடங்கி இருந்து வருகின்றனர். அவர்களுள் பரம்பரை வீரர்கள் என்று ஒரு வகுப்பார் உண்டு. இவர்களுடைய குடி, மறக்குடி எனப்படும். இக்குடியினர் மலை தோன்றி மண் தோன் றுக் காலத்திலே வாளோடு பிறந்தவர்களாக நூல்கள் புகழ்ந்து கூறுகின்றன. இம் மறக்குடியில் பிறந்த பெண் களும் வீரமுள்ளவர்களாக இருந்தனர். இவ் வீரப்பெண் கள் மூதின்மகளிர் எனப்படுவார்கள்.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் இத்தகைய மறக் குடியில் ஒரு பெண் திலகம் தோன்றினாள். உரோகிணி என்பது அவளுடைய பெயர். அவள் தமையன் ஒரு சேனைத் தலைவன். தமையனின் ஆதரவில் அவள் கல்வி கேள்விகளில் சிறந்தவளாக விளங்கினாள். படிப்புக்கேற்ற அடக்கமும் ஒழுக்கமும் அவளிடம் காணப்பட்டன.

உரோகிணிக்கு கணவனாக வாய்த்தவனும் ஒரு சிறந்த வீரனாவான். இவ்விருவரும் மனமொத்து இல்லறத்தை நடத்தி வந்தார்கள். அன்னைக்குரிய அன்பும், அடியாளுக் குரிய பணிவும், திருமகளுக்குரிய அழகும், புவிமகளுக்குரிய பொறுமையும், ஒரு மந்திரிக்குரிய நுட்ப புத்தியும் ஒருங்கே அவளுக்கு அமைந்திருத்தலையும், ஒப்புயர்வற்ற வீரமும் தேச பக்தியும் நிறைந்திருத்தலையும் கண்ட அவளுடைய கணவன் அவளைத் தன் கண்மணி போல் கருதி ஒழுகி வந்தான்.

அவர்கள் செய்து வந்த தெய்வ வழிபாடுகளால் அவர் களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை

என்று அறிந்ததும் தாய்கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவள் சீராட்டிப் பாராட்டி அக்குழந்தையை வளர்த்து வந்தாள்.

இச்சமயத்தில் அவர்களுடைய நாட்டின்மேல் சிலர் படையெடுத்து வந்தனர். நாட்டின் நிலைமை அபாயகரமாக விருந்தது. போர் என்றால் நாட்டில் பகைவர்களால் நடத்தப்படும் அக்கிரமங்களுக்கு அளவே இராது. ஊர்கள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்தப்படும். விளைநிலங்கள் எல்லாம் குதிரைகள் பூட்டிய தேர்களால் நாசப்படுத்தப்படும். ஊர்க்குளங்கள் முதலிய நீர் நிலைகள் யானைகளைக் கொண்டு பாழாக்கப்படும். படையெடுத்து வந்தவர்கள் முக்கியமான கோட்டைகளை இடித்துத்தள்ளி நகரங்களைத் தரைக்குச் சமமாக்கி, முன்பு மாடமாளிகைகளும்கூட கோபுரங்களுமாக இருந்த இடங்களைக் கழுதை ஏர்பூட்டி உழுவித்துத் தாங்கள் வெற்றிகொண்ட நாட்டாரை அவமானப் படுத்துவார்கள்.

தோற்றவர்களுக்கு இத்தகைய செயல்களால் வரும் நஷ்டமும் கஷ்டமும் அளவிட முடியாது. அதனால் போர் என்றதும் தேசத்துக்கு வரப்போகும் தீமைகளை எண்ணி எல்லோரும் கவலை யுற்றனர். பலர் அந்தப் போரை வென்று தம் நாட்டைக் காப்பாற்றும் பொருட்டுத் தம் முயிரைத் திரணமாக மதித்து யுத்தத்திற்குச் சித்தமாவது வழக்கம்.

உரோகிணியின் தமையன் தேசத்தின் பிரதம சேனாதிபதியாதலால். அவன் தன் தேசத்தின்மீது படையெடுத்து வந்த பகைவர்களுடைய திமிரை அடக்கும்

பொருட்டு ஒரு சேனையுடன் புறப்பட்டான். நான்கு விதப் படைகளிலும் சிறந்ததாகிய யானைப்படையுடன் இவன் சண்டை செய்தான். எதிரிகள் மிகப் பலராக இருந்தத னல் சில நேரத்தில் இவன் இறந்து பட்டான்.

தமையன் இறந்து விட்டதையும், பகைவர்களுடைய பலம் ஓங்கி வருவதையும் இம்மாது கேள்வியுற்றாள். மான முள்ளவள் ஆதலால் இவள் மனம் காட்டுத் தீப்போலக் கனன்றது. இத்தருணத்தில் இவள் நாட்டரசன் இவள் தமையன் வகித்து வந்த பதவியை வகிக்கத் தக்கவர்கள் எவரென்று தகுந்த பெரியவர்களுடன் ஆலோசனைசெய்து இவளுடைய கணவனே அந்த் இடத்திற்குத் தகுந்தவன் என்றெண்ணி அவனைத்தன் படைகளுக்குத் தலைவனாக்கி னன். அப்பொழுது இவள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே யில்லை.

இதற்குள் பகைவர்கள் இவளுடைய நாட்டிற்குள் புகுந்துவிட்டனர். அவர்கள் இவள் நாட்டில் உள்ள பசு நிரைகளை எல்லாம் கவர்ந்து சென்று விட்டார்கள். புதுத் தலைவனாக நியமிக்கப்பட்ட உரோகிணியின் கணவன் விரைந்து சென்று பகைவர்களை வழிமறித்துக் கொண்டு அவர்களைப் போருக்கு அழைத்தான். கடைசியில் இவள் கணவனே வென்றான். நிரைகள் மீட்கப்பட்டன.

இச்சமயத்தில் பகைவர்களுக்கு உதவியாக அவர்கள் நாட்டிலிருந்து புதுப்படைகள் வந்தன. வரவே அவர்கள் மறுபடியும் சண்டை செய்யத் தொடங்கினார்கள். அச் சண்டையில் இப்பெண்மணியின் கணவன், விழுப்புண் பெற்று வீர சுவர்க்க மடைந்தான்.

துக்ககரமான செய்தி உரோகிணிக்கு எட்டியது. மன மொத்த கணவன் இறந்துபோனமைக்கு இவள் வருந்த வில்லை. தான் விதவை யாகிவிட்டதற்கும், இனிமேல் தலைமயிரையும், காதணி முதலிய நகைகளையும் நீக்கிவிட்டுச் சுவையற்ற உணவை உண்டு வெறுந் தரையில் கிடந்து உறங்கவேண்டி வந்ததற்கும் கவலை கொள்ளவில்லை. பகைவர்கள் பலம் முன்னிலும் அதிகமாக ஓங்கி வருதலையும் தேசத்திற்கு அபாயம் நெருங்கிவிட்டதையும் நினைந்து நினைந்து இவள் பதறினாள். தேசபக்தியின் முதிர்ச்சியும், இயற்கை வீரமும் இவளைத் துக்கப்பட விடவில்லை. 'எப்படியும் தேசம் காப்பாற்றப்படவேண்டும்; அதற்கு வேறு வழி என்ன இருக்கிறது?' என்று நெடுநேரம் சிந்தித்துக் கொண்டேயிருந்தாள்.

அச்சமயத்தில் இவள் நாட்டரசன் 'கடைசியாக மற்றொரு முறை போர் செய்து பார்த்துவிடுவோம். என்ற தீர்மானத்துடன் போர் முரசை முழங்கினான். அந்தப்போர்ப் பறையோசை இவள் காதுகளில் விழுந்தது. உடனே இவளுக்குத் திடீரென்று ஓர் எண்ணம் உதித்தது. இவள் தன் ஒரே மகனை அருகில் அழைத்தாள். அவனுக்கு ஏறக்குறையப் பதினாறு பிராய மிருக்கலாம். அவ்வளவே. பிறகு இவள் தன் மகனுக்கு எண்ணெய் நீவித் தலைமயிரை வாரிவிட்டாள். வெள்ளிய ஆடையை உடுத்தி அழகு படுத்தினாள். ஒரு வேலாயுதத்தை அவன் கையில் கொடுத்து "அப்பனே! நாடு அபாயமான நிலையில் இருக்கிறது; இச் சமயம் நீ வீட்டில் அடங்கியிருப்பதுசரியன்று; தேசத்தைக் காப்பாற்றுவது உன் கடமை; சென்றுவா" என்றாள்.

அருகில் பார்த்திருந்த பெண்கள் எல்லாம் "இப்படியும் உண்டோ? ஒரே ஒரு குழந்தை; அவனும் சின்னஞ் சிறு பாலன். அவனை இவள் போருக்கு அனுப்புவாளோ? வீராதி வீரர்களாகிய இவளுடைய தமையனும் கணவனும் போரில் கொல்லப்பட்டமையை எண்ணியாவது இவள் பகைவர்களுடைய பலத்துக்கு அஞ்சவேண்டாமோ?" என்று இவளது செயலை நிந்தித்துப் பேசினார்கள். அந்த நிந்தனை மொழிகளில் ஒன்றையும் இவள் கவனிக்கவில்லை. நாட்டின் நிலைமையை நினைக்கும் போது தன் வீட்டிற்கு வந்த, வரக்கூடிய தீமை மிகவும் சிறிதே என்பது இவளுடைய கருத்து. நாட்டின் பொருட்டு இவள் செய்த தியாகத்தை என்னென்றியம்புவது!

I. வினாக்கள்

1. மறக் குடியைப் பற்றி நூல்கள் கூறுவது யாது?
2. பண்டைக் காலப் போர் முறையை விவரிக்க.
3. உரோகிணியின் வீரம் எதனால் விளங்குகிறது?
4. வாக்கியம் அமைக்க: சீராட்டிப் பாராட்டி, அபாயகரம், காட்டுத் தீப்போல், ஒப்புயர்வு, கனன்றது.

II. கட்டுரை யாக்கம்

உரோகிணியின் வரலாற்றை அவளே கூறுவது போல் ஒரு பக்கத்தில் எழுதுக.

III. இலக்கணம்

ஒரு சொல் கு, சு, டு, து, பு, று க்களில் ஒன்றால் முடிந்திருந்தால் அந்த எழுத்தின்மேல் உள்ள உகரம் குற்றியலுகரம் எனப்படும் என்று இலக்கண நூல்கள் கூறும். இரண்டெழுத்துச்

சொல்லாயின் முதல் எழுத்து நெட்டெழுத்தாகவே இருக்க வேண்டும். குற்றெழுத்தாக இருத்தல் கூடாது. குற்றியலுகர மல்லாத உகரம் முற்றிய லுகரமாம்.

கீழே ஒரு வரிசையில் குற்றிய லுகரங்களும், மற்றொரு வரிசையில் முற்றிய லுகரமும் தரப்படுகின்றன. ஏன் குற்றிய லுகரம், ஏன் குற்றிய லுகரமல்ல என்று காரணங் கூறுக.

குற்றிய லுகரம்	முற்றிய லுகரம்
மாசு	ஒரு
அன்பு	பணிவு
அழகு	ஏழு
ஒப்பு	அது
அஃது	கடு

IV. வாக்கிய அமைப்பு

'அவன் பசுநிறைகளை மீட்டான்' எழுவாய்க்கு மூன்றும் வேற்றுமை கொடுத்து அவனால் என்று மாற்றி, நிரைகளை என்ற செயப்படு பொருளை எழுவாயாக்குக. இப்படி வாக்கியம் மாறும் போது பயனிலையும் மாறவேண்டும். 'மீட்டான்' என்ற பயனிலை 'மீட்கப்பட்டன' என்று மாறும் அல்லவா? மாற்றப்பட்ட வாக்கியம் 'பசு நிரைகள் அவனால் மீட்கப்பட்டன' என்பதாகும். முன் வாக்கியம் செய்வினை வாக்கியம்; பின்னது செயப்பாட்டு வினை வாக்கியம். செயப்பாட்டு வினையாக மாற்றும் போது செய்வினை வாக்கியத்தின் எழுவாய் என்னவாக மாறும்? செயப்படு பொருள் என்னவாக மாறும்? பயனிலையோடு 'படு' என்ற உறுப்பைச் சேர்த்தல் அவசியம்.

3. மண்ணை வளப்படுத்தல்

வளப்படுத்துதலின் அவசியம்: நிலமே தோட்டக்காரரின் நிதி. ஒருவர் தம் நிதியிலிருந்து சிறிதுசிறிதாகச் செலவு செய்து வருவதாகக் கொள்வோம். சில நாளில் அந்த நிதியில் ஒன்றுமில்லாமற் போய்விடும். சாகுபடியாகும் ஒவ்வொரு தடவையும் நிலத்திலுள்ள பூசாரம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தாவரங்களால் எடுத்துக் கொள்ளப்பட்டுக் குறைந்து போகின்றது. அப்பொழுது அப்பொழுது நாம் அக்குறைவை நிரப்ப எருக்களை இடாமற் போனல் நாளடைவில் நிலம் பூசாரம் அற்றுப்போய் வேளாண்மைக்கு உதவாததாகிவிடும். இந்த எருவிடுதலையே நிலத்தை வளப்படுத்தல் என்கிறோம்.

"உரம் உதவுவது ஊரார் உதவமாட்டார்", "எருமண மில்லாத பயிரும், நறுமணமில்லாத பூவும்", "குப்பையில்லா வெள்ளாமை சப்பை", "உரம் ஏற்றி யுழவு செய்" என்னும் பழமொழிகள் எருவிடுதலின் அவசியத்தைக் காட்டுகின்றன. எரு, எருது, எருமை, ஏர், ஏரி இவை ஒன்றுக் கொன்று தொடர்புடைய சொற்களாகும்.

ஒரு நிலத்துக்கு எருவிடுதலோடு, ஓய்வு கொடுப்பதனுலும் அந்நிலம் தன் வளப்பத்தை விரைவில் இழப்பதில்லை என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். ஓய்வாவது சில மாதங்கள் நிலத்தைப் பயிரிடாமல் தரிசாக வைத்திருத்தலாம். நம்மவர்கள் இந்த ஓய்வை அனுசரித்து வருதலுண்டு.

மாற்றுப் பயிர்முறை: ஒரு நிலத்தில் தலைமுறை தலைமுறையாக ஒரே பயிரை அடுத்தடுத்து விளைவிக்கும் வழக்கம் நம் நாட்டில் இருந்து வருகிறது. இதனால் பூசாரம் அதிகமாய்க் கெட்டுப்போய் விளைவின் விகிதம் மிகவும் குறைந்துவிட்டது. சில தாவரங்கள் சில வகையான சத்துக்களையே பூமியிலிருந்து கொள்கின்றன. மற்றவற்றை எடுத்துக்கொள்ளாமல் அப்படியே விட்டு வைக்கின்றன. அவை உட்கொள்ளும் சத்துக்களை நிரப்பாமல், பின்னும் பின்னும் அத்தகைய தாவரங்களையே ஒரு நிலத்தில் பயிர் செய்வதனால் விளைவு மட்டாகிக் குடியானவன் நஷ்டமடைகிறான். நிலத்திலுள்ள வேறு சத்துக்கள் செலவாவதற்கும் வழியில்லாமற் போகிறது. இக்காரணங்களால் நிலத்திற் சாகுபடி செய்யும் பயிர் வகைகள் அடிக்கடி மாற்றப் படல் வேண்டும். இம் முறையே மாற்றுப்பயிர் முறை எனப்படும்.

மாற்றுப் பயிர்முறையின் நன்மைகள்: (1) ஒரு விதமான பயிரை விளைக்க ஒரு வகை முறையைக் கையாளல் அவசியம். பலவேறு பயிர் வகைகளுக்குப் பல வேறு முறைகளைக் கைக்கொள்ளுகிறோம். ஒரு பயிரால் நிலத்துக்கு ஏற்பட்ட குறை மற்றொரு பயிரால் நிறைவுறுகிறது. (2) ஒரு விதமான பூசாரம் மட்டும் செலவழிவதில்லை. நிலத்தின் பூசாரக் கூறுகள் சமநிலையில் இருக்கின்றன. (3) ஒரு பயிர் முடிவில் நிலம் மற்றொரு பயிருக்குத் தயாராகவேண்டி யிருப்பதால் நிலத்தின் சீர்மையில் நமக்குக் கருத்து ஏற்படுகிறது. (4) ஒரு பயிர் அறுவடையானதும் அப்பயிரின் வேர் தழை முதலியவை அந்நிலத்துக்கு எருவாகப் பயன்படுகின்றன. (5) ஒரு வகைப் பயிருக்குரிய

பூச்சிகள் மற்றொருவகைப் பயிரை நாடுவதில்லை. ஆதலால் பூச்சிகள் விழுந்த பயிர் மாற்றப்பட்டதும் வசிக்க இடம் பெருமல் அப்பூச்சிகள் மாண்டு போகின்றன. (6) சிறிது காலமாவது நிலம் தரிசாக இருந்து களைப் பயிர்கள் தோன்றுவதற்கு அவகாசம் ஏற்படுவதில்லை. (7) உடலுழைப்பு மட்டாகிறது. இக்காரணங்களால் மாற்றுப் பயிர்முறை அறிஞர்களால் வற்புறுத்தப்படுகிறது.

பசுந்தழை உரப் பயிர்கள்: முக்கியமான விளைச்சல் முடிந்தவுடன் நிலத்தை உழுது எருவாகப் பயன்படுவதற்கென்று நிலத்திற் சாகுபடி செய்யும் பயிர்களை நாம் **பசுந்தழை உரப்பயிர்கள்** என்கிறோம்.

சில நாளில் வளரக்கூடியவையும், அடர்த்தியாக வளரக்கூடியவையுமே உரப்பயிர்களாக உபயோகிக்கத் தக்கவையாம். "நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்", "அடர விதைத்து அழிய உழு" என்பவற்றை நோக்குக. நம் நாட்டில் கொழுஞ்சி, கொள்ளு, ஆவாரை, மொச்சை, தட்டை, எள்ளு முதலியன பசுந்தாளுரத்தின் பொருட்டுப் பயிர் செய்யப்படுகின்றன.

"கல்லைப் பிளக்கக் காணத்தை (கொள்ளு) விதை", "களர் உழுது கடலை விதை", "கொள்ளு வெள்ளாமை கொள்ளை வெள்ளாமை", "கொழுஞ்சி மிதித்தால் களஞ்சியம் நிறையும்", நன்னிலம் கரந்தை நடுநிலம் கொளிஞ்சி", கொண்ட பெண்ஜாதியை விட்டாலும் கொள் கடைகாலை விடக்கூடாது", "கடலை விதைத்தால் கடுத்த உரம்" என்பன நம் முன்னோர்கள் உரப்பயிர்க

ளாகப் போற்றி வந்தவை இவை இவை என்பதைக் காட்டுகின்றன.

உரப்பயிர்களின் பயன் :- மேலே குறித்த பயிர்களில் ஏற்ற ஒன்றை வளர்த்து, மண் ஈரமாக இருக்கும் காலத்தில் அதை மடக்கி உழுதால் சில நாளில் அது நிலத்தில் மக்கி மடிந்து நல்ல எருவாகும். (2) உரப்பயிர் நிலத்தின் மேல் இருக்கும் வரையில் மேல் மண்ணை மழை ஜலம் அடித்துக்கொண்டு போக வழியில்லை. (3) இப்பயிர்களின் வேர்கள் மண் கட்டியாகப் போகாதவாறு நல்ல நிலையில் வைத்துக் கொள்ளுகின்றன. (4) வெயிற் காலத்தில் இவை பூமியின் ஈரத்தைப் பாதுகாக்கின்றன. (5) நிலத்தை இந்தப் பயிர்கள் இடமாகப் பெற்றிருக்கும் வரையில் களைப்பயிர்கள் தோன்றுவது அரிதாகிறது. (6) அதன் காரணமாகக் களைபறித்தலாகிய சிரமம் குடியானவர்களுக்கு மட்டுப் படுகிறது.

உரப்பயிர்களை நிலத்திற் சாகுபடி செய்வதற்குப் பதிலாக, அவற்றையும் அவைபோன்ற பிற தழைகளையும் கொணர்ந்து குழியில் போட்டு மக்கச் செய்து எருவாக இடுகிறார்கள். இந்த வகையில் சப்பாத்தியின் மக்கு ஏற்ற உரமாகும். இது மக்கி மடிய சுமார் ஒரு வருட காலமாம்.

தொழு எருக்கள் : பசு, எருது, எருமை, ஆடு, குதிரை, பன்றி இவற்றின் கழிவுகள் தொழு எருக்கள் எனப்படும். (ஆயினும் நாம் முக்கியமாக மாடு, எருமை ஆடு இவற்றின் கழிவுகளையே தொழு எரு என்கிறோம்.)

பிராணிகளின் வயதும், அவை உண்ணும் உணவும், செய்யும் வேலையும், நமக்கவை உதவும் பாலினளவும்

பொருத்து எருவின் தராதரத்தைக் கணக்கிடல்வேண்டும். கிழமானவையும் இளங் கன்றுகளும் தரும் எருவைவிட நடுத்தரமானவை தரும் எரு சிறந்ததாகும். பிண்ணுக்கு பருத்திக்கொட்டை, கொள்ளு, பசும்புல் முதலியவற்றைத் தின்பனவற்றின் சாணம் சிறந்த எருவாகும். அதிகமாக வேலையில்லாதவையும் மிதமாகப் பால் கொடுப்பவையும் தரும் எரு நல்ல சத்துள்ளதாகும்.

எருக் குவியல் மழையில் நனையும்படிக் கிடந்தால் சத்துப்பொருள்கள் மழைநீரால் கரைந்துகொண்டு போகப் பட்டு எரு சத்தற்றதாகி விடும். அதனால் எருக்குழியின் மேல் பந்தல் போட்டு வைப்பதுடன் மழைநீர் உள்நுழை யாதவாறு சுற்றிலும் கரை யமைக்கவேண்டும்.

புதிதாக எடுத்த தொழுவெரு செடிகளுக்கு உதவாது. அது குவியலில் மக்கி அதிலுள்ள வேதிப்பொருள்கள் (ரசாயனப் பொருள்கள்) ஒன்ருகக் கலந்து விடுதல் அவ சியமாகும்.

தொழுவங்களில் இரண்டு அல்லது மூன்று அங்குல மண்ணைப் போட்டு வைத்தல் வேண்டும். பிராணிகளின் நீர் இந்த மண்ணில் ஊறிஞல் மண் நல்ல உரமாகும். 15 நாளுக்கொரு முறை இந்த மண்ணை வாரி எருக்குழியில் கொட்டிவிடல்வேண்டும். தொழு வெருவைச் சேமிக்கை யில் இந்த மண்ணையும்; கால்நடைகள் கழித்தெறிந்த புல்லையும் சாணத்துடன் குழியில் சேர்க்க வேண்டுவது அவசியம்.

களி சம்பந்தமான கடு நிலங்களுக்கு குதிரை உரத் தைப் போடுவது மிகச் சிறந்ததாகும். ஆட்டுப் பிழுக்கை

யையும் கலந்து உபயோகிப்பதால் மண்ணின் வாசி சற்று நல்லதாகிறது.

மணற் கலப்பதிகமான வறட்சியுள்ள இளக்க மண் நிலங்களுக்கு மாட்டுச் சாணமும், பன்றியின் மலமும் அவசியம். இவற்றைத் தனியாகவும், கலந்தும் இடுதல் நலம்.

பசுந்தாள் உரம், தொழு எரு, இவற்றைத்தவிர வேறு சில இயற்கை உரங்களும் உண்டு. அவை பறவைகளின் எரு, பிண்ணாக்கு, எலும்புகள், மீன் உரம், பிராணிகளின் கொம்பு, குளம்பு, மரச் சாம்பல், கடற்பூண்டுகள், புதைக் கரி, கொல்லேக் குப்பை போன்றவையாகும். இவையும் சிறந்த எருக்களே.

செயற்கை எருக்கள், உப்பு வகைகளைச் சேர்ந்தவை. அவை ரசாயன எருக்கள் எனப்படும். இவ் வெருக்களை உபயோகிப்போருக்கு விவசாயத்திலும், தோட்டப்பயிற்சி யிலும் சிறந்த அனுபவம் இருத்தல் வேண்டும். சாதாரண ஜனங்கள் நிலத்தின் தேவைகளை யறிந்து இவற்றை உப யோகித்தல் எளிதன்று.

நிலமே குடியானவருடைய நிதியாகுமாதலால், அந் நிதி என்றும் குறையாமலிருக்கும் விஷயத்தில் கவனம் கொண்டு அவர்கள் மேற்கூறிய முறைகளைக் கையாண்டு மண்ணின் வாசியை உயர்த்த முற்படுதல் அவசியமாகும்.

I. வினாக்கள்

1. மண்ணை ஏன் வளப்படுத்த வேண்டும்?

2. எரு விடுதலின் அவசியத்தைப் புலப்படுத்தும் சில பழமொழிகளைக் கூறுக.

3. மாற்றுப் பயிர் முறையாவது யாது? அது ஏன் இன்றியமையாததாகும்?

4. தொழு வெரு சேகரிக்கும் முறை யாது?

5. வாக்கியம் அமைக்க: தராதரம், வரையறை.

II. கட்டுரை யாக்கம்

'நிலத்தைப் பண்படுத்தல்' என்பதைப்பற்றிக் கீழ்வரும் தலைப்புக்களில் ஒரு கட்டுரை வரைக.

[அவசியம்—முறைகள்: (i) தரிசுபோட்டு ஒய்வு தருதல், (ii) மாற்றுப் பயிர்முறை, (iii) உரமிடுதல், தரை உரம், தொழு வெரு, செயற்கை யுரம்.]

III. இலக்கணம்

படுத்து, ஒன்று, சால்பு, அஃது—இந்தக் குற்றுகரச் சொற்களின் ஈற்றுக்கு அயலெழுத்து என்னவென்று சொல்லுங்கள். முதலதில் வல்லினமெய்; இரண்டாவதில் மெல்லினமெய்; மூன்றாவதில் இடையினமெய்; நான்காவதில் ஆய்தம். குற்றியலுகரத்தின் ஈற்றுக் கயலெழுத்து என்னவோ, அப்பெயரால் அக்குற்றிய லுகரத்தை வழங்கவேண்டும். மேலே காட்டப் பெற்றவை முறையே வன்தொடர்க் குற்றியலுகரம், மென்தொடர்க் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம், ஆய்தத் தொடர்க் குற்றியலுகர மாகும்.

ஈரெழுத்து மொழிகளாகிய குற்றுகரங்கள் நெடில்தொடர்க் குற்றுகரமாம். ஈற்றுக் கயலெழுத்து உயிர்மெய்யாக இருக்கும் குற்றியலுகரம் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

IV. வாக்கிய அமைப்பு

கீழ் வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக:

1. தாவரங்கள் பூசாரத்தை நிலத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றன.

2. நீ உரம் ஏற்றி உழவு செய். (செய்யப்படட்டும்.)

3. என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள்.

4. சில தாவரங்கள் சிலவகையான சத்துக்களையே பூமியிலிருந்து கொள்கின்றன.

5. இதனால் சாகுபடி செய்யும் பயிர்களை நாம் அடிக்கடி மாற்றவேண்டும்.

6. இம்முறையை மாற்றுப் பயிர்முறை என்கிறோம்.



4. மூன்று வலைஞர்கள்

இடி முழங்கிட வானம் இருண்டிட
இரவி சாய்ந்திடும் வேளையி லேசிறு

படவொன் றேறிப் பரதவர் மூன்றுபேர்
பரவை மீது படர்கின்றார், ஐயகோ!

இடர டுத்தவர் இல்லக் கிழத்தியர்
இருந்து நீள்கரை யிற்கை பிசைகின்றார்;

வடுவி லாத சிறுவரும் வாடினர்; [கேன்!
வயிற்றுப் பாட்டின் கொடுமையை என்சொல்

அழுது நோவ தரிவையார் செய்கையால்;
அமுது தேடுதல் ஆடவர்க் கேகடன்;
முழுதும் ஓங்கி அலைகள் குமுறின;
முழங்கு காற்றும் மழையுங் கலந்தன.

பழுது வந்திடு மோ என்றப் பாவையர்
பயந்து சென்று கலங்கரை தீபத்தைத்
தொழுது தூய்மைப் படுத்தி விளக்கினர்;
தொழும்பு வேறென்ன மெல்லியர் செய்வரால்!

கடலும் ஓய்ந்தது; காரிருள் தேய்ந்தது;
கதிர வன்கிழக் கேமெல்லத் தோன்றினன்;
உடல்கள் மூன்று கரையிற் கிடந்தன;
உழைப்பி லேஉயிர் மாய்ந்தஅம் மூவரோ

தடையி லாத பெருந்துயில் கொண்டனர்;
சார்ந்த பெண்கள் மதலைக் குழந்தைகள்
அடைவ தெக்கதி 'அன்றுடங் காய்ச்சிகள்'
அழுவ தன்றிஓர் உய்வுமுண் டாங்கொலோ.

—ச. கு. க.

அரும்பதவுரை

1. படவு - படகு. பரதவர் - வலைஞர். பரவை - கடல்; (பரந்திருப்பது.) இடர் அடுத்து - துன்பமுற்று. வடு - குற்றம்.

2. நோவது-வருந்துவது. அரிவையர்-பெண்கள். அமுது - உணவு. குமுறின - சப்தித்தன. தொழுதது தம் கணவர்க்கு

நன்கு வழிகாட்டும்படியாக. தொழும்பு - தொண்டு; வேலை. மெல்லியர் - பலமற்றவர் ; பெண்கள் என்றபடி.

3. சார்ந்த - அவர்களை அண்டின. அன்றாடங் காய்ச்சி - அற்றைக் கூலி கொண்டுவந்து அதற்கு உணவுப்பொருள் வாங்கிச் சமைத்துச் சாப்பிடும் பரம ஏழைகள். உய்வு - பிழைப்பு.

---

5. குலிஸ்தான்—பூஞ்சோலை

குலிஸ்தான் என்பது ரோஜாத் தோட்டம் என்ற பொருள் உடையது. ரோஜாத் தோட்டம் என்பது வெறும் கற்பனைப் பெயரல்ல. இதனை இயற்றியவர் ஸாதி என்ற பாரஸீகத்தறிஞராவர்.

ஸாதியின் ஆசிரமத்தைச் சுற்றி ஓரழகிய தோட்டமிருந்தது. அதில் பல அருமையான ரோஜாக்களையும், பல்வேறு புஷ்பச் செடிகளையும் வைத்து வளர்த்திருந்தார். உலகில் சுற்றித் திரிந்து படவேண்டிய கஷ்டங்கள் அனைத்தும் பட்டழிந்து, கடைசியில் நிம்மதியாகத் தம் காலத்தைக் கழிக்கவேண்டி அவ்வாசிரமத்தை அவர் ஏற்படுத்தினர். தம் நூற்றெட்டாவது வயதில் இறக்கும் வரையில், யோக சிந்தனையிலாழ்ந்து அங்கேயே தம் காலத்தைக் கழித்தார்.

உலக சஞ்சாரங்களில் தாம் கண்டதையும், கேட்டதையும், அவைகளைப்பற்றித் தம் சிந்தனைகளையும் கோத்துத் தம் கடைசி வருஷங்களில் ஸாதி எழுதிக்கொண்டிருந்தார். கதா ரூபமாகவும், பாட்டாகவும்,

பழமொழி யாகவும் தம் சிந்தனைகளை வெளியிட்டார். அப்புத்தகமே 'குலிஸ்தான்'

ஸாதியின் சிநேகிதன் ஒருவன் ஒரு நாள் அவரை ஆசிரமத்தில் வந்து பார்த்தான். ஆசிரமத்தைச் சுற்றி யிருந்த தோட்டத்தைக் கண்டு வியந்து, ரோஜாக்களையும் இன்னம் பல பூக்களையும் கொய்து எடுத்துக்கொண்டு, அவன் கிளம்பும்போது அவனிடம் ஸாதி தம் புத்தகத்தைப் பற்றிச் சொன்னார்.

"இப் புஷ்பங்களை மிகவும் மனோரம்மியமாயிருக்கின்றனவென்று நீ ஒரு கூடை எடுத்துச் செல்கிறாய்; ஆனால் என்னுடைய குலிஸ்தானில் உள்ள புஷ்பங்களின் மணம் ஆயிரம் வருஷங்களானாலும் மாறாது. முன்னது இரண்டே நாட்களில் வாடிவிடும். குலிஸ்தானின் இலைகள்கூட எக்காலத்திலும் வாடா!" என்றார்.

இவ்வாடா மலர்கள் இன்னும் நமது மனத்தைக் கவர்கின்றன. வாசனை குறையவில்லை; அழகும் அழியவில்லை. உலக வழக்கத்துக்குத் தக்கபடி யார் யார் எச்சமயங்களில் எப்படி நடக்கவேண்டுமென்று சொல்லிய மஹான்களில் ஸாதியைப்போல் வேறு ஒருவருமில்லை.

1

மரண தண்டனை விதிக்கப்பட்ட அந்நிய தேசத்தவன் ஒருவன் மஹாராஜாவின் முன் கொண்டு வரப்பட்டான்

உயிர்க்கே உலையானால், பூனையும் நாயின் மேல் பாயும். சாகப் போகிறவன் தன் மனத்திலுள்ளதை மறைக்காமல் உலகறிய உரத்துக் கூறலாம். அதுபோல் கைதியும் அரசனை அந்நிய பாஷையில் வாயில் வந்தபடி யெல்லாம் திட்டலானான்.

அரசனுக்கு அப்பாஷை தெரியாது. ஆனால் அங்கிருந்த மந்திரிகளில் இருவருக்குத் தெரியும்.

"கைதி என்ன சொல்லுகிறான்?" என்று அரசன் கேட்க, ஒரு மந்திரி சொல்வான் :

"தன் குற்றத்தை மன்னிக்கும்படி கேட்கிறான். குற்றத்தை மன்னிப்பதே புண்ய வழி."

இதைக் கேட்ட அரசன் கைதியை மன்னித்து விடுதலை யளித்தான். ஆனால் அங்கிருந்த இரண்டாம் மந்திரிக்கு இது பொறுக்கவில்லை. ஏனெனின் அவனுக்கும், முதல் மந்திரிக்கும் எப்பொழுதும் சண்டை; ஆகவே அவன் சொன்னான் :

"அரசர்களிடம் பொய் சொல்வது தகாது. அந்த மந்திரி சொல்லியது பொய். அந்தக் கைதி நிஜமாகத் தங்களை வைதான்."

அரசனுக்குக் கோபம் வந்தது. "எனக்கு அவன் சொல்லிய பொய் நீ சொல்லிய நிஜத்தைவிடத் திருப்தியாயிருந்தது. அந்தப் பொய் நல்ல குணத்தால் உதித்தது. உன் நிஜம் பொறாமையால் வந்தது. நன்மை பயக்கும் பொய் கேடு விளைக்கும் மெய்யைவிட எவ்வளவோ மேல்" என்று சொன்னான்.

2

நூஷிரோவனுடைய நண்பன் ஒருவன் ஒரு நாள் அவனிடம் வந்து, “கடவுள் உனக்கு நன்மை புரிந்து விட்டார். உன்னை நெடுநாளாகப் பகைத்திருந்த உன் விரோதி இறந்து விட்டான்” என்றான்.

நூஷிரோவன், “கடவுள் இந்த நிமிஷமே என் உயிரையும் கொள்ளை கொண்டுபோகமாட்டார் என்பது என்ன நிச்சயம்? அவன் இறந்ததில் நான் சந்தோஷப்படக் காரணமேது? நான் சாசுவதமாக இங்கேயே இருக்கப் போகிறேனா? கடவுள் என் நன்மையைக் கோரியிருந்தால், என் பகைவனை என் ஆருயிர் நண்பனாகவன்றோ செய்திருப்பார்!” என்றான்.

3

“என் சிநேகிதர்களில் ஒருவராவது என்னை ஒரு நிமிஷமாவது நிம்மதியாக இருக்க விடுவது கிடையாது. நிஷ்காரணமாய் எப்பொழுதும் வந்து ஏதாவது பேச்சுக்கொடுத்துத் தொந்தரவு செய்கிறார்கள். என்ன செய்வது?” என்று நான் என் நண்பர்களில் ஒருவனைக் கேட்டேன்.

“ஏழையா யிருப்பவனுக்கு ஒன்றிரண்டு கடன் கொடு; பணமுடையவனைப் பத்துப்பதினைந்து கடன் கேள். அதற்கப்புறம் ஒருவரும் உன்னை யணுகித் தொந்தரவு செய்ய மாட்டார்கள்!”

“உன்னைப்போ லிருப்பவர்களை?”

“என்போன்றவர்களுக்கு நீ முதலில் சொல்லிய அந்த ஒரு வாக்கியமே போதும்!”

4

எவ்வளவு துயருற்றாலும், நான் என் துரதிருஷ்டத்தை நொந்து கொண்டதே கிடையாது. கிடைத்தது போதுமென்றிருப்பதுதான் என் வழக்கம். ஒரு சமயம் ஊர் ஊராய்த் திரிந்துவிட்டுக் காலில் செருப்பில்லாமல், பாதங்கள் புண்ணாக, ஒரு நகரை யடைந்தேன். செருப்புவாங்கக் கூடக் கையில் காசில்லாது போனதைக் குறித்து, மனம் நொந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது என் எதிரில் இரண்டு காலுமில்லாத முடவன் தோன்றினான். நான் உடனே, "கடவுள் நமக்குச் செருப்பில்லாமல் செய்தாரே யொழிய, அதை மாட்டக் காலுமில்லாது செய்து விடவில்லை" என்று எண்ணி என் வருத்தத்தினின்றும் தேறிச் சந்தோஷப்பட்டேன்.

I. வினாக்கள்

1. குலிஸ்தான் என்பதன் பொருள் யாது?
2. இதன் அமைப்பும் வரலாறும் யாவை?
3. மற்ற மலர்களுக்கும் குலிஸ்தான் மலர்களுக்கு முள்ள வேறுபாடுகள் எவை?
4. உண்மை கூறிய மந்திரியை அரசன் கண்டித்தது ஏன்?
5. நீயூஷிரோவன் தன் பகைவன் இறந்தமைக்கு ஏன் மகிழவில்லை?
6. மனத்திருப்தியை எதைக்கொண்டு அடைதல் வேண்டும்?
7. 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' இது எக்கதைக்கு மேற்கோள்?

II. இலக்கணம்

1. தன்மை, முன்னிலை, படர்க்கை வினைகளைத் தனித் தனியே எடுத்துக் காட்டுக :

வளர்த்திருந்தான், வெளியிட்டார், செல்கிறாய், கவர்கின் றன, இருக்கப் போகிறேன், செய்யமாட்டார்கள், கேட்டேன்.

2. கீழ்வருவனவற்றுள் உடன்பாடு எது? எதிர்மறை எது? வெளியிட்டார், வாடா, மாறாது, கூறலாம், திட்டலானான், தகாது, போகார்.

III. வாக்கிய அமைப்பு

கீழ்வாக்கியங்களை எதிர்மறையாக மாற்றுக :

1. ஸாதி தம் சிந்தனைகளை வெளியிட்டார். (இட்டிலர்)
2. நீ ஒரு கூடை எடுத்துச் செல்கிறாய். (செல்கின்றிலை)
3. இவை நமது மனத்தைக் கவரும். (பன்மைமுற்று)
4. இது நமது மனத்தைக் கவரும். (ஒருமை முற்று)
5. ஒரு மந்திரி சொல்லுவான்.

6. டாடாவும் இந்தியாவும்

[ஜாம்ஷெட்ஜி நஸர்வாஞ்சி டாடா என்பவர் பரோடா சமஸ்தானத்தைச் சார்ந்த நவ்ஸாரி என்னும் கிராமத்தில் பிறந்த ஒரு பார்ஸி வியாபாரியாவர். சென்ற நூற்றாண்டில் இருந்தவர். வியாபாரத்தின்மேல் உலகத்திலுள்ள முக்கியமான இடங்களுக்கெல்லாம் சென்று வந்து, தம் சொந்த அனுபவத்தால் இயந்திரத் தொழிலை இந்தியாவிற் புகுத்தி, ஏராளமாகப் பொருள் சேர்த்தவர். ஜாம்ஷெட்பூரில் நிர்மாணிக்கப்பட்ட இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகளும், பம்பாய் மாகாணத்திலுள்ள சில பஞ்சாலைகளும், பம்பாயிலுள்ள தாஜ்மஹால் ஹோட்டலும், பங்களூரிலுள்ள விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகமும் டாடா ஆகாயப் போக்குவரத்தும் அவர் புகழை விளக்கிக் கொண்டிருக்கும் அமைப்புக்களாகும். இயந்திரக் கைத்தொழிலில் இந்தியாவில் முதன் முதல் இறங்கி வெற்றி பெற்றவர் இவரே யாதல்பற்றி இவரை இந்தியக் கைத்தொழிற் பிதா என்பர்.]

டாடாவைச் சரிவர மதிப்பிட வேண்டுமாயின் அவர் என்ன செய்தார் என்பதுடன், ஏன் அவைகளைச் செய்தார் என்பதையும் கவனிக்கவேண்டும். அப்படிப் பார்ப்போமாயின் அவரது வாழ்வு இந்திய நாட்டின் ஊழியத்துக்காகவே அர்ப்பணம் செய்யப்பட்டதாகும் என்பது தெளிவாகத் தெரியும்.

டாடா பணம் சேர்ப்பதையே தமது நோக்கமாகக் கொள்ளவில்லை; ஒரு சாதனமாகமட்டும் கருதினர். பணத்தைக் குறியாகக் கொண்ட பலர் மட்டத்தரமான பருத்தியைக் கொண்டு, பெரும்பாலோரால் கொள்ளப்படும்

மோட்டா துணியை உற்பத்தி செய்து வருகையில், டாடா மட்டும் இந்தியாவின் பெயர் நிலவும் வகையில் உயர்தரப் பருத்தியைக் கொண்டு மெல்லிய துணிகளை உற்பத்தி செய்து, "இந்தியா மேல்நாடுகளுக்கு இளைத்ததன்று," என்று கூறும் வகையில் அந்நாடுகளுடன் போட்டியும் போட்டார். இவர் பணம் குவிப்பதில் கருத்துக் கொள் ளாததோடு, குவித்த செல்வத்தை எவ்விதம் நாட்டின் முன் னேற்றத்திற்கான வகையில் செலவழிக்க வேண்டும் என் பதையும் காட்டினர்.

நாட்டின் நிரந்தர நலனைப் பகுத்தறியக் கூடிய வன்மை இல்லாமல், வெறும் தர்ம எண்ணம் மாத்திரம் டாடாவிடம் இருந்திருக்குமேயானல், இவருக்கு முன் பல தனவான்கள் செய்ததைப்போல் இவரும், நாலைந்து

அன்ன சத்திரங்களுக்கும், கோயில், குளங்களில் கூட்டமாக இருக்கும் சோம்பேறிகளுக்கும், தமது செல்வத்தை விரயம் செய்து போயிருப்பார். ஆனல், இவரோ புதிய அறிவியல் துறையில் அதிகம் படிக்கப் பொருள் இன்றி ஏழையாய் இருந்த அநேகரை ஆதரித்து வந்தார். அதற்காக 1892-ஆம் ஆண்டில் ஒரு திட்டம் ஏற்படுத்தி அதன் படி ஆண்டுதோறும் சில இந்திய இளைஞர்களை (ஐ.சி.எஸ். போன்ற உயர்தர நிர்வாகப் பதவி பெறுவதற்கும், வைத்தியம், பொறியியல் முதலிய துறைகளில் உயர்தரக் கல்வி பெறுவதற்கும்) இங்கிலாந்து முதலிய மேனடுகளுக்கு அனுப்பிவந்தார். அவர்கள் தங்கள் படிப்பு முடிந்து சம்பாதிக்கையில் அத்திட்டத்தில் தாங்கள் பெற்ற பொருள் உதவியைத் திருப்பிச் சேர்ப்பித்துவிட வேண்டும். இவ்விதம் ஏற்பாடுகள் செய்ததால் அந்த நிதியும் நிரந்தரமாக இருந்ததுடன் அதிகமான இந்தியர்களும் முன்னணிக்கு வர முயல முடிந்தது. மேனட்டார் இந்தியர்களைவிட அறிவிற் சிறந்தவர்களே என்று கருதப்பட்ட காலம் அது. டாடா அக்கருத்தை அறவே வெறுத்தார். ஆகவே தான், தாம் ஏற்படுத்திய திட்டத்தின் மூலம் வெற்றி பெற்றுவந்த இளைஞர் மேனட்டாருக்கு இந்தியர் எவ்விதத்திலும் இளைத்தவர்களல்ல ரென்பது ருசுப்பிக்கப் பட்டதாகத் திருப்தி கொண்டார். தவிரவும், டாடா தம் ஆலைகளிலும், ஆண்டுதோறும் சில படித்த இளைஞர்களைப் பொறிகளில் பயிற்சி பெறுவதற்காகச் சேர்த்துக்கொண்டார். மூன்ருண்டுகள் வரை அவர்களுக்குச் சொற்ப ஊதியம் கொடுத்துவந்ததோடு அதன் பின் தொழிற்சாலையிலேயே அவர்களை நல்ல சம்பளத்தில் அமர்த்திக்கொண்டும் வந்தார். சில பேர்களுக்கு மட்டும் ஏதாவதொரு

நாளில் தான தருமங்கள் செய்வதைவிட நிரந்தரமாகத் தாங்களே சம்பாதித்துக் கொள்ளும் நிலைமைக்கு அவர் களைக் கொண்டு வருதல் சிறப்புடைத் தல்லவா? தான தருமங்கள் செய்வதைக் காலத்திற்குத் தக்க முறையில் அறிவோடு, விசாரணை செய்து செய்யவேண்டும் என்று டாடா கருதிவந்தார். "துணி உற்பத்திக்கு எவ்வளவு அறிவு, விசாரணை இவை வேண்டுமோ அவ்வளவும் தான தருமங்களை நேரிய முறையில் செய்யவும் வேண்டும்" என்று தம் நண்பர்களிடம் இவர் அடிக்கடி கூறுவாராம். "இந்திய வறுமைக்குக் காரணம் இந்தியருக்குத் தக்க சந்தர்ப்பங் கள் ஏற்படுத்தப்படாம லிருப்பதும், அறிவியல் முறைக் கொப்பக் கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படாம லிருப்பதுமே" என்று அவர் கருதினர். அத்துடன் பல நாடுகளுக்கும் தாம்சென்றிருந்த அனுபவத்தாலும்தொழில் உலகில் தாம் நடத்தவேண்டி ஏற்பட்ட போராட்ட அனு பவங்களாலும், இந்தியா இரும்பு, உருக்கு இவை இரண் டையும் உற்பத்தி செய்து கொள்ளாமலும் தன் மக்க ளுக்கு அறிவியல் முறையுல் தக்க கல்வி யளிக்காமலும் இருக்கும் வரை தற்காலத்தில் அது முன்னணிக்கு வர முடியாதென்று அவர் தெளிவாக அறிந்திருந்தார். பிற் காலத்தில் ஜாம் ஷெட்பூர் இரும்புத் தொழிற்சாலையும், பெங்களூர் விஞ்ஞானக் கழகமும் ஏற்படக் காரணமா யிருந்தவை டாடாவின் அக்கருத்துக்களே என்னலாம்.

தவிரவும் எந்தக் கம்பெனிக்காரர்களும் 'தங்களது' என்று சில வியாபார தந்திரங்களை வைத்துக்கொண்டிருப் பார்கள். அவைகள் மிகவும் ரகசியமானவை. டாடா அப்படிப்பட்ட வியாபார ரகசியங்களை மறைத்ததேயில்லை. தாம் கையாளும் எல்லா முறைகளையும் இந்திய வியாபாரி

கள் அனைவருக்கும் பகிரங்கமாகத் தெரிவிப்பார். இதி லிருந்தே அவர் இந்தியக் கைத்தொழில் முன்னேற்றத்தை யே முதலில் கவனிப்பவ ரென்பதும் தமது கம்பெனியின் நலத்தை மாத்திரம் கவனிப்பவரல்ல ரென்பதும் எளி தில் தெரியும்.

I. வினாக்கள்

1. டாடாவின் உண்மை நோக்கம் யாது?
2. இந்தியாவின் வறுமைக்கு எவை காரண மென்பது டாடாவின் கருத்து?
3. இவரால் ஏற்படுத்தப் பட்ட ஸ்தாபனங்கள் எவை?
4. அரசியலன்றி, பிற துறைகளில் இந்திய முன்னேற்றத் துக்காக உழைத்த வேறு ஒருவரைக் கூறுக.
5. வாக்கியம் அமைக்க: ஊழியம், அர்ப்பணம், சாதனம், வன்மை, விரயம், பொறியியல், நிரந்தரமான, முன்னணி, பகிரங்கம்

II. கட்டுரையாக்கம்

இப் பாடத்தைக் கொண்டும் பூகோள ஞானத்தைக் கொண் டும் கீழ்வரும் குறிப்புக்களை உதவியாக வைத்துக்கொண்டு 'இந் தியக் கைத்தொழில்' என்பதைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

[1. பொருள் விளக்கம்; 2. தற்காலம் நடைபெறும் தொழில் கள்; இடங்கள். 3 அவைமேலோங்க நாம் செய்ய வேண்டியவை.]

III. இலக்கணம் (முடிக்கும் சொல்)

ஒவ்வொரு சொல்லின் பொருளையும் முடிப்பதற்கு வேறு ஒரு சொல் வேண்டும். ஒரு வாக்கியத்தில் பயனிலையைத் தவிர மற்ற சொற்களில் எதற்கும் முடிக்கும் சொல் உண்டு.

எழுவாயின் முடிக்கும் சொல் பயனிலையே. பெயரெச்சத்தின் முடிக்கும் சொல் ஒரு பெயராக இருக்கும். வினையெச்சத்தின் முடிக்கும் சொல் ஒரு வினையாகவோ தொழிற் பெயர் அல்லது வினையாலணையும் பெயராகவோ இருக்கும்.

கீழ் வாக்கியங்களுள் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் பொருளை முடிக்கும் சொல்லைக் கூறுக:

1. டாடா சென்ற நூற்றாண்டில் இருந்தவர்.
2. இயந்திரக் கைத்தொழிலில் முதன் முதல் இறங்கி வெற்றி பெற்றவர் இவரே யாதல் பற்றி இவரை இந்தியக் கைத்தொழிற் பிதா என்பர்.
3. டாடாவைச் சரிவர மதிப்பிட வேண்டுமாயின் அவர் என்ன செய்தார் என்பதுடன் ஏன் அவைகளைச் செய்தார் என்பதையும் கவனிக்க வேண்டும்.

IV. வாக்கிய அமைப்பு

'டாடா பணம்சேர்ப்பதையே தமது நோக்கமாகக் கொள்ளவில்லை; ஒரு சாதனமாக மட்டும் கருதினார்.' இதில் இரண்டு வாக்கியங்கள் உள்ளன. இவற்றை ஒரு வாக்கிய மாக்கலாம். முதல் வாக்கியத்தின் பயனிலையை, 'கொள்ளாமல்' என்று எச்சமாக்கி விட்டால் ஒரு வாக்கியமாய் விடும்.

கீழ்வாக்கியங்களை இவ்வாறு ஒன்று சேர்க்க: டாடா தம் ஆலைகளில் படித்த சில இளைஞர்களைப் பொறிகளில் பயிற்சிபெறுவதற்காக ஆண்டுதோறும் சேர்த்துக் கொண்டார். மூன்றாண்டுகள் வரை அவர்களுக்குச் சொற்ப ஊதியம் கொடுத்து வந்ததோடு அதன் பின் நல்ல சம்பளத்தில் நிரந்தரமாக அமர்த்திக் கொண்டார்.

7. வில்லி பாரத வரலாறு

வில்லிபுத்தூரர் கவி சார்வ பௌமராக வாழ்ந்து வந்த காலத்தில் திருமுனைப்பாடி நாட்டை ஆண்டு வந்த கொங்கர் குல வரபதி யாட்கொண்டானென்பவன் தமிழ் மொழியி னிடத்து அதிக ஆர்வமுடையவனாய், முச்சங்கத் தமிழ் நூல்கள் அழிந்துபோகாமல் நான்காஞ் சங்கமென ஒன்று நிறுவித் தமிழ் மொழியை ஆதரித்து வந்தான். அவன் இப்புலவர் பெருமானை நோக்கி, "நீயும் நானும் பிறந்த திசைக்கு இசை நிற்பப் பாரதமாம் பெருங்கதையைப் பெரியோர் தங்கள் சிறந்த செவிக்கு அமுதமெனத் தமிழ் மொழியில் விருத்தத்தாற்செய்க" என்று வேண்டிக் கொள்ள இவர் அந்நூலைச் சுருக்கமாகப் புராண முறையிற் செய்தமைத்தார் என்று பாயிரம் கூறுகிறது.

நூற்பாரத மியற்றப் புகும் காரணத்தைக் காட்டுமிட மாகிய தற்சிறப்புப் பாயிரத்தில்*வில்லியார் மேலே குறித்த காரணத்தைக் காட்டாமல் 'மன்னுமாதவன் சரிதமும் இடையிடை வழங்குமென்னும் ஆசையால் யானும் ஈதியம் புதற் கிசைந்தேன்' என்று குறித்துள்ளார். தாங்கள் நூலியற்றுவதற்குப் பிற காரணங்களும் உளவாகத் தற் சிறப்புப் பாயிரங்களில் 'ஆசை பற்றி அறையலுற்றேன்' என்று கூறுவது தமிழ் நாட்டில் பெரும்பாலும் எல்லாப் புலவர்களிடத்திலும் காணப்படுகின்றது. ஆட்கொண்டான் தம்மைப் பாடும்படிக் கேட்டுக்கொண்டதாக வில்லிபுத்தூ

---

* தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் எய்த உரைப் பது தற்சிறப்பாகும்.

ரர் தற்சிறப்புப் பாயிரத்தில் கூறுதலைக் கொண்டே 'ஆட்கொண்டான் இவரைக் கேட்டுக்கொண்டபடி இவர் பாடினாரில்லை' என்று சொல்லி விடல் முடியாது. நூலினுள் பல விடங்களில் இவர் தம்மை ஆதரித்த அந்த ஆட்கொண்டானைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

சங்க பாரதம் இவர்காலத்தில் இருந்திராது. பிற்காலப் பெருந்தேவனார் பாரதத்திலும் பல பகுதிகள் அழிந்து போயிருக்கலாம். இல்லையேல் 'இந்தப் பிற்காலப் பாரதத்தைவிடச் சிறந்த நூல் ஒன்று செய்தல் வேண்டும். இஃது அத்துணைச் சிறந்ததன்று' என்று இவர் நினைத்திருத்தல் கூடும். இந்நினைவின் காரணமாக வில்லி பாரதம் எழுந்தது போலும்.

இது நிற்க, வில்லியார் பாரதம் பாடியதற்கு வேறு காரணம் கற்பித்துக் கூறுவாரும் உளர். அவை வருமாறு: வில்லிபுத்தூரரும் இவர்தம் சகோதரரும் சிறந்த புலவர்களாகத் திகழ்வதைக் கேள்வியுற்ற ஆண்டான் பிள்ளை என்னும் அதிகாரி அவர்களில் ஒருவரைக்கொண்டு தமிழில் ஒரு பாரத நூலைச் செய்விக்க விருப்பம் கொண்டானாம். அச்சகோதரர் மன்னர் உறவு வேண்டாரெனக் கூறக் கேட்டு எப்படியும் தன் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு கிழக் கைம்பெண்ணொருத்தியை அழைத்து, "நீ சென்று வில்லி புத்தூரருக்கும் அவர் தம் சகோதரருக்கும் பகைமையை உண்டுபண்ணி அவர்கள் இருவரும் தாயபாகப் பிரிவினை விஷயமாக வழக்குத் தொடுத்து வருமாறு செய்க; அங்ஙனம் செய்வையேல் நீ தக்க ஊதியம் பெறலாம்" என்று கூறினனாம். ஒரு பாரத நூலைத் தமிழிற் பெறுவதற்குத் தாம் செய்ய நினைத்த இந்தத் தந்தி

ரத்தைக் குறித்துப் பாண்டிய மன்னனுக்கு உரைத்து, அவர்தம் உதவியை அந்த ஆண்டான் பிள்ளை நாடி நிற்க, அவன் விருப்பப்படி அவள் சென்று புலவர் சகோதரர் களின் மனைவிமாருக்குள் கலகத்தை உண்டுபண்ணி விட்டனளாம். அந்தக் கலகம் காரணமாக இரு சகோதரரும் குடும்பச் சொத்தினைப் பிரிவினை செய்துகொண்டு வெவ் வேறிடங்களுக்குக் குடிபுக எண்ணினர்களாம். பிரிவினை யில் மனவேற்றுமை தோன்றவே இருவரும் அரசனிடம் சென்று தங்கள் வழக்கைக் கூறிக் கொண்டனராம். அரசன் அக்காலையில் அவர்களை நோக்கி, "நீவிர் இரு வரும் தனித்தனியே பாரதக் கதையைத் தமிழில் பாடல் களாகச் செய்து வருவீர்களானல் பின்னர் நாம் உம் வழக்கைத் தீர்ப்போம்" என்றனனும். வில்லியார் எழுதிய நூலே சிறந்திருந்ததாம். பாரதக் கதையை எழுதிய பின் சகோதர ரிருவரும், "தாயபாக விஷயமாகவன்றே பார தப்போர் நிகழ்ந்தது. படித்தவர்களாகிய நாம் நமக்குள் கலகம் விளைத்துப் போராடுவது இழிந்த செயலேயாகும்" என்று எண்ணினர்களாம். இச் சமயம் அரசன் அப் புல வர்க ளிருவரையும் நோக்கித் "தமிழிற் சிறந்ததொரு பாரத நூலைப் பெறும் பொருட்டு நானே இச்சூழ்ச்சி செய் தேன்" என்று சொல்லித் தான் கிழவியை அனுப்பி வைத்தது முதற்கொண்டு நடந்த செய்திகள் யாவையும் புகன்று தக்க சன்மானஞ் செய்து அவ்விருவரையும்மேன் மைப் படுத்தினனும். இவ்வாறு கூறுவர் புலவர் புராண முடையார்.

மற்றொரு விதமாகக் கூறப்படும் காரணம் வருமாறு: புலவர் பெருமானென்று தம்மைத்தாமே மதித்துக்

கொண்டு வில்லியார் தாம் இருந்து வந்த தேசத்து அரசனுடைய ஆதரவினால் கவியரசு செலுத்தி வந்தனராம். படித்தவர்கள் என்று வருவோரை எல்லாம் கேள்வி கேட்டுத் தம் வினாக்களுக்கு உரிய விடையளிக்காதவர்களின் காதை யறுத்து அவர்களை அவமானஞ் செய்து வந்தனராம். ஒரு சமயம் அவர் திருவண்ணாமலைப் பிரதேசத்துக்குச் செல்ல நேர்ந்தபோது. அங்கே ஸ்ரீ அருணகிரி நாதர் தமிழ்ப் புலமையிலும் சைவத் துறையிலும் பிரசித்தியுற்றிருப்பதைக் கேள்வியுற்று அழுக்காறு கொண்டு அப்பெருமானை வாதுக்கழைத்தனராம். அப்பொழுது ஸ்ரீ அருணகிரியார் தாம் கந்தரந்தாதி என்று ஓர் கலித்துறை யந்தாதியைப் புதிதாக இயற்றி வருவதாகவும், வில்லியார் அதற்குத் தடையின்றி உரை கூறி வரவேண்டு மென்றும் ஏற்பாடு செய்து கொண்டனராம், அவ்வந்தாதியில் 54-ஆம் கவிக்கு வில்லியார் பொருள் கூறமுடியாதவராகவே, இருவரும் தாம் முன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி, தோற்றவராகிய வில்லியார் தம் காதினை இழக்க நேர்ந்ததாம். ஆனால் கருணைக் கடலாகிய ஸ்ரீ அருணகிரி நாதர் அங்ஙனம் வில்லியின் காதை அறுக்க ஒருப்படாது, "இனி நீவிர் எழுந்து செல்லலாம்" என்று கூறி வாளா விடுத்தனராம். திரும்பச் சென்ற வில்லிபுத்தூரார் இடைவழியில் சிவாலயங்களிருப்பதை நினைத்துத் தாம் முதிர்ந்த வைணவராதல்பற்றி அவற்றைப் பார்த்தல் பாவச் செயலாகுமென் றெண்ணித் தம் கண்களை மூடிக்கொண்டு செல்லத் தொடங்கினராம். சில நிந்தனையால் உடனே அவர்தம் கண்கள் அவிந்து விட்டனவாம். பிறகு அவர் ஸ்ரீ அருணகிரியாரை அடுத்து வேண்ட அவர், "நீர் சிவபரமாக ஏதேனும் ஒரு நூலியற்றினால் இழந்த கண்களை

மீட்டும் பெருவீர்" என்றனராம். அதன் பொருட்டே வில்லியார் பாரதமெழுதி இடையிடையே அதனுள் சிவஸ்துதி செய்தனராம். இது முதற்கொண்டு இவர் "திருப்புகழ் நாதன் றன்பால் தீர்வருஞ் சிநேகனுகி" வாழ்ந்து வந்தாராம். இவ்வாறு காரணம் கற்பித்தவர்கள் வில்லியார்,

"மன்னு மாதவன் சரிதையும் இடையிடை வழங்கு
மென்னு மாசையால் யானுமீ தியம்புதற் கிசைந்தேன்"

என்று கூறியிருப்பதில் மன்னு மாதவன், என்பதனை 'மன்னும் மாது அவன்' என்று பிரித்துச் 'சிவ சரிதம் இடையிடையே வருவதால் நான் இதைப் பாடுவதற்கு இசைந்தேன்' என்று திரித்துப் பொருள் கொள்ளுவர்.

I. வினக்கள்

1. வரபதி யாட்கொண்டான் யார்? அவன் செய்த தமிழ்த் தொண்டு யாது?

2. பாயிரம், தற்சிறப்புப் பாயிரம்—பேதமென்ன?

3. 'மன்னு மாதவன்' என்ற தொடருக்கு இருபொருள் கூறுக.

4. பொருள் கூறுக: தாயபாகம், ஊதியம், கலாம், அழுக்காறு, ஒருப்படாது, சிவபரம், சமத்காரம்.

5. வாக்கியம் அமைக்க: இடையிடையே, புனைபெயர், சமயோசிதம், நிறுவி.

II. இலக்கணம்

ஒரு சொல்லின் வகையைக் கூறி அதற்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் இவைகளில் ஏற்றவற்றைக் கூறி இன்ன சொல்லைக்கொண்டு அது முடிகிறது என்று சொல்வது சொல்லிலக்கணமாகும். சொல்லுக்கு இலக்கணம் அல்லது சொல்லினது இலக்கணம் எனவிரியும்.

ஆட்கொண்டான் அழிந்து போகாமல் தமிழ்மொழியை ஆதரித்து வந்தான்.

ஆட்கோண்டான்: பொருட் பெயர், உயர்திணை, ஆண் பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை, ஆதரித்து வந்தா னென்பதற்கு எழுவாயாகும்.

அழிந்து: இறந்தகால வினையெச்சம், போகாமல் என்ற வினையெச்சத்தைக் கொண்டு முடிகிறது.

போகாமல்: எதிர்மறையெச்சம், வருங்காலம், ஆதரித்து வந்தான் என்ற வினையைக் கொண்டு முடிகிறது.

தமிழ் மோழியை: பொருட்பெயர், அஃறிணை, ஒன்றன் பால், ஒருமை, படர்க்கை, இரண்டாம் வேற்றுமை, ஆதரித்து வந்தான் என்ற வினையைக் கொண்டு முடிகிறது.

ஆதரித்து வந்தான்: முற்று வினை, உயர்திணை, ஆண்பால் ஒருமை, படர்க்கை, இறந்தகாலம், ஆட்கொண்டான் என்ற எழுவாய்க்குப் பயனிலையாக நிற்கிறது.

III. வாக்கிய அமைப்பு

ஒருவாக்கியத்தில் ஒருமை, பன்மை இடர்ப்பாடுகள் வருதல் கூடாது. (உ-ம்) வில்லியார் தாம் பாரதம் எழுதியதற்குக்

கற்பிக்கும் காரணம் வேறு. இங்கே நாம் என்பதற்குப் பதில் தான் என்று எழுதல் பிழை. பிழைகளுக்குச் சில உதாரணங் களும் அவற்றின் திருத்தங்களும் கீழே தரப்படுகின்றன :—

1. அவர் தன்னுடைய; அவர் தம்முடைய.

2. நோய்கள் வருகிறதென்று; நோய்கள் வருகின்றன வென்று.

3. நூல்களைப் படிக்கப் படிக்க அதன் நயம் தெரிகிறது. நூல்களைப் படிக்கப் படிக்க அவற்றின் நயம் தெரிகிறது.

4. மரங்கள் வளராது. மரங்கள் வளரா (வளரமாட்டா.)

5. பல பாஷைகள் தெரிகிறதென்று; பலபாஷைகள் தெரி கின்றனவென்று.

6. ஒவ்வொரு நாடுகளிலும்: ஒவ்வொரு நாட்டிலும்.

7. மரங்களாவது செடிகளாவது; மரங்களேனும் செடிக ளேனும்

8. அவை நல்லதா, கெட்டதா? அவை நல்லனவா, கெட் டனவா?

அவன் இப்புலவர் பெருமானை நோக்கி, "நீயும்நானும் பிறந்த திசைக்கு இசை நிற்பப் பாரதமாம் பெருங்கதையைத் தமிழ் மொழியில் விருத்தத்தாற் செய்க" என்று வேண்டிக் கொண் டான்—இது தன்கூற்று வாக்கியம். மேற்கோள் குறிகளில் உள்ள செய்தியைப் பிறகூற்றாக மாற்றி எழுதும் விதத்தை நீங் கள் பழகிக்கொள்ளவேண்டும். இவ்வாக்கியத்தை, 'அவன் இப் புலவர் பெருமானை நோக்கி, அப்புலவரும் தானும் பிறந்த திசைக்கு இசைநிற்பப் பாரதமாம் பெருங்கதையைத் தமிழ்

மொழியில் விருத்தத்தாற் செய்யும்படி வேண்டிக்கொண்டான்' என்று மாற்றலாம்.

இப்பாடத்தில் வந்துள்ள தன் கூற்று மொழிகளை இம்மாதிரி பிறகூற்று மொழிகளாக மாற்றுக.

8. காவியமும் கணக்கும்

(ஓரங்க நாடகம்)

[கடைசி 'பீரியட்' தமிழ் உபாத்தியாயர் பள்ளிக் கூடம் வராத நாள். மூன்றும் பார மாணவர்கள் தலைமை உபாத்தியாயரிடம் சென்று ஓய்வு கேட்டுக்கொண்டு வீட்டுக்குப் போக நினைக்கிறார்கள். ராஜு என்ற சட்டாம் பிள்ளை தலைமை ஆசிரியரிடம்சொல்லி அவர் உத்தரவின்படி, தமிழாசிரியருக்குப் பதிலாக வகுப்பை பார்த்துக்கொள்ளக் கணக்கு உபாத்தியாயர் ராமகிருஷ்ணையரை அழைத்து விட்டு வந்தான். கணக்குபாத்தியாயரின் வருகையை அவன் வகுப்புக்கு அறிவித்தான். பின் நிகழ்ச்சிகளை நாடகத்திற் காண்க.]

[மற்ற மாணவர்கள் எல்லோரும் ராஜுவைப்பார்த்து முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனர்.]

ரங்கன் : (பல்லை நறநற வென்று கடித்து) அடே ராஜு உன்னை விட்டேனா, பார்! வாடா வெளியில் இன்றைக்கு உன்னைப்பார்த்துக் கொள்கிறேன்!

[ராமகிருஷ்ண ஐயர் அறையில் நுழைகிறார்.]

ராமன் : (நாற்காலியில் அமர்ந்து நடேசனை நோக்கி) இன்றைக்கு என்ன பாடம்?

நடே : தமிழ்க்காவியம், ஐயா—கலிங்கத்துப் பரணியில் படையெழுச்சி.

ராம : சரி. போய் ரூல் கழி, காம்பஸ் முதலியவற்றை எடுத்துவா !

நடே : (முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு) தமிழ்ப் பாடத்தில் அதெல்லாம் எதற்கு, ஐயா ?

ராஜாவைப் பார்த்து முறைக்கிறான்]

ராம : நல்லது. கணித சம்பந்த மில்லாத விஷயம் எதுவும் இந்த லோகத்தில் இல்லை. தமிழ் எழுத்துக்களுக்கு மொத்தத்தில் என்னவென்று பெயர்? நெடுங் கணக்கு என்று தானே சொல்லுகிறார்கள் ?

ரங்கன் : (பின் பெஞ்சியிலிருந்து உபாத்தியாயருக்கு கேட்காதபடி) உங்களுக்கே சந்தேகம்போல் இருக்கிறது.

ராம : (தொடர்ந்து) காவியத்தில் யாப்பிலக்கணம் என்று சொல்கிறார்களே, அதெல்லாம் ஒருவிதக் கணக்குத் தானே ?—சரி, போய் அவற்றை எடுத்துவா, நடேசா ; எதற்கு உபயோகம் என்று அப்புறம் தெரியும்.

[நடேசன் வெளியில் சென்று சற்று நேரங்கழித்து ரூல் கழி முதலியவற்றை எடுத்துவந்து உபாத்தியாயரின் மேஜை மீது வைக்கிறான்.]

ராம : (அருகில் இருக்கும் ஒரு மாணவனின் புஸ்தகத்தை வாங்கிக்கொண்டு) சரி, என்ன பாடம்? கலிங்கத்துப் பரணியா ?

கோவிந்தன் : (பின் பெஞ்சியிலிருந்து தன்னை மீறி உரக்க) இல்லை, கலிங்கத்துக் கணக்கு !

ராம : யாரடா அவன் ? பெஞ்சிமேல் ஏறடா.

கோவிந்தன் : (எழுந்து) நான் இல்லை, ஐயா.

ராம : நீ இல்லாவிட்டால் ஏண்டா எழுந்திருக்கிறாய்? அதிலிருந்தே நீதான் என்று தெரியவில்லையா? இப்பொழுது ஏறப் போகிறாயா, இல்லையா?

[கோவிந்தன் பெஞ்சியின்மேல் ஏறி நின்று சற்று நேரம் விழி பிதுங்க எதிர்ச்சுவரை நோக்கியபடி கண் கொட்டாமல் இருக்கிறான். அவ்விதம் செய்வதனால் அவன் கண்களிலிருந்து நீர் பெருகுகிறது.

ராம : (கோழை மனமுடையவராதலால் இதைப் பார்த்து அவன் அழுகிறான் என்று எண்ணி) சரி, உட்காரடா! இனிமேல் அப்படியெல்லாம் பேசாதே! (கோவிந்தன் முகத்தில் குறும்பு சிரிப்புடன் பெஞ்சியில் உட்காருகிறான்.) நல்லது, இப்பொழுது ஆரம்பிக்கலாம் பாடத்தை. கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் யார்?

எல்லா மாணவர்களும் : (ஒரே சமயத்தில்) சயங்கொண்டார், ஐயா.

ராம : ஒருத்தனைத்தானேடா நான் கேட்டேன்? எல்லோரும் ஏண்டா ஊளையிடுகிறீர்கள்? சரி, இந்தக் கலிங்க யுத்தம் எப்பொழுது நிகழ்ந்தது?

ராஜு : ஊம்-ம்-ம் (பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிறான்.)

ரங்கன் : (பின் பெஞ்சியிலிருந்து ராஜுவுக்குக் கேட்கும்படி ஏண்டா, தமிழ், தமிழ், என்று பறந்தாயே; எப்படி இருக்கிறது?

ராம : அடே! நீ கோபாலா, உனக்குத் தெரியாதாடா? நீதான் சரித்திர பாடத்தில் கெட்டிக்காரனாயிற்றே?

கோபா : சுமார் கி. பி. 1095-இல் ஐயா!

ராம : (திருப்தியடைந்தவராய்) சரி. அடே ராஜு, அப்படியென்ருல் எத்தனுவது நூற்ருண்டு?

ராஜு : (திருதிருவென்று விழித்துவிட்டு) பத்தாம் நூற்ருண்டு ஐயா!

ராம : பேஷ்—சீ போடா, உதவாக்கரை. அடே நீ, கோபாலா?

கோபா : பதினேராம் நூற்ருண்டு, ஐயா.

ராம : எப்படி?

கோபா : (தான் சொன்னது தவருே என்று எண்ணித் திகைத்து) தப்பா என்ன, ஐயா?

ராம : (அதற்குப் பதில் கூருமல்) உங்கள் தமிழ் வாத்தியார் உங்களுக்கு இதெல்லாம் சொல்லித்தராமல் வேறு என்னடா கற்றுக்கொடுக்கிருர்? நன்ருயிருக்கிறது, நீங்கள் தமிழ் படிக்கிற லட்சணம்! என்னடா தமிழ் படித்துக் கிழிக்கிறது? (மாணவர்கள் எல்லோரும் வெட்கத்தால் முகம் கவிழ்ந்து இருக்கின்றனர்.) சரி, சரி மூஞ்சியைத் தூக்கி வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது தெரிகிறதா கணக்குத் தெரிந்திருக்கவேண்டியதன் அவசியம்?

ரங்க : (தன் கூட்டாளி ஒருவனுடன் மெதுவாக) நானும் அப்பொழுதே பிடித்துப் பார்க்கிறேன். ஒவ்வொரு தடவை பேசி முடிக்கும்போதும் இதே பல்லவிதான்!

ராம : நல்லது, ஏசுகிறிஸ்து எத்தனை வருஷங்களுக்கு முன்பு இருந்தார்? நீ தான் ரங்கா?

ரங்கன் : (எழுந்து நின்று தனக்குள்ளே) அடே, என்னடா இது? பேரிழவாயிருக்கிறதே? ஏசுவிற்கும் இதற்

கும் என்னடா சம்பந்தம்? (கூரையைப் பார்த்து யோசனை செய்வதுபோல் பாவனை பண்ணுகிறான்.)

ராம: என்னடா? இதற்குப் பதில் கூரையில் எழுதி வைத்திருக்கிறதா? அட அசடே! அடுத்த பையன்; கோவிந்தா! இங்கிலீஷ் வருஷம் இது எத்தனாவது?

கோவிந்தன்: 1941, ஐயா.

ராம: அப்படி யென்றால்?

கோவிந்தன்: ஊம்-ம்-ம் (பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிறான்.)

ராம: அட களிமண்ணே, இதுகூடத் தெரியவில்லை யாடா?—அடே நடேசா, நீ சொல்லு.

நடே: (தட்டுத்தடுமாறிக் கொண்டே) ஏசுநாதர் 1941 வருஷங்களுக்குமுன் இருந்தார் என்று அர்த்தம், ஐயா.

ராம: (எழுந்து கரும்பலகையருகில் சென்று சாக்குக்கட்டியால் அதில் எழுதிக்கொண்டே) அதாவது 1941—1941=0 இந்தச் சுன்னத்திலிருந்துதான் இங்கிலீஷ் வருஷ ஆரம்பம். (மாணவர்களை ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு) இந்தச் சுன்ன வருஷத்திலிருந்து நூறு வருஷம் முடிய முதல் நூற்றாண்டு. அந்த நூறும் வருஷம் முடிவிலிருந்து இரு நூறும் வருஷம் முடிய இரண்டாம் நூற்றாண்டு. இப்படியே மற்றதெல்லாம்; தெரிந்ததா?

மாணவர்கள்: அப்பாடா! (அவர்களுக்கு ஜில்லென்று வேர்க்கிறது.)

ராம: சரி, இதை நோட்டுப் புஸ்தகத்தில் குறித்துக் கொள்ளுங்கள். (எல்லா மாணவர்களும் குறித்துக்கொள்ளுவதுபோல பாவனை செய்கின்றனர்.) அப்புறம் நீங்கள் இப்

பொழுது படிக்கப்போகும் கலிங்கத்துப்பரணி சோழவரசன் ஒருவனுக்கும் கலிங்க மன்னன் ஒருவனுக்கும் நடந்த யுத்தத்தைப்பற்றிய பிரபந்தம் அல்லவா? அது ஒரு சிறிய காவியம். காவியம் படிப்பதென்றால் என்ன? அதுவும் ஒரு யுத்தத்திற்குச் சமானமேயாகும். இந்தப் போரில் உங்களுடைய ஆயுதங்கள் எவை தெரியுமா? ராஜு! நீ சொல்.

ராஜு: (ஒன்றும் புரியாமல் நாக்குழற) ரூல் கழி முதலானவை, ஐயா. (இதைக் கேட்டு மற்ற மாணவர்கள் கொல்லென்று நகைக்கின்றனர்.)

ராம: (கோபத்துடன் ராஜுவின் தலைமேல் ரூல் கழியினால் ஒரு தட்டுத் தட்டி) மண்டு! மண்டு! (மாணவர்களை நோக்கி) யாப்பிலக்கணத்தில் நல்ல தேர்ச்சியே இதை எதிர்த்து ஜயிக்கக் கூடிய ஆயுதமாகும். சந்தக் கட்டு, அது இது என்கிறார்களே, எல்லாம் என்ன? கடைசியில் பார்க்கப் போனால் இவையெல்லாம்..........

நடேசன்: கணக்கு, ஐயா!

ராம: (சந்துஷ்டி அடைந்தவராய்) ஆமாம்! ஆமாம்! எல்லாம் கணிதம் தான்! இதனால்தான் நீங்கள் காவியத்தைப் படித்து அதன் சுவையை அனுபவிக்க முடியும். இதனால்தான் காவியம் அழகுடன் கூடி விளங்குகிறது. இது இல்லாவிடில் ரஸமற்ற வெறும் பதக் கோவையே—உயிரற்ற எலும்புக் கூடுபோல.

ரங்கன்: (பின் பெஞ்சியிலிருந்து மெதுவாக) ஏது, விஞ்ஞானத்தில் இறங்குகிறார் போலிருக்கிறதே!

ராம: இப்பொழுது படிடா, நடேசா!

நடே : 348-ஆம் செய்யுள், ஐயா. (மிடுக்குடன் படிக்கிறன்.)

“எழுந்தது சேனை ; எழலும்
இரிந்தது பாரின் முதுகு ;
விழுந்தன கானம் அடைய ;
வெறுந்தரை யானநதிகள்.”

ராம : (குறுக்கிட்டு) நில். இதைப் படிக்கும்போது போர்க்களம் என்பது எப்படி இருக்குமென்று தெரிய வேண்டியது அவசியமல்லவா ? (சாக்குக்கட்டியுடனும் ரூல் கழியுடனும் கரும் பலகையருகில் சென்று அதன் நடுவில் மேற்பக்கம் மட்டும் அம்புபோன்ற முனையுள்ள சிலுவை ஒன்று வரைந்து அம்பு முனைக்கு மேலே ‘வ’ என்று எழுதுகிறர்.)

கோவிந்தன் : (இதைக்கண்டு திகைப்புற்று ரங்கனை நோக்கி) இது எதற்காக ? உனக்குத் தெரிகிறதா ?

ரங்கன் : (மெதுவாக) அதுவா ? ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்தார்களே, தெரியுமோ இல்லையோ ? அதைப்போல இந்தச் சிலுவையில் தமிழ்க் காவியத்தை நம் கணக்கு வாத்தியார் அறையப்போகிறர், பார் ! (அருகில் உள்ள மாணவர்கள் சிரிக்கின்றனர்.)

ராம : (மாணவர்களை நோக்கி) ‘வ’ என்பது வடக்குத் திக்கைக் குறிக்கிறது. (அந்தச் சிலுவைக்குக் கிழக்குப் பக்கத்தில் பல சதுரங்கள் வரைந்து அவற்றின் தலையில் ‘சோ’ என்றும், மேற்குப் பக்கத்தில் சில முக்கோணங்களை வரைந்து அவற்றின் தலைப்புறத்தில் ‘க’ என்றும் எழுதிவிட்டு) இவை என்னவென்பது தெரிகிறதா ? கோபாலா !

ரங்கன் : (தன் கூட்டாளி ஒருவனுடன்) ஜாமெட்ரி டா! முக்கோணம், சதுரம் எல்லாம் வருகிறதே!

கோபா : (எழுந்து) தெரிகிறது, ஐயா, 'சோ' என்ற சதுரங்கள் சோழனுடைய படைகளைக் குறிக்கின்றன. 'க' என்ற முக்கோணங்கள் கலிங்கராஜாவினுடைய சேனைகளைக் குறிக்கின்றன.

ராம : (திருப்தியுடன்) சரி. (மாணவர்களுக்குக் கரும் பலகையைச் சுட்டிக்காட்டி) இப்பொழுது கவனியுங்கள்! இது தான் கலிங்கப் போர்க்களத்தின் படம். மஹாபாரதத்தில் அர்ஜுனனுடைய வ்யூஹத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? அதே போலச் சோழப் படை வீரர்கள் சதுரம் சதுரமாகவும், கலிங்கப் படைவீரர்கள் முக்கோணம், முக்கோணமாகவும் அணி வகுத்து நின்றிருந்தார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். இவ்விதம் அணிவகுக்கும் சேனைத் தலைவர்களுக்கு க்ஷேத்ர கணிதத்தில் நல்ல தேர்ச்சி இருக்கவேண்டும். ஆகையினால் எதுவானாலும் சரி, கணக்கில் தான் வந்து முடிகிறது என்று தெரிகிறதல்லவா? ராஜு! இப்படி வா. போர்டில் நடேசன் படித்த அடிகள் நான்கையும் எழுது. (ராஜு கரும்பலகை யருகில் சென்று ஒரே வரியில் நான்கு அடிகளையும் எழுதுகிறான்.) சீ, போடா முண்டம்! என்னடா நீள எழுதிக்கொண்டு போகிறாய்? போய் இடத்தில் உட்கார். (ராஜு போய் உட்கார்ந்ததும் உபாத்தியாயர் கீழ்க்கண்ட விதமாகப் பதம் பிரித்துவிட்டுச் செய்யுளின் ஒவ்வொரு பதத்தின் மேலும் ஓர் எண் எழுதுகிறார்)

2 1 1

எழுந்தது சேனை ; எழலும்

4 2 3
இரிந்தது பாரின் முதுகு;
3 1 2
விழுந்தன கானம், அடைய;
2 3 1
வெறுந்தரை யான நதிகள்.

ராம: இவை என்னவென்பது தெரிகிறதா, ராஜு?

ராஜு: (புரியாமல்) இருபத்தோராயிரத்து நூற்றுநாற்பத்தொரு கோடியே சொச்சம் படைவீரர்கள், ஐயா! (எல்லா மாணவர்களும் கொல்லென்று நகைக்கின்றனர்.)
ராம: (ராஜுவின் தலைமேல் ரூல் கழியால் தட்டி) சீ! வாயை மூடு, மண்டு, அவ்வளவு வீரர்களா? இந்தியாவின் மொத்த ஜனத்தொகை என்னடா?

ராஜு: (கண்கலங்க) முப்பதொன்பது கோடி, ஐயா!

ராம: இந்தக் காலத்திலேயே ஆண், பெண், குழந்தைகள் அடங்க அவ்வளவே பேர்தான் இருக்க, எங்கேயிருந்தடா அந்தக் காலத்தில் சோழராஜ்யத்தில் அத்தனை கோடி வீரர்கள் வந்தார்கள்?

நடே: (பரிஹாசமாக) ஏன் ஐயா? இருக்கலாம், ஐயா! போனதடவை 'ஸென்ஸஸ்' எடுக்கும்போது எத்தனையோ பேர் தங்கள் ஊர், பெயர் இவைகளைக் கொடுக்காமல் தலைமறைந்து விட்டார்களாம். அது போதாமல், இந்தக் கலிங்கத்துப் பரணியிலேயே ஓர் இடத்தில் தமிழரைத் தவிர்த்து வெளி தேசத்தாரும் சோழனுடைய சேனையில் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது. ஒரே ஒரு செய்

யுள் அதிலிருந்து படிக்கிறேன், கேளுங்கள், ஐயா! (மிடுக்குடன் படிக்கிறான்.)

"வந்தவர் மத்திரர் மாளுவர் மாகதர்
மச்சர் மிலேச்சர்களே
குத்திரர் குத்தர் குடக்கர் மிடக்கர்
குருக்கர் துருக்கர்களே"

என்ன ஐயா! (ராஜு உட்பட எல்லோரும் சிரிக்கின்றனர்)

ராம: (நகைத்த வண்ணம்) போதுமடா, அதிகப் பிரசங்கி! நீதான் சொல்லேன், இந்த எண்களை எதற்காகப் போட்டேன் என்று?

நடே: அன்வயந்தானே, ஐயா, பண்ணியிருக்கிறீர்கள்?

ராம: சரி, மேலே 349-ஆவது செய்யுளைப் படி!

நடே: (படிக்கிறான்)

"அதிர்ந்தன நாலு திசைக ளடங்கின............"

ராம: (குறுக்கிட்டு) சரி, நில், நாலு திசைகள் எந்த எந்த திக்குகள்? (அப்பொழுது பள்ளிக்கூடம் விடுவதை அறிவிக்கும் மணி அடிக்கின்றது. மாணவர்கள் எல்லோரும் தத்தம் புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாகின்றனர்.) என்னடா அவசரம்? இன்னும் கொஞ்சம் நாழிகை இருங்களேண்டா; இதை முடித்துவிடலாம்.

நடே: இல்லை, ஐயா! இன்னொரு நாள் ஆகட்டும்; தமிழ் வாத்தியார் இதே மாதிரி இன்னொரு நாள் வராவிட்டால் அன்று பார்த்துக் கொள்ளலாம். நாங்களும்

அதற்குள் நீங்கள் சொன்னதை யெல்லாம் நன்றாக யோசனை பண்ணி மனசில் பதிய வைத்துக்கொள்வோம். ஒரே யடியாக எல்லாவற்றையும் விழுங்கி ஜரித்துக்கொள்ள முடியுமா, ஐயா ?

ராம : (புன்னகையுடன்) சரி. அப்படியானால் எல்லோ ரும் ஒழுங்காக அணி வகுத்துப் போங்கள். (முன்னால் அறையை விட்டு வெளியேறுகிறார்.)

கோபா - (ரங்கனைப் பார்த்து) அடே ! நம்ம ராஜுவை ஒன்றும் செய்ய வேண்டாமடா ! அவன் இன்றைக்குப் பட்ட பாடு போதும் பாவம் !

[எல்லோரும் சிரித்துக் கொண்டே ஒருவரை யொருவர் பிடித்துத் தள்ளிக்கொண்டு வெளியே செல்கின்றனர்.

I. வினாக்கள்

1. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் பெயர், காலம், பாடிய காரணம் இவற்றைத் தெரிவிக்க.
2. ‘உயிரற்ற எலும்புக் கூடுபோல’—எது ?
3. இந்நாடகத்தில் நகைச்சுவை ததும்பும் வரிகளைக் காட்டுக.
4. இதனை நடத்திக் காட்ட என்ன என்ன உபகரணங்கள் வேண்டும் ?

II. இலக்கணம்

நிலைமொழி யீறும் வருமொழி முதலும் உயிரெழுத்துக்க ளாக இருப்பின் அவை தம்முள் சேரா (மயங்கமாட்டா). அவற்றை உடன்படுத்த ஒரு மெய்யெழுத்து வேண்டும். அந்த மெய் உடம்படு மெய் எனப்படும். இரண்டு உயிர்களுக்கும் இடை

யில் அந்த உடம்படுமெய் வர, பின்னுள்ள உயிர் அந்த மெய் யின்மேல் சேர்ந்து உயிர்மெய் யாகிவிடும்.

நிலைமொழி யீறு இ, ஈ., ஐ, ஏ, ஆக இருந்து வருமொழி முதலில் உயிர் வந்தால் ய் என்ற எழுத்து உடம்படு மெய்யாகும். நிலைமொழி ஈறு பிற உயிர்களாக இருந்து, வருமொழி முதலில் உயிர்வரின் வ் என்ற எழுத்து உடம்படு மெய்யாகும்.

(உதாரணம்)

1
- மணி + அடி = மணி + ய் + அடி — மணியடி
- தேனீ + எங்கே = தேனீ + ய் + எங்கே — தேனீயெங்கே.
- வாழை + இலை = வாழை + ய் + இலை — வாழையிலை.
- அவனே + இவன் = அவனே + ய் + இவன் — அவனேயிவன்.

2
- பல + அணில் = பல + வ் + அணில் — பலவணில்.
- நிலா + ஒளி = நிலா + வ் + ஒளி — நிலாவொளி.
- அது + என்ன = அது + வ் + என்ன — அதுவென்ன ?
- பூ + அழகு = பூ + வ் + அழகு — பூவழகு
- போ + என்றான் = போ + வ் + என்றான் — போவென்றான்.

உடம்படு மெய் இரண்டு ; அவை யகர உடம்படுமெய், வகர உடம்படுமெய் என்பன.

III. வாக்கிய அமைப்பு

சில வினா வாக்கியங்களும், வியப்பு வாக்கியங்களும், எதிர் மறைப் பொருளைத் தரும். (உ-ம்.)

1. நன்றாய் இருக்கிறது நீங்கள் தமிழ் படிக்கிற லட்சணம்! (நன்றாயில்லை என்றபடி.)

2. என்னடா தமிழ் படித்துக் கிழிக்கிறது ! (பிரயோசன மில்லை என்றபடி.)

3. புத்தகமும் கையுமாய் இருந்தாலே படிக்கிறவன் என்று ஆகுமா ? (ஆகாது.)

கீழ்வரும் செய்திகளை வியப்புக்குறி அல்லது வினக்குறி இட்டுப் பொருள் கெடாமல் மாற்றுக:—

1. நீ சரித்திர பாடத்தில் கெட்டிக்காரன்.
2. இதற்குப் பதில் கூறையில் இல்லை.
3. அவசரப்படாதே.
4. அவ்வளவையும் விழுங்கி ஜரித்துக்கொள்ள முடியாது.

——

9 பாட்டியும் பேர்த்தியும்

[பெண்களுக்குப் பதினன்கு வயது முடிந்த பின்னரே மணம் முடித்தல் வேண்டும் என்று திரு சாரதா என்பவர் இந்திய சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவந்தார். அது 1930-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சட்டமாக்கப்பட்டது. அது சட்டமாக்கப் படுவதற்கு இரண்டொரு மாதங்களின்முன் வைதிகப் பற்றுள்ள சிலர் இச்சட்டத்தினல் தங்கள் மதம் பாதிக்கப்படுவதாகப் பயந்து சின்னஞ்சிறுமிகளுக்கெல்லாம் கலியாணம்செய்து முடித்தனர். அந்த வருக்கத்தைச் சேர்ந்த ஒருவர் வீட்டில் நடந்தேறிய கலியாணத்தைப்பற்றியும், அதன் விளைவைப்பற்றியும் இப்பாட்டு மிக அழகாகச் சித்திரித்துக் கூறுகிறது.]

பாட்டி 'அலங்கரித்துக்கோள்' என்றல்

"கண்ணி லேமை வழித்துத் தடவடீ!
கழுத்தி லேயட்டி கையைத் திருகடீ!
எண்ணி யித்தனை நேரமு மென் செய்தாய்?
இடுப்பி லேயொரு சேலையைக் கட்டடீ!
கண்ணி மேகலை தன்னைப் புனைந்துகொள்;
நல்ல வேளையில் வந்துளர் செல்வர்கள்,

'பெண்ணைப் பார்த்துப்பின் கல்யாணஞ் செய்திடப்
பிரியப் பட்டன' ரென்றனர் தந்தையார். (1)

"இன்று நின்னைக்கண் டொப்பின ராயிடின்
இந்த மாதமே நன்மணம் செய்யலாம்;
பின்றைப் பங்குனி யீரெட்டுத் தேதிக்குப்
பின்னர்ச் செய்திடில் தண்டனை யுண்டென்பார்;
நன்று நன்றிந்த ராச்சியம்! பெண்களை
நாம் வளர்த்து மணஞ்செய்து தந்தக்கால்
நின்ற மற்றவர் சொல்வதென்? மன்னர்தம்
நீதி யீதோர் கலியின் கொடுமையே!" (2)

குழந்தையின் இயல்பும் செயலும்

என்று பாட்டி இயம்பிப் புலம்பினள்.
இளங்கு ழந்தையா றேவய தானவள்,
கன்று மானெனத் துள்ளக் குதிப்பவள்,
கவலை யென்பதை யேயறி யாதவள்,
மன்ற லென்றசொல் லின்பொருள் தேறிலாள்,
மரத்தினால் செய்த பாவையொ டாடுவ
தொன்று தானவட் கின்பந் தரும் அவள்
ஓடிப் பாட்டிபா 'லென்ன சொன்ன?' யென்றாள் (3)

பாட்டியின் பயமும் நயமுமான சொற்கள்

"தலையை வாரிவிட் டேன்ஒரு நாழிக்குள்
சாலை யுள்ள புழுதியை வாரியிட்
டலைகின்றாய்! இங்கே வாடி, பயித்தியம்!
அம்மை கண்டா லடித்திடு வாள் இனி

நிலையை விட்டு வெளிக்கிளம் பாதிரு ;
நினக்குக் கல்யாணம் நேர்ந்திருக் கின்றது ;
மலையைப் போலோர் புருஷன் வருவன் நின்
வண்ண மேனி நகையினுல் மூடுவான்.” (4)

மணத் தீர்மானச் சடங்கு

என்னும் பாட்டிசொல் ஏறவில் லையிந்த
ஏழைப் பெண்ணுக் கிரண்டு மணிக்குப்பின்
முன்னும் பின்னு மறியா தவர்பலர்
முகத்தி லேசிரிப் போடவண் வந்தனர்.
என்ன வோ அவர் பேசினர் ; மற்றிவள்
யாவ ருக்கும் வணக்கம் புரிந்தனள்
பின்ன ரொன்றும் இவளுணர்ந் தாளிலள்
பேதைப் பாவையும் தானும் உறங்கினுள். (5)

கலியாணப் பந்தலிலும் பின்னும்

“ஒருவன் பக்கலி லெத்தனை நாழிகை
ஊமை போல அமர்வது ? கூட்டத்தில்
திருடி போலக் குனிந்து, புகை கண்ணைச்
சேரக் கட்டி வருத்திட, ஐயகோ !
வெருவி னேனினி யிந்தக்கல் யாணத்தை
வேண்டி டேன் அந்த மாப்பிள்ளை கையொரு
பருவி ரும்பினைப் போல விருந்தது
பாவை யைத்தான் மணந்திடு வேனினி. (6)

“போதும் போதுங்கல் யாண”மென்று “ ளிந்தப்
புடைவை தூக்குதற் காகா” தென் றுளந்தப்
பேதை பேச்சுக்குள் ளேயுண்மை கண்டிலள்,
பேசப் பேசச் சிரித்தனள் பாட்டியே ;

ஓது மக்குழந் தைமண மானபின்
உற்றவாண் டொன்றிலே, கணவன் உயிர்
வீத லுற்றனன் ஏழு வயதினில்
விதவை யென்னவும் பட்டனள், ஐயையோ! (7)

குழந்தை பருவத்தாளானபின் பாட்டியின் வசை

பாட்டி யின்றைக் குரைப்பன கேட்டிரால்;
"பாவி! தாலி யறுத்தவள்; எத்தனை
ஈட்டி வைத்த கணவனைத் தேடினோம்;
ஏற்ற முண்டென வெண்ணினம்; மூதேவி
ஓட்டி விட்டனள் காலன் உலகினுக்
குள்ளே மூலையி லேகிடப் பாயினி
நீட்டி வாசலி லேவந்தா லுன்னையே
நேர்து டைப்பம் ஒடிய அடிப்பனே. (8)

கேட்ட கேட்டிற் புடவையைப் பாரடீ!
கேடு கெட்டவள் கைக்குப் பொற் காப்புகள்!
மொட்டை யிட்ட தலையும், வெள் ளாடையும்,
முழுக்கும் பட்டினி யுஞ்செப முந்தினம்
விட்டி லேன் எனைப் போல விருந்திடு;
வீணி லேசிரிப் புக்கிடம் வையாதே!
வெட்டிப் போடுவே" னென்றனள்; பாட்டியும்
விளம்பு பேர்த்தியும் ஒத்தனர் போலு மால்! (9)

—ஜோதி

I. அரும்பதவுரை

மேகலை—ஒட்டியாணம். மன்றல்—திருமணம். பாவை—பொம்மை. சாலை—தெரு. வண்ண—அழகிய. ஏழை—அறியாத. வெருவினேன்—பயந்தேன். வீதலுற்றனன்—இறந்தான்.

II. கட்டுரை யாக்கம்

இக்கதையை வயது வந்தபின் அச்சிறுமி கூறுவதுபோல் எழுதுக.

---

10. நரசிம்மாவதாரம்

நாங்கள் இருப்பது ஒரு சிறு கிராமம். அது கொல்லி மலை அடிவாரத்தில் ஒரு பக்கலில் இருக்கிறது. அவ்வூரி லுள்ளவர்கள் எல்லோரும் விவசாயிகள். மலைச்சாரலில் பெரிய காடுகள் உண்டு. அக்காடுகளில் முள்ளம்பன்றி, பெருநரி, கழுதைக் குறத்தி முதலிய துஷ்டமிருகங்கள் வாசஞ்செய்து வருகின்றன. அவைகளால் பல சமயங் களில் காடுகளை அடுத்துள்ள விளை நிலங்களுக்கும், கால் நடைகளுக்கும் சேதம் விளைவதுண்டு.

எங்கள் ஊர்ப்பக்கத்திலுள்ளவர்கள் எல்லாம் மிகுந்த தைரியசாலிகள். துஷ்ட மிருகங்களுக்கும் அஞ்சாதவர் கள். தோட்டங்களிலும் வைக்காடுகளிலும், பட்டிகளில் உள்ள ஆடு, மாடுகளுக்குக் காவலாக ஒவ்வொரு பட்டிக்கு ஒவ்வொருவர் விழுக்காடு அவர்கள் காவல் காத்து வரு வார்கள். பட்டிக்குள்ளேயே பரண் அமைத்துக்கொண்டு அதில் காவலாள் தூங்குவான். இரவில் முள்ளம்பன்றி, கழுதைக் குறத்தி, சிறுத்தைப் புலி முதலியவை தோட்டங் களிற் புகுந்தால் பட்டியிலுள்ளவர்கள் தாங்கள் அருகில் வைத்திருக்கும் தப்பட்டங்களை அடித்து ஒலி எழுப்பியும், பந்தங்களைக் கொளுத்தி வெளிச்சம் உண்டாக்கியும் அம் மிருகங்களை வெருட்டித் துரத்தி விடுவார்கள்.

ஓர் இரவு பங்குனிமாதத்து நிலா பிரகாசமாயிருந்தது. மாரியம்மன் திருவிழா நடந்துவந்த சந்தர்ப்பம். அக்கம் பக்க ஊர்களிலிருந்து திருவிழாவைக் காண ஜனங்கள் பலர் வந்திருந்தனர். தெருவில் அங்கங்கே பலர் கும்பல் கூடிப் பேசிப் பொழுது போக்கி வந்தனர். கோவிலுக்கு அருகில் தெருக்கூத்து நடந்துவந்தது.

கிராமங்களின் பழக்கம் உள்ளவர்களுக்குத் தெரு கூத்து இன்னதென்பது தெரியும். ஓரிடத்தில் பலகை களால் 'நாடகமேடை' அமைந்திருக்கும். தலைக்குமேல் ஒரு துணி கூரையாக (விதானமாக)க் கட்டியிருக்கும். கூத்தாடுகிறவர்கள் அந்த மேடையில் இருந்து கொண்டு நடிப்பார்கள். ஜனங்கள் வெட்ட வெளியில் தரையில் அமர்ந்து வேடிக்கை பார்த்து வருவார்கள். தெருக் கூத்து என்பதும், நீங்கள் நகரங்களில் பார்க்கும் நாடகம் என்பதும் ஒன்றுதான். ஆனால் முன்னது சிறிதளவு கிராம்யமாய் இருக்கும். 'நாகரிகக் குறைவானது' என்று நீங்கள் ஒருகால் அதைத் தூஷிக்கலாம்; எனக்கென் னவோ அதில் அதிகப் பைத்தியம்.

அன்று கூத்தைப் பார்க்க ஜனங்கள் திரள்திரளாகக் கூடியிருந்தனர். தரையில் எள்விழ இடமில்லாதபடி அவ் வளவு நெருக்கம். கூத்தாடு மிடத்திற்கு அருகிலுள்ள இடிந்த சுவர்களும், கல்லுக் கட்டுக்களும், மரங்களுங்கூட வேடிக்கை பார்ப்பவர்களுக்குச் சிறந்த ஆசனங்களாக உதவின. கூத்தைப் பார்ப்பதற்குக் காசு பணம் கொடுக்க வேண்டியதில்லை; கதையும் ரசமான தாக அமைந்திருந்தது.

ஆற்றுத் தண்ணீர், "அப்பா, குடி; அம்மா, குடி;" ஜனக் கூட்டத்துக்குக் கேட்கவேண்டுமா!

இரணியன் சரித்திரம் நடந்து வருகிறது. இரணிய னுகவும் பிரகலாதனுகவும் நடிப்பவர்கள் இருவரும் கூத்தில் கைதேர்ந்த மணிகள். அதனுல் எல்லோரும் பேச்சு மூச்சின்றி மேலே எறும்பூருவதும் தெரியாமல் வாயைப் பிளந்து கொண்டு வேடிக்கை பார்த்து வருகிருர்கள். இரவு மணி இரண்டிற்குப் பக்கமாக இருக்கலாம். தந்தைக் கும், மகனுக்கும் இறுதியாக நடக்கும் சம்வாதம் உருக்க மாக இருந்தது.

'நீ சொல்லும் கள்வன் எங்கே இருக்கின்றவன்; அவனை நீ காட்டுவாயா?' என்ருன் இரணியன்.

அதற்குப் பிரகலாதன்,

'சாணினும் உளன்; ஓர் தன்மை அணுவினைச் சதகூ றிட்ட
கோணினும் உளன்;மா மேருக் குன்றினும் உளன்; இந் நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன சொல்லினும் உளன்; இத்தன்
காணுதி விரைவின் ஐயா! காலனை ஆடல் கொண்டாய்!' [மை

என்று இரணியன் வினவுக்குப் பதிலளித்தான்.

[சதகூறு—நூறுகூறு, ஆடல் கொண்டாய்—வெற்றிகொண் டவனே; என்றது இரணியனை.]

அதனைக்கேட்ட இரணியன் தீயைப்போலக் கொதித்து இடிமுழக்கத் தொனியுடன்,

'உம்பர்க்கும் உனக்கும் ஒத்திவ்
வுலகெங்கும் பரந்து ளானைக்
கம்பத்தின் வழியே காணக்
காட்டுதி; காட்டி டாயேல்
கும்பத்தின் கரியைக் கோண்மாக்
கொன்றென நின்னைக் கொன்று
செம்போத்த குருதி தேக்கி
உடலையும் தின்பேன் கண்டாய்'

என்று கூறி ஆரவாரித்தான்.

[உம்பர் - தேவர்; உலகெங்கும் பரந்துளானை என்றது விஷ்ணுவை; கும்பத்தின்கரி - மத்தகத்தையுடைய யானை; கோண்மா - மிருகராஜன்; சிங்கம். குருதி - இரத்தம்.]

இவ்வளவில் பக்த சிரோன்மணியாகிய பிரகலாதன்,

'என்னுயிர் நின்னால் கோறற்
கெளியதொன் றன்று; யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட
இடந்தோறும் தோன்றா னாயின்
என்னுயிர் யானே மாய்ப்பல்;
பின்னும்வாழ் வுகப்ப லென்னின்
அன்னவற் கடிய னல்லேன்;
ஆரரு ளாற்று நின்றாய்!'

என்று கூறித் தலை நிமிர்ந்து நின்றான்.

இரணியனுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. கோபத்தின் மெய்ப்பாடுகள் உடலின் புறத்தே தோன்றின. ஒரு நிமிஷம் அப்படியே தம்பித்துப் போய் விட்டான். பிறகு, "அப்படியா! பார்க்கலாமா!!" என்று

கூறிக்கொண்டே தன் முன்னால் நிறுத்தி யிருந்த தூணை ஓர் உதை கொடுத்துத் தள்ள முயன்றான். அதே க்ஷணத்தில் உள்ளே இருந்து சிம்ம கர்ஜனை போன்ற ஒலி புறப்பட்டது. இதே சமயத்தில் வேறோரிடத்திலும் சிம்ம கர்ஜனை! கும்பலில் குழப்பம்! 'ஐயோ, என்ற குரல்கள்!!

கூட்டத்திலிருந்த ஜனங்கள் நான்கு பக்கங்களிலும் எழுந்து ஓடினார்கள். அவர்கள் அவ்வாறு ஓடும்போது, பலர் மிதியுண்டு இறந்து போயினர். நான் ஒரு மரத்தின் மேல் இருந்து கொண்டு கூத்தை கவனித்து வந்ததனால் எனக்கு எவ்விதமான ஆபத்தும் உண்டாகவில்லை. 'ஜனங்கள் ஏன் அவ்வாறு இரைச்சலிட்டுக்கொண்டு ஓடுகிறார்கள், என்று கவனிக்கலானேன். உண்மையான சிம்ம கர்ஜனை மறுமுறை என் காதில் விழுந்தது, திகைத்துப் போனேன். சிறிது நேரத்தில் சிங்கத்தையும் கண்டேன். அது நேரே மேடைக்குச் சென்றது. பிரகலாதன், இரணியன் எல்லோரும் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

சிங்கம் முதலிய வன விலங்குகள் விளக்கு வெளிச்சத்தினிடம் வருவதில்லை. அதினும் 'காஸ்லைட் இரண்டு, மூன்றுக்கு இடையில் ஒரு சிங்கம் நிற்பதென்றால் நான் அதை எவ்வாறு நம்ப முடியும்? ஆகையால் நரசிம்ம மூர்த்தியே இவ்வுருவில் வந்து விட்டாரோ என்று நான் எண்ணி மரத்திலிருந்தபடியே அதை வணங்கினேன். அந்தச் சிங்கம் இரணியனுக்கென்று இட்டிருந்த அரியணையின் மேல் முன்னங்கால்களை வைத்துக்கொண்டு நின்றது. அது கடவுள்தான் என்பதற்கு இன்னும் வேறு அத்தாட்சி என்னவேண்டும்? கூட்டத்தில் இன்னும் கலையாமலிருந்த

சிலர், 'ஸ்வாமி! நாங்கள் என்ன அபராதம் செய்து விட்டோம்? மன்னிக்க வேண்டும்' என்று அவர்களுக்குத் தோன்றியவாறு வேண்டிக்கொண்டனர். சிங்கம் நாடக மேடையை விட்டு நகரவில்லை. இப்பொழுது அது அமைதியாக இருந்தது. அங்கிருந்தபடியே அது நான்கு பக்கங்களையும் கம்பீரமான பார்வையோடு ஏற இறங்க நோக்கியது.



வெளியே இருந்தவர்களில் சிலர், 'இரணியனைக் கொண்டுவந்து மேடையில் விட்டு விடுங்கள்; சிங்கம் அவனோடு போய்விடும்' என்றார்கள். இவர்கள் இரைவதைக் கண்டு சிங்கம் மறுபடியும் இடிமுழக்கம் செய்தது.

பிறகு நடந்த ஓர் சம்பவத்தை என்னால் நம்ப முடியவில்லை. நான் கண்டது கனவோ நனவோ வென்று

கண்ணைத் துடைத்துக்கொண்டு நோக்கினேன். எங்கள் ஊர்க் கருப்பண்ணன் பெரிய வெட்டுக் கத்தியை எடுத்துக் கொண்டு மேடையை நோக்கி ஓடினான். 22-வயதுள்ள அந்த வாலிபன் இயற்கையில் சிறிது தைரியமும் அதற் கேற்ற பலமுடையவனாயினும் இவ்விதமான துணிகரச் செயலில் இறங்குவான் என்று நான் இதற்கு முன் நினைக் கவேயில்லை.

ஆனால் அவன் மட்டும் அடிக்கடி என்னிடம் ஒன்று சொல்லி வந்துள்ளான். அதாவது, கருப்பண்ணன் என்ற என் பெயர் காதவழி தூரம் பரவச்செய்யவேண்டும். அதற்கு ஏற்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. புகழன்றி இருப்பதில் எனக்கு விருப்பமில்லை' என்பதே அது. அவன் பல தடவைகளில் பாடும் பல்லவி இன்று செயலாக உருக்கொண்டது. அவன் என் பள்ளித் தோழனாக இருந் தவன் ஆதல் பற்றி 'இறக்கப்போகிறானே' என்று என் மனம் வருந்தியது. கறுப்பண்ணனைத் தொடர்ந்து அவ னுடைய தகப்பனார் ஒரு கோடாரியுடன் சென்றார்.

தன்மீது கறுப்பண்ணன் பாயவருவதை யறிந்த சிங் கம் பின்புறமாகப் பதுங்கிவிட்டது. அதே நிமிஷத்தில் அதன் முகத்தில் வெட்டுக்கத்தி பலமாகத் தாக்கியது. சிங் கம் வலி பொறுக்காமல் கர்ஜனை செய்துகொண்டு கறுப் பண்ணன்மேல் பாய முயலுகையில் அவன் மறுபடியும் கத்தியை ஓச்சி அதன் முன்னங்கால்களில் ஒன்றை வீழ்த் தினான். அதே சமயத்தில் கோடரி சிங்கத்தின் தலையிற் படவே அது உருண்டு கீழே சாய்ந்தது.

அது ஸர்க்கஸில் பழக்கப்பட்ட சிங்கமாம். அது ஸர்க்கஸிலிருந்து எப்படியோ தப்பி வந்துவிட்டது. தப்பி வந்த அன்று இத்தனை விபரீதங்கள் நிகழ்ந்தன!

I. வினாக்கள்

1. நரசிம்மாவதாரம் என்ற தலைப்பு ஏதனால் இதற்கு இடப்பட்டது?
2. மலைச்சாரலில் வேளாண்மை செய்பவர்களின் இயல்புகளை விவரிக்க.
3. தெருக் கூத்துக்கும் நகரத்து நாடகங்களுக்குமுள்ள பேதங்கள் எவை?
4. கறுப்பண்ணனின் குறிக்கோள் யாது? அது எங்ஙனம் நிறைவேறியது?
5. பொருள் கூறுக: விழுக்காடு, கும்பல், விதானம், சதகூறு, பரந்து, மெய்ப்பாடு, தம்பித்து, அரியணை, ஓச்சி, கிராமியம்.
6. வாக்கியத்தில் அமைக்க:—அக்கம் பக்கம், ஏற இறங்க, பேச்சு மூச்சு, விபரீதங்கள்.

II. கட்டுரை யாக்கம்

பிரகலாதனுக்கும் இரணியனுக்கும் நடந்த வாதத்தைச் சம்பாஷணை உருவில் அமைக்க. (ஒரு பக்கம்)

III. இலக்கணம்

நிலை மொழி குற்றியலுகரமாய் இருந்து வருமொழி முதலில் உயிர் வந்தால் அந்தக் குற்றியலுகரம் கெட்டுவிடும்; (மெய்யை விட்டு ஓடிவிடும்.)

உ-ம். { அங்கு + அங்கே = அங்கங்கே.
கோவிலுக்கு + அருகில் = கோவிலுக் கருகில்.
மூச்சு + இன்றி = மூச்சின்றி.

சில முற்றுகரங்களும் இவ்விதிக்கு உட்பட்டு நிற்கும்.

உ-ம். { வரவு + என்ன = வரவென்ன.
ஏழு + ஆழாக்கு = ஏழாழாக்கு.

IV. வாக்கிய அமைப்பு

1. அவன் எழுந்தான்.
2. நீ வெருள்.
3. அவன் நடந்தான்.
4. முருகன் கண்டான்.

இவ்வாக்கியங்களில் தொழில் தன்மேல் நின்றது.

1. அவன் ஒருவரை எழுப்பினன்.
2. மற்றொருவரை வெருட்டினன்.
3. காரியத்தை நடத்தினன்.
4. மற்றொருவனுக்குக் காட்டினன்.

இங்கே எழுதலும், வெருளலும், நடத்தலும், காண்டலும் பிறர்மேல் நிற்க, அவற்றைச் செய்விப்பவர் வேறு மனிதராக இருக்கின்றனர்கள்.

இலக்கண நூலார் முதல் மாதிரி வினைகளைத் தன்வினை என்றும், பின்மாதிரி வினைகளைப் பிறவினை என்றும் கூறுவர்.

வி, பி, கு, சு, டு, து, பு, று என்பன பிறவினை விகுதிகள்.

(உ-ம்.) செய்வி, படிப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, துயிற்று.

11. பக்த ஆகஸ்தீன்

ஆகஸ்தீன் என்பார் கி. பி. 354-ம் ஆண்டில் ரோம இராஜ்ஜியத்தின் ஆதீனத்திற் குட்பட்ட ஆப்பிரிக்காவில், கார்த்தேஜ் என்னும் நகருக் கருகில் ஒரு சிறு கிராமத்தில் பிறந்தார். இவர் தம் தந்தையார் பட்டீஷியஸ்; தாயின் பெயர் மானிக்கியா என்பது.

அக்காலத்தில் ரோமராஜ்ஜியம் வெகு தூரத்திலுள்ள ஆப்பிரிக்காவின் மாகாணங்களையும் தன்னகத்துக் கொண்டு திகழ்ந்தது.

அப்பொழுது அநேகர், ரோம அரசாட்சிக்குரிய அலுவல்களைச் செய்வதில் மாத்திரம் திறமையுடையவர்களாயிருந்தனர். இராஜ்ஜியத்தைச் சேர்ந்த எல்லோரும் அதற்கென்றே உழைத்து வந்தனர். பிரத்தியேகமாக, அவர்கள் தங்களுக்கு விருப்பமான துறைகளில் தங்களுடைய உழைப்பையும், முயற்சியையும் செலவழிக்க முடியாமலிருந்ததால், எல்லாம் சரிவர ஒழுங்காய் நடந்தபோதிலும் மக்களுக்கு ஊக்கமும், புத்துயிரும் இல்லை என்றே சொல்ல வேண்டும். இக்காலத்திற்குரிய கல்வி நிலையைப்பார்த்தால், அங்கும் இதே குறைவு காணப்படுகிறது. அநேக பண்டிதர்கள் புலமையுடையவரா யிருந்த போதிலும், அவர்களெல்லாரும் தம்முன்னோர் எழுதி வைத்துப்போன தத்துவம், இலக்கியம், கணிதம், தர்க்கம், சங்கீதம் முதலிய சாஸ்திரங்களைக் கற்று அவைகளைக் குறித்துத் தர்க்கமும், வாக்குவாதமும் செய்தார்களே யொழிய, ஒருவரும்தாமே எழுதும் வல்லமை பெற்று எழுதினதாகத் தெரியவில்லை.

ஜனங்கள் தாங்களே ஒரு நல்ல முயற்சியில் தலையிட முடியாததால், துஷ்ட மிருகங்களுடன் சண்டை செய்வதை ஒரு பெரும் பொழுது போக்காகக் கொண்டு, அத்தகைய கொடூரமான காரியங்களில் தங்கள் நேரத்தையும், பிரயாசையையும் செலவழித்து வந்தனர். ரோம ராஜ்ஜியத்தில் இத்தகைய குற்றங்குறைகளிருந்த போதிலும், அங்கே காணப்பட்ட ஒரு சிறந்த காரியம் என்ன வென்றால், கிறிஸ்துவ மதம் ரோமரால் அங்கீகரிக்கப்பட்டு எங்கும் பரவியது. கிறிஸ்துவ திருச்சபைக்குரிய காரியங்கள் செவ்வனே செய்யப்பட்டு வந்தன.

ரோம ராஜ்ஜியம் இத்தகைய நிலையிலிருந்த பொழுது தான், ஆகஸ்தீன் என்பார் ஆப்பிரிக்காவில் பிறந்தார். தம்முடைய ஞான ஸ்நானம், குணப்படுதல் இவைகள் நடந்தேறிய வருஷங்களாகிய 383-388 வரை, இத்தாலி தேசத்திலிருந்தார். மற்றபடி தமது வாழ்நாள் முழுவதையும் ஆப்பிரிக்காவிலேயே கழித்தார். அவரது வாழ்வின் கடைசிப் பகுதியில், அதுவரை ஸ்திரமாய் விளங்கியதும், ஒருவராலும் அசைக்க முடியாததாய்த் தோன்றினதுமான ரோமராஜ்ஜியம் முடிவுக்கு வந்தது.

ரோமாபுரியின் பரிதாப நிலையை, கி.பி. 410-ல், உலகம் கண்டது. ஒருக்காலும் அழியாதென்றுகருதியிருந்த இராஜ்ஜியம் அழிந்தது. அதுவுமல்லாமல், பகைவர்கள்ரோமராஜ்ஜியத்தைச் சேர்ந்த கார்த்தேஜ் நகரத்தையும் முற்றுகை போட்டார்கள். இத்தகைய சம்பவம் நடக்கும் பொழுது தான் ஆகஸ்தீன் தம்முடைய பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பை எய்தினர்.

ஆகஸ்தீன், தம்முடைய முப்பத்திரண்டாம் பிராயத்தில், எம்பெருமானுக்குரிய பரிபக்குவ நிலையை அடைந்தார். அவர் தமது பரிபக்குவ நிலையை, ஒரு மறுபிறப்பாகச் சிறப்பித்துக் கூறுகிறார். தாம் கடவுளிடத்தில் எங்ஙனம் படிப்படியாய் அணுகப்பெற்றார் என்பதைக் குறித்து, தாம் எழுதிய பாவ அறிக்கை என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இப்புத்தகத்தை அவர் ஞானஸ்நானம் பெற்றுப் பத்து வருடம் சென்றபின் எழுதினார். இப்புத்தகத்தில் கடவுளோடு தாம்பேசுவதாகப் பாவித்துத் தம்முடைய துக்கம், இன்பம், ஆநந்தம், அன்பு, பக்தி இவைகளைத் தெளிவாகவும், உண்மையுடனும் வெளியிடுகின்றார். அவர் தம்முடைய பாவங்களுக்குச் செய்த ஒரு நோன்பு (பிராயச் சித்தம்) போல் இப்புத்தகத்தை எழுதியுள்ளார். அவரது வாழ்க்கை வரலாற்றைக் குறித்து நாம் அறிய விரும்பும் விஷயங்கள் இதில் காணப்படவில்லை. ஆன்மாவுக் கடுத்தவிஷயங்களில்தான் அவரது வாழ்க்கை நம் எல்லோருக்கும் ஒரு தூண்டுகோலாய் விளங்குகிறது.

இவரது பிறப்பைப் பற்றித் தொடக்கத்திற் கூறினோம். கிறிஸ்துவ மார்க்கம் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமாயிருந்த போதிலும், ஆகஸ்தீனின் தகப்பனாகிய பட்டீஷியஸ் அம் மார்க்கத்தில் சேரவில்லை. தமது இல்லாளாகிய மானிக்கியா தமது மகனைக் கிறிஸ்துவ மதக் கொள்கையின்படி வளர்க்கவும், ஞானஸ்நானம் பெறவும் பட்டீஷியஸ் அனுமதி தரவில்லை. ஆகஸ்தீன் சிறு வயதிலேயே மிகவும் புத்தி சாதுர்யமுள்ளவராய்க் காணப்பட்டபடியால், தகப்பனார், தாம் ஏழையாயிருந்தபோதிலும்

அவரைச் சிறந்த படிப்பாளியாக்க விரும்பினார். தமது சொந்த ஊராகிய தகஸ்டேட்டில் கல்வி கற்றபோதும், பின்பு கார்த்தேஜிலுள்ள பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றபோதும், ஆகஸ்தீன் தம்மைச் சேர்ந்தவர்களைக் காட்டிலும் தேர்ச்சியடைந்து, புத்தி சாதுர்யத்தில் யாவருக்கும் மேலாக விளங்கினார். ஆனால் இந்தச்சிறுவயதிலேயே ஆகஸ்தீனின் தகப்பனார் மரணமடைந்தார். அவர் தாம் மரணமடைவதற்குச் சில காலத்திற்கு முன் கிறிஸ்தவரானார். தம் கணவர் இறந்தபின்னர், மனைவியாகிய மானிக்கா தமது மகனிடத்துக்குப் போய் அங்கே தங்கினார். இதன்பின், ஆகஸ்தீன் உபந்நியாஸம் செய்வதில் மற்றெல்லாரைக் காட்டிலும் தலைசிறந்து விளங்கினார். அதன் மூலமாய் ஜனங்களிடையே அதிக பிரக்யாதி யடைந்தார். கி. பி. 383-ம் வருடத்தில் அவர் ஆப்பிரிக்காவைவிட்டு, இத்தாலி தேசத்திற்குப் போய் அங்கே மிலான் நகரத்திலுள்ள பல்கலைக் கழகத்தில் 'பேச்சுவன்மை' என்னும் பாடத்திற்குப் பண்டிதராக நியமிக்கப்பட்டார்.

இங்கிருக்கும்பொழுதுதான் அவர் அம்புரோஸ் அத்தியட்சகருடன் பழகினார். கி. பி. 387-ம் வருஷம் 'உயிர்த்தெழுந்த பண்டிகை' யன்று அம்புரோஸ் அத்யட்சகரால் ஞானஸ்நானம் பெற்று, ஆப்பிரிக்காவுக்குத் திரும்பி, தம்முடைய ஐஸ்வரியத்தையும், சொத்து சுதந்திரத்தையும் ஏழை மக்களுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, ஓர் ஆச்சிரமத்தை ஸ்தாபித்து அதில் சில சிநேகிதர்களோடு தம் ஜீவியத்தை ஜெபதபங்களில் செலவழித்து வந்தார். மூன்று வருடங்களுக்குப் பின்னர் தம்முடைய விருப்பத்துக்கு மாறாக ஒரு போதகரின் உத்தியோகத்தை ஒப்புக்கொண்

டார். கி. பி. 395-ஆம் ஆண்டில் ஒரு அத்தியட்சகராகி அது முதல் ஆப்பிரிக்காவில், ஹிப்போ என்னும் சிறிய திருச் சபையிலேயே உழைத்து வந்தார். இக்காலத்தில் இவர் செய்த பிரசங்கங்களும், எழுதிய புஸ்தகங்களும், நிருபங் களும், ரோம ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவர்களின் மனத்தை யெல்லாம் புதுப்பித்ததுமல்லாமல், இந்நாள் பரியந்தமும் யாவருக்கும் எழுப்புதற்குரியனவாயிருக்கின்றன. கி. பி. 410-ஆம் வருடத்தில் ரோம ராஜ்ஜியம் நிலை குலைந்து போனதைக் கண்டு கிறிஸ்து மதத்திற்கே, ஒரு பெருங் குறைவு வந்துவிட்டதே யென்று மனச் சோர்வுற்றிருந்த வர்களைத் திடப்படுத்தும்படி 'கர்த்தரின் ராஜ்ஜியம்' என்ற தம்முடைய சிறந்த புஸ்தகத்தை எழுதினர். கி. பி. 430-ஆம் வருஷத்தில் மிலேச்சர்களாகிய 'வாண்டல்ஸ்' ஜாதியார் ஆகஸ்தீன் இருந்த 'ஹிப்போ' பட்டணத்தை முற்றுகையிட்டனர். ஆகஸ்தீனுக்குத் தம்மைச் சேர்ந்தவர் களை விட்டுவிட்டுப் பிழைத்தோட விருப்பமில்லாதபடியால் அவர்களோடேயே இருந்தார். அந்நகரத்தைச் சிறைபிடிப் பதற்குச் சில நாட்களுக்கு முன் ஆகஸ்தீன் வியாதியால் துன்புற்று மரணமடைந்தார்.

I. வினாக்கள்

1. கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் ரோம ராஜ்ஜியம் எந்நிலையி லிருந்தது ?
2. 'பாவ அறிக்கை' என்னும் புத்தகத்திலிருந்து நாம் தெரிந்துகொள்வன யாவை?
3. 'கர்த்தரின் ராஜ்ஜியம்' என்ற நூல் தோன்றிய வர லாறு யாது ?

4. பொருள் கூறுக: ஞானஸ்நானம், உயிர்த்தெழுதல், பரியந்தம், பூதவுடம்பு, புகழுடம்பு.

5. பிரித்தெழுதுக: புத்துயிர், பல்லாண்டு, பாதாரவிந்தம்.

II. கட்டுரை யாக்கம்

ஆகஸ்தீன் தம் வரலாற்றைத் தாமே கூறுவது போல் ஒரு பக்கத்தில் இச்சரிதையை எழுதுக.

III. இலக்கணம்

நிலைமொழி யீறும் வருமொழி முதலும் புணர்வது புணர்ச்சி. இந்த மாதிரி சொற்கள் புணர்கையில், இடையில் புதிதாக ஓர் எழுத்துத் தோன்றுவதும், இல்லையேல் ஒன்று மற்றொன்றாகத் திரிதலும், இல்லாவிட்டால் ஓர் எழுத்துக் கெட்டுப் போதலும் உண்டு. இவை முறையே தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் எனப்படும்.

அலுவல்களை[ச்] செய்வதில்—தோன்றல் விகாரம்.

குற்ற(ங்) குறை—திரிதல் விகாரம்.

பரிதாப(ம்) நிலை—கெடுதல் விகாரம்.

IV. வாக்கிய அமைப்பு

பிறவினையாக்குக: 1. அவன் கலங்கினான். 2. நீ வருந்தாதே. (இடையிலுள்ள மெல்லொற்றை வல்லொற்றாக்கினால் பிறவினையாகும்.)

பகுதி இரட்டித்துப் பிறவினை ஆவதும் உண்டு. (உ-ம்.) ஏறு - ஏற்று, ஓடு - ஓட்டு.

12. நான் கண்ட நல்லிடங்கள்

(ஒரு கடிதப் பகுதி)

பேரன்புடையீர் !

வணக்கம் பல. நல்லேன்; நல நிலை தெரிவிக்க வேண்டுவல்.

முன்னர் எளியேன் அறிவித்தவாறே இடைமருது முதலிய பல்லூர்கட் கேகி 21-4-29 காலை மீண்டோம். திருவிடைமருதூரில் அம்பிகை கோயிற் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இடைமருது சிறந்த தலமென்பதை நீங்கள் அறிவீர்களன்றோ? இது சோழர்கள் காலத்தில் செப்பனிடப்பட்ட கோயிலை யுடையது. இத்தலத்தில் அம்பிகை வலப் பக்கத்தில் கோயில் கொண்டிருக்கிறாள். இங்ஙனம் இருக்கும் தலங்கள் சக்திப்ராதான்யமானவை என்ப. மிகப் பெரிய கோயில். ஈசுவரன் கோயிலைச் சுற்றியுள்ள மதிலிற் சுண்ண வுருவங்கள் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. ஈசுவரனுடைய மூர்த்தி பேதங்கள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இத்தலத்தில் முருகனுடைய திருவுருவம் எங்கும் அமையா நலனொடு திகழ்கின்றது. மயில் மீதேறிய கோலம்; மயிலின் இருபுறமும் தொங்கவிடப்பட்ட திருத்தாள்கள்; ஆறுமுகங்கள்; யாவும் உள்ளின், உள்ளம் கொள்ளை கொள்ளும். இங்கு மூகாம்பிகை என்னும் பெயரோடு தவஞ் செய்யும் கோலத்தில் அம்பிகை எழுந்தருளி யிருக்கும் ஆலய மொன்றுண்டு.

பின்பு தாராசுரம் என்ற தலத்திற்குச் சென்றோம். இரண்டாவது இராஜ ராஜன் மகன் மூன்றாம் குலோத்

துங்கன் என்ற சோழன் இக்கோயில் திருப்பணி செய்தான். இங்குப் பல வீதிகளும், பல கோபுரங்களும் இருந்தன. இதனை யுள்ளிட்ட பல ஊர்கள் சேர்ந்து சோழர்களுடைய ஒரே இராஜதானி நகரமா யிருந்தது. சிற்பம் இக்கோயிலில் தாண்டவ மாடுகின்றது. ஓர் அங்குல இடத்தில் ஒரு புராண கதை சிற்பத்துள் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது பல கோபுரங்கள் இடிந்திருக்கின்றன; சில இடிந்து கொண்டும் வருகின்றன. அரும் பெரும் சிற்பக் கருவூலங்கள் மண்ணோடு புதைந்தன; புதைகின்றன; புதைந்தேவிடும். இனிமேல் அவைகளுக்கு மீட்சியில்லை. அவைகளைப் பார்க்கையில் எங்களுக்குத் தாங்கொணாத் துயரம் தலைக்கொண்டது; என் செய்வது!

நாடக நூல்களின் இலக்கியமாக அளவற்ற ஓவியங்களும் அங்கே காணப்படுகின்றன. பல விதமான கூத்துக்கள், மூர்த்தி பேதங்கள் இவைகள் அளவிட முடியா. திரிபுர தகனம், இராவணன் கைலை யெடுத்தல் முதலிய அழகிய உருவங்கள் கண்டு களிப்பனவே யன்றிக் கூறித் தெளிய வரியன. நாயன்மார்களுடைய சரிதங்களும் ஓவியங்களாற் சமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள இராஜ கம்பீரன் திருமண்டபம் என்று பெயர் பொறிக்கப்பட்ட மண்டபமொன்று தேர்வடிவினதாகக் குதிரை, வண்டியின் ஆழிகள், இவைகளோடும் சமைக்கப் பட்டிருக்கிறது. இம்மண்டபத்திலுள்ள ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு புராணகதை—எல்லாம் அப்படியே ஓவியத்தால் அமைந்தவை—கண் களிக்கும் காட்சி!

மறுநாள் தஞ்சை வந்து சேர்ந்தோம். தஞ்சாவூர்க் கோவிலைப்பற்றி நீங்கள் கேள்வியுற் றிருக்கலாம். சோழப் பெருங்குலத்தின் பிற்காலப் பரம்பரையில் ஆண் சிங்கமாக விளங்கிய முதல் இராசராச சோழன் ஆக்கிவைத்த அக்கோயில், அவனுடைய பெருமையை உலகிற்குக் காட்டிக்கொண்டு நிற்கிறது. 'இராச ராசேச்வரம்' என்பது அக்கோயிலின் பெயர். தமிழ் நாட்டுச் சிற்பத்திறனுக் கும், சோழவரசர்களுடைய பக்திக்கும் ஒரு சிறந்த அடை யாளமாக நிலவும் அக்கோயிலைக் காணும் அவா நீண்ட நாளாக என் நெஞ்சில் இருந்தது.

அன்று வானம் மந்தார மிட்டிருந்தது. நேரம் மாலை மூன்று மணி..............அவர்களுடன் தஞ்சைப் பெரிய கோயிலுக்குச் சென்றேன். புறத்திலே இருந்த அகழி யும், மதிலும் காவியங்களில் இராசதானி நகரங்களை வரு ணித்திருக்கும் வருணனைகளை நினைவூட்டின. இப்பொழுது அகழி தூர்ந்து வருகின்றது. உள்ளே புகுந்து சென் றேன். குன்றுபோலுயர்ந்த நந்தி முன்பு இருந்தது. அஃது ஒரே கல்லாற் சமைந்தது.

மலைபோலுயர்ந்த கோபுரத்தைக் கொண்ட விமா னத்தைச் சுற்றிப் பரந்த இடம் இருக்கிறது. அந்த விமானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே சுற்றி வந்தோம். சுவர்களில் இருந்த சிற்பங்களையும் கவனித் தோம். நாயன்மார்களுடைய உருவங்களைப் பார்த்தோம். நடன வகைகளை நோக்கினோம். சிவ பிரானுடைய பல மூர்த்தங்களைத் தரிசித்தோம். சிற்ப எழிலின் முழுத்திற னும் அங்கே கொலு வீற்றிருப்பதாகவே நாங்கள் எண்ணி னோம். அந்த எண்ணம் பிழை யென்பதைச் சுப்பிர

மணியர் ஆலயம் காட்டி விட்டது. ஏன், தெரியுமா? அவ்வாலயம் முன்பு பார்த்த விடத்தைவிட அத்துணை அழகு வாய்ந்தது! கல்லில் இழைப்பு வேலை செய்த அந்தச் சிறிய ஆலயத்தைக் கண்டவுடன் என்னை அறியாமலே அழுகை வந்துவிட்டது. இத்தகைய உயர் நிலையில் இருந்த தமிழ் நாட்டுச் சிற்பமும், அவற்றிற்கு நிலைக்களனாக இருந்த கோயில்களும் இப்பொழுது ஆதரிப்பாரற்று அழிந்து வருகின்றனவே என்ற எண்ணம் என் கண்களிலிருந்து நீர்த்துளிகளாக வெளிப்பட்டன.

சிலா சாஸனங்கள்! தஞ்சைக் கோயிற் சிலா சாஸனங்களை உலகமே புகழ்வதை நாங்கள் நன்கு அறிந்திருந்தோம். இராசராசனும், அவனுடைய குலத்தினரும் செய்த தர்மங்களைப் பதிவு செய்திருக்கும் 'சப் ரிஜிஸ்தரார் ஆபீஸாக' அக்கோயில் விளங்குகிறது. 'கன்மேலெழுத்துக்கு நேர்' என்று சொல்வார்கள். இங்கே அப்பெரு வள்ளல்கள் செய்த நலன்கள் கல்மேலெழுத்தாகவே இருக்கின்றன. கோயிலை நிருவகிக்கும் முறைகளும், கோயிற் பணி புரிவாருடைய ஒழுங்கும், அவர்கள் செய்யவேண்டிய பணிவிடைகளும், கோயிலுக்குரிய பல வகைச் சொத்துக்களும், விழாக்களின் நிகழ்ச்சி முறையும், பிறவும் அந்தச் சாஸனங்களில் உள்ளன. அவற்றை எல்லாம் கல்லில் எழுதியிருக்கும் அந்த மன்னர்களுடைய புகழ் இன்றளவும் நிலைத்திருக்க, அவர்கள் அமைத்த அமைப்புகள் மட்டும் மாறிப்போயின!

எவ்வளவோ சிறப்பாகச் சுடர்விட்டிலங்கிய அத்திருக்கோயிலின் உள்ளே இப்பொழுது ஒருவன் செல்லுகையில் ஒரு மலைக் குகையில் செல்லுவதை யொத்த உணர்ச்சியை

யே அடைகிறான். உள்ளே கோயில் கொண்டெழுந்தருளி யுள்ள பெருவுடையார் அன்று போலவே இன்றும் இருக்கி றார். ஒளி சூழ்ந்து விளங்கிய காலம்போய் இருள் சூழ்ந்து அழுங்கும் காலத்தில் அவருடைய பெரிய திருமேனி அன்று கண்ட திருக்கோலத்தோடே விளங்குகின்றது.

மாலைக்காலம் நெருங்கிவிட்டதனால் மேலும் பலவற்றை யும் பார்க்க இயலவில்லை; எனினும் பார்த்த அளவில் ஒரு வகைத் திருப்தியும், பெருமையும், இரக்கமும் எங்கள் மனதிற் குடிகொண்டன.

I. வினாக்கள்

1. இப்பாடத்தில் ஆசிரியர் குறிக்கும் ஊர்களை வரிசை யாக எழுதுக.
2. இடைமருதில் உள்ள கோவில்கள் எவை?
3. தாராசுரத்தில் அமைந்த சிற்பத்திறனைக் குறிக்க.
4. சிலாசாஸனம் என்பது யாது? தஞ்சைச் சாஸனங்கள் தெரிவிப்பது யாது?
5. விளக்குக: சக்திப் பிராதான்யமானவை, சுண்ண வுரு வங்கள், கருவூலம், ஓவியம், சிற்பம்.

II. கட்டுரை யாக்கம்

நீங்கள் பார்த்துள்ள ஓரிடத்தை வருணித்து உம் நண்ப ருக்கு ஒரு கடிதம் எழுதுக.

III. இலக்கணம் (ண், ள், ன், ல், பின் வலி)

1. நிலைமொழி யீற்றில் ண், ள் வந்து வருமொழி முதலில் க, ச, பக்களில் ஒன்று வந்தால் அந்த ஈறு பல விடங்களில்— டகர மெய்யாகும்.

உ-ம். மண் + குடம் = மட்குடம்.

மண் + சுவர் = மட்சுவர்.

மண் + பாண்டம் = மட்பாண்டம்.

கள் + சாடி = கட்சாடி.

கள் + பாண்டம் = கட்பாண்டம்.

2. நிலைமொழியீற்றில் ன், ல் வந்து, வருமொழி முதலில் க, ச, பக்களில் ஒன்று வந்தால், அந்த ஈறு பல விடங்களில் றகர மெய்யாகும்.

உ-ம். பொன் + காப்பு = பொற்காப்பு.

பொன் + சுண்ணம் = பொற்சுண்ணம்.

பொன் + பீடம் = பொற்பீடம்.

கல் + கண்டு = கற்கண்டு.

கல் + சுவர் = கற்சுவர்.

கல் + பீடம் = கற்பீடம்.

3. நிலைமொழியீற்றில் ண், ள் வந்து, வருமொழி முதலில் தகரம் வந்தால் அந்தத் தகரம் டகரமாகும்.

உ-ம். மண் + கலம் = மண்டலம்.

முள் + தாள் = முட்டாள்.

4. இவ்வாறே ன், ல் பின் வரும் தகரம் றகரமாகும்.

உ-ம். பொன் + தாலி = பொற்றாலி.

கல் + தூண் = கற்றூண்.

13. மணிமேகலையின் தனிமை

[மாதவிக்குக் கோவலனிடமாகப் பிறந்தவள் மணிமேகலை. இளமையிலேயே துறவு பூண இவள் துணிவு கொள்கிறாள். ஒருநாள் சுதமதி என்ற தோழியுடன் பூப் பறிக்க உவவனம் என்ற சோலைக்குப் போகிறாள். அங்கே ஓர் அரசிளங்குமரன் அவளைக் கவர்ந்துபோக முயல்கிறான். இதனை யறிந்த மணிமேகலா தெய்வம் வேறு பெண் வடிவில் வந்து மணிமேகலை சுதமதிகளுடன் பேசிக்கொண்டிருந்து, அவ்வனத்திலேயே அவர்கள் தூங்கியபின் மணிமேகலையை மணிபல்லவம் என்ற தீவுக்கு எடுத்துச் சென்று விடுகிறாள். மணிபல்லவத்தில் துயிலெழுந்த மணிமேகலையின் செய்தி இங்கே தரப்படுகிறது.]

வாங்குதிரை யுடுத்த மணிபல் லவத்திடை
முடக்காற் புன்னையும் மடற்பூந் தாழையும்
வெயில்வர(வு) ஒழித்த பயில்பூம் பந்தர்
அறல் விளங்கு நிலாமணல் நறுமலர்ப் பள்ளித்
துஞ்சு துயில் எழூவும் அஞ்சில் ஓதி
வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று
பண்டறி கிளையொடு பதியும் காணாள்,
கண்டறி யாதன கண்ணிற் காணா
"உவவனம் மருங்கில் ஓரிடம் கொல்லிது!
சுதமதி! ஒளித்தாய்; துயரம் செய்தனை;

நனவோ கனவோ என்பதை அறியேன் ;
வல்லிருள் கழிந்தது ; மாதவி மயங்கும்;
மெல் வளை! வாராய்; விட்டகன் றனையோ?
விஞ்சையில் தோன்றிய விளங்கிழை மடவாள்
வஞ்சம் செய்தனள் கொல்லோ? அறியேன்;
ஒருதனி அஞ்சுவேன், திருவே! வா" எனத்
துறையும், துறைசூழ் கெடுமணற் குன்றமும்
யாங்கணும் திரிவாள், பாங்கினம் காணாள்;
அறற்றினள் கூஉய் அழுதனள் ஏங்கித்
தாழ்த்துயர் உறுவாள் தந்தையை உன்னிக்
"கோற்றொடி மாதரொடு வேற்றுநா(டு) அடைந்து
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து
ஐயா வோ!" (வென்று) அழுவாள் முன்னர்
பொருவறு சிறப்பிற் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை தோன்றிய தாங்கென்.

—மணிமேகலை

I. குறிப்புரை

1. வாங்கு—வளைந்த ; திரை—அலை.
2. முடக்கால்—வளைந்த அடிமரத்தை உடைய.
4. அறல்—ஜலம் ; நுண்ணியமணல்.
5. அஞ்சில் ஓதி—அழகிய சிலவாகிய முடியினையுடையாள்.
7. கிளை—சுற்றம். பதி—ஊர் ; புகார்.
21. கோல் தொடி—அழகிய திரட்சியான வளையல்.
22. வை—கூர்மை. அகலம்—மார்பு.
24. பொரு அறு—ஒப்பற்ற. புரையோர்—உயர்ந்தோர்.

I. வினாக்கள்

1. மணிமேகலை வேறிடத்து இருப்பதற்குக் கூறப்பட்ட உவமை யாது?
2. அவள் மனத்துள் கொண்ட ஐயங்கள் எவை?
3. தந்தையைப்பற்றி அவள் யாது உன்னினாள்?
4. விஞ்சையில் தோன்றிய மகள் யார்? அவள் செய்தது யாது?

II. கட்டுரை யாக்கம்

இப்பகுதியைத் தெளிவான வசன நடையில் எழுதுக.

---

14. தாமஸ் எடிசன்

மனித சமூகத்திற்கு உபயோகமான கருவிகளை அமைத்தவர்களில் **தாமஸ் ஆல்வா எடிசன்** முக்கியமானவர். இவர் அமெரிக்கா நாட்டில் ஓஹியோ மாகாணத்தில் உள்ள மிலான் நகரில் கி. பி. 1847-ஆம் வருஷம் பிறந்தார். இளமையில் இவர் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்தாரேயன்றி அங்கு போதிக்கப்பட்ட படிப்பில் அவருக்கு ஊக்கம் உண்டாகவில்லை. வீட்டில் அவருடைய அன்னை கல்வி சிறிது போதித்து வந்தாள். தமக்கு நூதனமான கருவிகளையோ, விஷயங்களையோ கண்டால் அவைகளைப் பற்றி நன்கு அறிந்தோர்களைப் பல கேள்விகள் கேட்பார். இயற்கைப் பொருட் சாஸ்திர ஆராய்ச்சிகளில் அவருக்கிருந்த விருப்பம் சிறுவயதிலேயே வெளிப்பட்டது.

ஓர் இருப்புப் பாதை வண்டித் தொடரில் தினசரிப் பத்திரிகை விற்கும் பையனாக அவருடைய வாழ்க்கை

தொடங்கிற்று. வண்டியிலேயே சில பொருள்களைச் சேகரித்துக்கொண்டு சில ஆராய்ச்சிகளைச் செய்துவந்தார்.

ஒரு நாள் அவ்வாராய்ச்சியால் அருகிலிருந்த பொருள்கள் தீப்பற்றிக் கொண்டன. கோபங் கொண்ட வண்டிக் காப்பாளர் அவரை வண்டியை விட்டு இறக்கி விட்டனர்.

அவ்விருப்புப் பாதையில் தந்திக் குமாஸ்தாவாக இருந்த ஒருவரை ஓர் ஆபத்திலிருந்து எடிசன் காப்பாற்றியதால் அக்குமாஸ்தா மிக்க நன்றியறிதலுடன் தந்தி யடிக்கும் விதத்தையும் அக்கருவியின் இலக்கணங்களையும் (தமக்குத் தெரிந்தவரையில்) அவருக்குக் கற்பித்தார். பல விடங்களில் தந்தி குமாஸ்தாவாகவிருந்து தேர்ச்சி பெற்று நியூயார்க்கு நகரம் வந்தடைந்தார்; நியூயார்க் "கோல்ட் அண்ட் ஸ்டாக்கு தந்திக் கம்பெனி" யாரிடம் வேலையிலமர்ந்தார். தந்தி கண்டுபிடித்துச் சில வருடங்களேயாகி யிருந்தமையால் அக்காலக் கருவிகள் இக்காலத்தவைபோல உயர்ந்தவை யல்ல; அடிக்கடி வேலை செய்யாமல் நின்றுவிடும். ஒரு நாள் எடிசன் சேர்ந்த நிலையத்தில் கருவிகள் வேலை செய்யாமல் தடைப்பட்டன. அங்கிருந்த பலரும் முயற்சி செய்தும் கருவிகள் சீர்பெறவில்லை. அருகே யிருந்த எடிசன் முத

லாளியின் உத்தரவின்மேல் இரண்டே நிமிடங்களில் எல்லாக் கருவிகளையும் ஒழுங்கு படுத்திவிட்டார். எடிசனை மிகவும் மெச்சிய முதலாளி, அந்தக் காரியாலயத்தின் நிருவாகராக அவரையே நியமித்துச் சம்பளத்தை மிகவும் உயர்த்தினர்.

உலகத்தோருக்குப் பயன்படக்கூடிய பல கருவிகளைக் கண்டுபிடித்தலையே தம்முடைய வாழ்க்கையின் இலட்சியமாக எடிசன் கொண்டார். பணக்கஷ்டம் இப்பொழுது நீங்கியதால் ஆராய்ச்சிகளில் வெகு தீவிரமாக இறங்கினர். தந்திக் கருவியில் பலவித முன்னேற்றங்களைச் செய்தார். அனுப்பப்படும் செய்தியைத் தானகவே ஒரு கடிதத்தில் குறித்துக்கொள்ளும் ஒரு தந்திக் கருவியுண்டு. இதற்கு "ஆடோ மாடிக் தந்தி" (Automatic Telegraph) என்று பெயர். சாதாரணத் தந்தியிற் காட்டிலும் இதில் வேகமாகச் செய்திகளை அனுப்பலாகும். எடிசன் காலத்தில் இத்தந்தியின் மூலமாக நிமிடத்திற்கு இருநூறு வார்த்தைகள் வீதமே அனுப்ப முடிந்தது. இராப்பகலாகப் பல நாட்கள் படித்து ஆராய்ச்சி செய்து நிமிடத்திற்குச் சுமார் மூவாயிரம் வார்த்தைகளை அனுப்பும் வகையை அவர் கண்டுபிடித்தார். தாம் அமைத்த நூதனக் கருவிகளுக்கெல்லாம் பாதுகாப்புப் (Patent) பெற்ருர்.

டெலிபோன் (Telephone) கருவியை முதலில் உபயோகப்படும் வண்ணம் சீராக்கி யமைத்தவர் கிராஹம் பெல் (Graham Bell) என்ற விஞ்ஞான சாஸ்திரி. அனுப்பும் கருவியும் (Transmitter) ஏற்கும் கருவியும் (Receiver) ஒரே மாதிரி அமைக்கப் பெற்றிருந்ததால் பெல் கண்டுபிடித்த டெலிபோனை வெகு தூரங்களுக்கு உபயோகித்தல்

கூடாமலிருந்தது. கரியை உபயோகித்து ஒரு நேர்த்தியான அனுப்பும் கருவியை (Cardon Transmitter) எடிசன் அமைத்தார். இக்கருவியையும் பெல் கண்டுபிடித்த ஏற்குங் கருவியையும் உபயோகித்ததால் டெலிபோன் நன்ருக அமைந்தது. பலருக்குப் பயன்படுவதைக் கருதி அக்கருவியின் காப்பைப் பெல்லுக்கு எடிசன் விற்றுவிட்டார்.

மின்சார ஆர்க்கு விளக்குகளே அக்காலங்களில் இருந்தன. அவைகள் மிகவும் ஒளியோடிருந்தமையால் வீடுகளில் உபயோகிக்கத் தகுதியற்றிருந்தன. மின்ஸாரத்தை ஒரு மெல்லிய கம்பியில் ஓட்டினுல் சூடுண்டாகும்; கம்பி மிக மெல்லியதாக விருந்தால் சூடு மிக அதிகமாகிக் கம்பி ஒளிவிடக்கூடும். பல உலோகங்களைக் கம்பியாக இழுத்து அவர் உபயோகித்தார்; அவைகள் சரியாக உழைக்கவில்லை. கரியையே கம்பியாகச் செய்து பிராணவாயு நீக்கப்பட்ட ஒரு கண்ணுடிக் கூண்டுக்குள் அதை வைத்து மின்சாரத்தை ஓட்டினுர். பலமணி நேரங்கள் அக்கரிக்கம்பி ஒளியுடன் பிரகாசித்தது. இவ்விளக்கு அவருக்குத் திருப்தியாக விருந்தது; இம்மாதிரியான விளக்குகள் வீடுகளுக்கு உபயோகப்பட்டன. இக்காலத்தில் "டங்ஸ்டன்" "ஓஸ்மியம்" முதலிய அரிய உலோகக் கம்பிகளையே இத்தகைய விளக்குகளில் உபயோகிக்கின்றனர்.

சென்னை போன்ற நகரங்களில் ஒரு வீதிவழியாகப் புறப்பட்டால், ஒரே காலத்தில் பல கடைகளிலிருந்தும் கிராமபோன் சங்கீதங்கள் தோன்றி நம்மை வருத்துவதால் அக்கருவியைக் கண்டுபிடித்தவரைச் சிற்சில சமயங்களில் சபிக்க எண்ணியிருக்கிறேம். ஆயினும் மிதமாக

வும், ஏற்ற காலங்களிலும் அனுபவித்தால் கிராமபோன் ஒரு நல்ல பொழுது போக்கே. சங்கீத மகா வித்துவான் களுடைய குரல்களையும் பதிப்பித்துக் கொள்ளலாம். அக் கருவியை உபயோகப்படும் விதமாக முதலில் அமைத்தவர் எடிசனே. அவர் கண்டு பிடித்த கருவிக்கு 'போனகிரூப்' என்று பெயர். தற்செயலாக நடந்த ஓர் சம்பவத்தால் அவர் இக்கருவியை அமைக்க முடிந்தது. தந்தியில் உப யோகப்படும் குறிகள் மேடாகச் செதுக்கப்பட்டிருந்த ஒரு தகட்டால் ஒரு கம்பியை ஆட்ட முயன்று கொண்டிருந் தார். அப்பொழுது அக்கம்பி பலவித ஒலிகளைச் செய் தது. இதில் எடிசனுடைய கவனம் சென்றது. மேடு பள்ளங்களுடைய ஒரு தகட்டால் இவ்வித ஒலிகள் உண் டாக்கப்படுவதால் எதிர் மாறாக ஒலியால் ஒரு தகட்டில் மேடு பள்ளங்களை உண்டாக்க முடியுமா வென்பதைச் சோதிக்க எண்ணினார். வாயுவின் அணுக்களின் ஆட்டத் தால் ஒரு மெல்லிய தகட்டையும் அதனுடன் பிணைக்கப் பட்டிருந்த ஓர் ஊசியையும் ஆட்டச் செய்தார். அவ்வூசி ஒரு மெழுகு தடவிய கடிதத்தில் பட்டுக்கொண்டிருந்தது; கடிதம் ஓர் உருளையில் சுற்றப்பட்டும் அவ்வுருளை தன்னைத் தானே சுற்றிக்கொண்டும் மெதுவாக ஒரு பக்கமாக நகர்ந்துகொண்டும் இருந்தது. இந்த உபாயத்தால் வளைந்து, வளைந்து செல்லக்கூடிய ஒரு கோடு அக்கடிதத் தில் வரையப்பட்டது. உருளையை முன்னிருந்த இடத்தில் வைத்து ஊசியைக் கோட்டின் ஆரம்பத்தில் வைத்து அதே வேகத்துடன் உருளையைச் சுற்றியதும், மெல்லிய குரலுடன் முதலில் பாடப்பட்ட பாட்டே வெளிவந்தது. இப்பொழுதுள்ள கிராமபோன் இதே முறையில் செய்யப்

பட்டாலும், உருளைக்குப் பதில் தட்டையான தகடுகள் உபயோகப்படுகின்றன.

சினிமா என்ற ஓடும் படக் காட்சிக்கும் அடிசன் அடிகோலினர். இவர் கண்டு பிடித்த கினிடாஸ்கோப் (Kinetoscope) என்ற ஒரு கருவியில் அசையும் பொருள்களைச் செகண்டிற்குப் பதினறுக்குக் குறையாத வேகத்துடன் எடுத்த போட்டோப் படங்களை அதே வேகத்துடன் தொடர்ச்சியாக ஒரு பிரகாச ஒளிக்கு முன்வரச் செய்யக் கூடும். இவ்வொளிக் கிரணங்கள் அப்படங்களைக் கடந்து சில பூதக் கண்ணுடி (Lens) கள் வழியாகச் சென்று ஒரு திரையில் விழுந்து படம் பிடிக்கப்பட்ட பொருள்களை அவைகள் அசைந்து கொண்டிருந்தவாறே காட்டும்.

மேல் ஒருவாறு விளக்கப்பட்டவை எடிசனல் அமைக்கப்பட்ட முக்கியமான சில கருவிகள். இவைகளே யன்றிப் பல சிறிய கருவிகளையும் இவர் கண்டு பிடித்துள்ளார்! இவை விரிப்பிற் பெருகும். தமக்குக் கிடைத்த செல்வத்தைக் கொண்டு விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிக்குச் சாதனமான இடங்களை அமைத்தார். அறிவுள்ள இளைஞர்களைத் தெரிந்தெடுத்து ஆராய்ச்சித் துறையில் பழக்க வசதிகளைச் செய்தார். 1931-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் அவர் உயிர் துறந்தார்.

I. வினக்கள்

1. இளமை முதல் எடிசன் மனம் எதன்பாற்சென்றது?
2. முதலில் அவர் என்ன வேலையில் அமர்ந்தார்? ஏன் அதை விடலானர்?
3. தந்தி முறையை அவர் எங்ஙனம் அபிவிருத்தி செய்தார்?

4. கிராமபோன் கண்டுபிடிக்கப்பட்ட விதத்தை எழுதுக.

5. ஓடும் படம் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?

II. இலக்கணம்

நிலைமொழி யீற்றில் ண், ள், வந்து வருமொழி முதலில் நகரம் வரில் அந்த நகரம் ணகரமாகும். நிலைமொழி யீற்று ளகரம் அழியும்; இல்லையேல் ணகரமாய்விடும். ஈற்று ணகரம் கெடுதலுமுண்டு.

உ-ம். கண் + நோய்—கண்ணோய்.

உள் + நீர்மை—உண்ணீர்மை.

மாண் + நலம்—மாணலம்.

நீள் + நெறி—நீணெறி.

நிலைமொழி யீற்றில் ன், ன், ல் வந்து, வருமொழி முதலில் நகரம் வரில் அது னகரமாகும். லகரம் னகரமாகத் திரியும்.

உ-ம். பொன் + நகர்—பொன்னகர்.

நல் + நூல்—நன்னூல்.

கால் + நகம்—கானகம்.

வான் + நதி—வானதி.

---

15. நாவடக்கம்

மக்கள் செய்யும் பாவங்கள் மூவகைப்படும். அவை மனத்தாற் செய்யப்படுபவை; மொழியாற் செய்யப்படுபவை; மெய்யாற் செய்யப்படுபவை என்பனவாம். மன மொழி மெய்களின் தூய்மை மிகவும் இன்றியமையாதது. இம் மூன்றினுள் ஒன்றன் தூய்மை கெடினும் பாவம் சம்பவிக்கும். இம்மூன்றாலும் தோன்றும் பாவங்களை நூல்கள் பத்தாக விவரிக்கின்றன. கொலை, களவு, காமம் இம்மூன்றும் உடலில் தோன்றும் பாவங்கள்; பொய், புறங்கூறுதலாகிய குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் இவை நான்கும் சொல்லிற் காணப்படும் குற்றங்கள்; பேராசை, வெகுளி, உண்மையை அறியாமையாகிய மயக்கம் இம்மூன்றும் மனத்தால் நிகழும் பாவங்கள்; ஆகப் பாவங்கள் பத்தாம். இம் மூன்றினுள் நாவினால் வரும் குற்றங்களே அதிகமாக இருக்கின்றன. இம் மனம், வாக்கு, காயங்களுள் வாக்கேந்திரியமாகிய நாவை ஒரு மனிதன் மனம் வைத்தால் எளிதில் அடக்கிக் கொள்ள லாம். நாவடக்கம் எவர்க்கும் இன்றியமையாததாகும்.

நாவினாலே விளையும் நன்மைகளை விடத் தீமைகளே அதிகமாக இருக்கின்றன. இதனை அறிந்த வள்ளுவ நாயனாரும், 'ஒருவர் தாம் காக்கத் தக்க பொருள்களில் எவற்றையேனும் காவாது விட்டுவிடுவார் என்றாலும், அவர் தம் நாவை மட்டும் காத்துக் கொள்ளக் கடவர். அங்ஙனம் நாவை அவர் காவாது விட்டுவிடுவாரே யானால் அந்நாவினாற் சொற்குற்றம் உண்டாகி அவர் துன்புறுவர்' என்றும் கருத்துத் தோன்ற,

"யாகவா ராயினும் நாகாக்க! காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்று கூறியுள்ளார். நாவடக்கம் அவசியம் என்பதைக் கருதியே கடவுள் நாவினை 'வாய்' என்னும் பெட்டியில் அமைத்து அதற்குக் காவலாகப் பற்களென்னும் முப்பத்திரண்டு காவலர்களைக் காவல் வைத்துள்ளார் போலும்!

பண்டங்களை இறைத்துவிட்டால் பொறுக்கிக்கொள்ளலாம்; பணத்தைச் செலவு செய்து விட்டால் மீட்டும் பெறலாம்; சொற்களைக் கண்டவாறு இறைத்துவிட்டால்—பிறரைத் தூஷித்துவிட்டால்—பிறகு பரிகாரம் என்றும் இல்லை. தீயை எடுத்து ஒருவருக்குச் சூடு போட்டுவிட்டால் அந்தப் புண்ணை ஆற்ற மருந்துண்டு. நாவினால் ஒருவரைச் சுட்டுவிட்டால் சுடப்பட்டவர் நெஞ்சில் அப்புண் என்றும் நிலை பெற்றுவிடும். அப்புண் ஆறாமல் வடுவாகவே இருக்கும்.

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்பது பொய்யாமொழி யன்றோ! இதே கருத்தையே கம்பர்,

"வில்லம்பு சொல்லம்பு மேதினியி லிரண்டுண்டு
வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்"

என்று வேறு வகையாகக் கூறியுள்ளார்.

வன் சொல்லுக்கு அம்பும், தீயினாற் சுடப்படும் புண்ணும் உவமைகளாகச் சொல்லப்பட்டன. கோள் சொல்லுதலுக்குப் பொருத்தமான உவமையைக் காணோம்;

கோள் சொல்லுவதனுல் எத்தனை விபரீதங்கள் ஏற்படுகின்றன! எத்தனை குடும்பங்களில் கலகங்கள் நேருகின்றன. எத்தனை பேருடைய நட்புப் பங்கமடைந்து விடுகிறது! 'கோள் சொல்லுவோரைக் கண்டஞ்சித் தேவர்களும் கண்ணிமையாமல் நிற்கிருர்கள்' என்று ஒரு புலவர் சமத்காரம் தோன்றக் கூறியிருக்கிருர். மலையைக் கடுகாகக் காட்டவும், கடுகை மலையாகக் காட்டவும் வல்லது குறளையென்னும் இத் துர்க்குணம். இதனை மனிதன் விட்டொழித்தல் வேண்டும்.

பயனில் சொல்லாவது கேட்போருக்கு யாதொரு பயனையும் தராத சொல்லாகும். சிலர் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமில்லாத சொற்களை 'லொடலொட'வென்று எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கிருர்கள். எவரேனும் நம்மைக் காண வந்த சமயத்தில் அவரிடமுள்ள அரிய விஷயங்களை நாம் தெரிந்துகொள்ளலாம் என்ருல், பயனில் சொல் பேசும் சில வீணர்கள் நம் முன் தோன்றி நமக்குக் கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தை நாம் இழக்கச் செய்து விடுகிருர்கள். நெல்லில் அரிசியே உமியைவிடச் சிறந்தது. அரிசியாகிய உள்ளீடற்றது பதர் எனப்படும். நெல்லோடு பதரும் முளைத்தலை நாம் காண்கிருேம். அப்பதரும் உருவத்தில் நெல்லைப் போன்றே யிருக்கும். இதுபோலவே பயனில் சொல் பேசுகின்றவர்கள் மனித வடிவினரே யாயினும் பதராகக் கருதப்படுகிருர்கள். சிறந்த குணங்களாகிய உள்ளீடு இப் பதடிகள்பால் காணப்படுவதில்லை. திருவள்ளுவர் இவர்களைப் பதடி என்று குறித்துள்ளார்; அவர் கூறிய குறள் வெண்பா பின்வருவது:

" பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்;
மக்கட் பதடி எனல்."

இவ்வடிகளில் முதலில் காணப்படும் 'எனல்' என்பதற்கு 'என்று சொல்லவேண்டா' என்பது பொருள். பின் 'எனல்,' 'என்று சொல்லுக' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

பொய்யால் விளையும் தீமைகளைக் குறித்து நாம் இங்குக் கூற வேண்டுவதில்லை. சிறுவர் முதல் யாவரும் அதன் கொடுமையை அறிந்துள்ளார்கள்.

இத்தகைய தீமைகள் தோன்றுவதற்குக் காரணமான நாவை அவசியம் அடக்கவேண்டும் என்பது இப்பொழுது நன்கு விளங்கவில்லையா? 'நாவுக்கு நரம்பில்லை;' அஃது அப்படியும் பேசும், இப்படியும் பேசும், 'நாவசைய நாடசையும்'. புகை வண்டிகளுக்குச் சாலையிலுள்ள விபத்தைப் புலப்படுத்திச் சாக்கிரதையைத் தெரிவிக்கச் செந்நிறத்தை இக்காலத்தில் உபயோகிக்கிறார்கள். கடவுள் நாவிற்கு இயல்பாகவே செந்நிறத்தைக் கொடுத்து அஃது அபாயகரமான உறுப்பென்பதைக் காட்டி யிருக்கிறார். மனம் என்னும் கொடுங்கோல் மன்னனுக்கு ஐம்பொறிகள் ஏவலாளர்கள். அப்பொறிகளில் அப்பொழுதப்பொழுது மனத்தின் ஏவலைச் செய்து உலகை ஆட்டிவைக்க வல்லது நாவேயாகும். அத்தகைய நாவை அடக்கி ஆளாதவர் பிறரை எப்படி அடக்கி யாளப்போகிறார்களோ? நாவடக்கத்தை வலியுறுத்தி வடமொழியாளரும், 'மௌனேன கலகம் நாஸ்தி' என்றும், 'மௌனம் சர்வார்த்த சாதகம்' என்றும் கூறி யிருக்கிறார்கள்.

நாம் அவசியம் நம் நாவைப் பாதுகாத்தல் வேண்டும். அதிகமாகப் பேசுவது, நம்மிடம் கல்வியில்லை என்பதைக் காட்டி நம்மைப் பல்லோர் நடுவில் அவமானப் படுத்திவிடும்

'வற்றிய வோலை கல கலக்கும்; பச்சோலைக்கு இல்லை ஒலி;' 'நிறைகுடம் என்றும் தளும்புதல் இல்;' இப்பழமொழிகளை நாம் எவ்வாறும் மறுத்தலாகாது. தவளையின் நிறமும், சேற்றின் நிறமும் ஒன்றே; அப்படி யிருந்தும் அது பாம்பின் வாய்ப்படுவது எதனுல்? தன் வாயாலேயே அன்ருே? நுணல் தன் வாயாற் கெடுவது போல் நாமும் நம் வாயாற் கெட்டுப் போவதா?

கேட்பவர்களை வசப்படுத்தக்கூடிய சொற்களைப் பேச வேண்டும்; கேளாதாரும், "இவர்கள் சொற்களை நாம் கேட்கக் கொடுத்து வைக்கவில்லையே!" என்று நினையும் வண்ணம் பேச வேண்டும். அப்படிப் பேசுவது தான் பேச்சு. நாம் ஒரு விஷயத்தைக் கூறப்புகும் முன், 'நாம் யாருக்கு இதைச் சொல்லுகிருேம்? சொல்லும் விஷயம் அவர்களுக்கு ஏற்றதா? இதில் அவர்களுக்குச் சுவை தோன்றுமா?' என்று யோசித்துக் கொண்டு, பிறகு அவசியமானவற்றைச் சில சொற்களில் வைத்துக்கூற வேண்டும்; இப்பழக்கம் இளமையிலிருந்து வந்தாலன்றிப் பிறகு சாத்தியமாகாது.

I. வினுக்கள்

1. பாவங்கள் தோன்றும் வாயில்கள் எவை?
2. மனம், மொழி, மெய்களால் செய்யப்படும் பாவங்களை வகைப்படுத்திக் காட்டுக.
3. நாவைப்பற்றிய குறட்பாக்களைக் கூறுக.
4. வன்சொல்லைப் புலவர் எதற்கு ஒப்பிட்டனர்?
5. பொருள் கூறுக: குறளை, வெகுளி, வடு, உள்ளீடு, நுணல், பரிகாரம்.
6. நாம் பேசும்போது கவனிக்கத் தக்கவை யாவை?

II. இலக்கணம்

முன் வகுப்பில் பகுபத உறுப்புக்கள் ஆறையும் தெரிந்து கொண்டீர்கள்; அவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பன.

இவற்றுள் பகுதி முதலிலும், அதன்பின் சந்தியும், சந்தியைச் சேர்ந்து இடைநிலையும், அதன்பின் சாரியையும், கடைசியில் விகுதியும் நிற்றல் முறையாகும். விகாரம், பகுதி அல்லது சந்திகளில் காணப்படும்.

மாதிரி உறுப்பிலக்கணம்

	பகுதி	சந்	இடை	சாரியை	விகுதி
விவரிக்கின்றன	விவரி	க்	கின்று	அன்	அ
கொடுத்தனர்	கொடு	த்	த்	அன்	அர்
நிற்கிறார்	நில்		கிறு		ஆர்
கண்டது	காண்		ட்	அ	து

('காண்' என்ற பகுதி குறுகியது விகாரம்.)

16. கவியரசு தாகூர்

நமது இந்திய நாட்டின் வடகிழக்கு மாகாணமாகிய வங்கம், 'இந்திய மறுமலர்ச்சியில் மற்ற மாகாணங்களுக்கு முன்னணியில் இருக்கும் சிறப்புக்கொண்டுவிட்டது. பல துறைகளிலும் உறக்கம் கொண்டிருந்த இந்திய மக்களைத் தட்டி எழுப்பச் சென்ற நூற்றுண்டில் தோன்றிய நம் நாட்டுப் பெரியாருள் பலர் வங்கத்தில் தோன்றியவர்களே யாவர். சமய குரவர்களான இராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகானந்தர், அரசியற் பெரியார் பிபின சந்திர பாலர், விஞ்ஞான நிபுணர் ஸர் ஜகதீஸ் சந்திர வசு ஆகிய வர்கள் வங்கத்தைச் சேர்ந்தவர்களே. நமது கவியரசர் ரவீந்தர நாதரும் அம்மாகாணம் அளித்த பெரியாரே யாவார்.

இராஜாராம் மோஹன்ராய் ஏற்படுத்திய 'பிரம்ம சமாஜ'த்தின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் உழைத்த மஹரிஷி தேவேந்திரநாத தாகூரின் கடைசிக் குமாரராக 1861-ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் தேதி ரவீந்திரநாத் தாகூர் பிறந்தார். 'தாகூர்' என்பது அவர்களது குடிப் பெயர். 'தாகூர்' குடியில் தோன்றிய யாவரும் சிறந்த அறிவாளிகளாகவும், வேதாந்திகளாகவும், ஓவியப் புலவர் களாகவும் இருந்து புகழ் படைத்தவர்கள். அம்முறைக்கு இழுக்கில்லா வகையில் ரவீந்திரரும் 'கவியரசாகத்' திகழ்ந் தார்.

தாகூர் குடும்பத்தாருக்குக் கல்கத்தாவிலிருந்த மாளி கையில் ரவீந்திரர் தமது இளமையில் இருந்து வந்தார்.

அப்போதே கவிகள் இயற்றும் இவரது புலமை வெளிப் பட்டது. தாகூர் குடும்ப ஆடவரும், பெண்டிரும் அறிவாளி

களாதலின் அவர்கள் இப்பால கவிக்கு ஊக்கமளித்தனர். அதுவுமன்றி, பள்ளிக்கூடப் படிப்பை அடைவதற்காக இவரைப் பாடசாலையிலும் சேர்த்தனர். ஆனால், இவருக்கு

அப்படிப்பில் மனம் செல்லவில்லை. இவருக்காகத் தனி உபாத்தியாயரும் ஏற்பாடு செய்யப்பட்டார். அவரிடமிருந்தும் ரவீந்திரர் எவ்வித உருப்படியான கல்வியும் அடையவில்லை. "தானே நினைந்தரியும் படிப்பன்றே, தன்னைத்தேற்றுவிக்க முடிப்பாகும்'என்பதற்கொப்ப தாகூர் தாமாகவே சிந்தனை செய்தும், படித்தறிந்துமே பெரிய அறிவாளியானார். இயற்கை காட்சிகளிடத்தில் அவ்விளமையிலேயே இவர் கொண்டிருந்த ஆவலே, இவரது சிந்தனையை எழுப்பப் பெரிதும் காரணமாயிற்று. உதய சூரியனின் உன்னத அழகைக் காண அதிகாலையிலேயே எழுந்து, இவர் வெளியே, கீழ்வானத்தை நோக்கிக் காத்திருப்பாராம். தந்தையான தேவேந்திர நாதருடன் இவர் ஓர் முறை ஹிமாலய யாத்திரை சென்றிருந்தார். ஹிமாலயக் காட்சி இவருக்கு மிகுந்த இன்பத்தை அளித்தது.

ரவீந்திரரின் தமையன் ஜோதீந்திரநாத் 'பாரதி' என்ற ஓர் மாதப் பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார். தமது 15-ஆம் வயதுவரை ரவீந்திரர் எழுதிய கவிகள் 'பாரதி' மூலமே வெளியாயின. 'கவியின் கதை,' 'காட்டுப் பூ', 'பானுசிங்' முதலியவை அவைகளுள் சில. பாரதிக்'குச் சந்தாதாரர்கள் பெருக அக்கவிதைகள் பெரிதும் காரணமாயின.

கவிப்புலமை யிருப்பினும், ரவீந்திரரை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தக்க கல்வி அளிக்கவேண்டுமென்று அவரது குடும்பத்தார் கருதினார்கள். ஆகவே, 1877-ஆம் ஆண்டில் அவர் கல்வி பயில இங்கிலாந்து செல்லலானார். அங்கு ஓராண்டு படித்தாரென்றாலும் தேர்ச்சி பெற

வில்லை. பின் தாய்நாடு திரும்பி மறுபடியும் 'பாரதி'யில் தமது கவிதைகளையும், கட்டுரைகளையும் வெளியிடுவதில் ஈடுபட்டார். இதில் திருப்தியடையாத இவரது பெற்றோர் மறுபடியும், சட்டம் படிக்க இவரை இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். இம்முறையும் அப்படிப்பில் மனஞ் செல்லாத ரவீந்திரர் ஒரே மனமாக அப் படிப்பையும் விட்டு இந்தியா திரும்பினர்.

இதற்குள்ளாகவே 'பாரதி'யில் ரவீந்திரரது 'கருணா' என்ற முதல் நாவலும், 'ருத்ர சந்தர்', 'பங்க ஹிருதயம்' என்ற கவிதைகளும் வெளியாகி யிருந்தன. 1881-ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுமார் ஏழாண்டிற்குள் இவரது கவிதா சக்தி வங்காளிகளால் நன்கு அறியப்பட்டது. ரவீந்திரருக்குத் தமது இருபத்து மூன்றாம் ஆண்டில் திரு மணம் நடைபெற்றது. இதனாலும் இவரது புலமைக்கு எவ்வித பாதகமும் ஏற்படவில்லை. இதன்பின் அவர் எழுதிய "இயற்கையின் வஞ்சம்" 'ராஜரிஷி' முதலியவை வங்க இலக்கிய உலகில் இவருக்கு ஒரு முக்கிய இடத்தை அளித்தன. ரவீந்திரர் தமது குடும்ப நிலங்களை மேற் பார்வை செய்துவர 'ஷிலிடா' என்ற இடத்தில் தங்கி யிருக்கும்போது 'சாதனா' என்றதோர் பத்திரிகையும் நடத்தி வந்தார். சமூகக் கொடுமைகளையும் அரசியற் பிரச் சினைகளையும் பற்றிய அவரது தீவிரக் கருத்துக்கள் அதில் வெளியிடப்பட்டன.

ரவீந்திரர் கல்வித் துறையில் மிகவும் கவனமுள்ள வராக இருந்தார். நமது குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடங்களில் கிடைக்கும் கல்வி மிகவும் பொருத்தமற் றது என்பது அவரது தீவிர எண்ணமாக இருந்தது.

ஆகவே நாட்டு மக்களுக்குத் தக்க முறையில் கல்வி போதிக்கத்தக்க ஏற்பாடுகள் செய்வதில் ஊக்கம் கொள்ள லானார். அதன் பயன்தான் அவரது 'விசுவபாரதி' என்ற சர்வ தேசக் கலாசாலையாகும். அது 1901-ஆம் ஆண்டில் போல்பூர் என்ற இடத்திற்கு 2 மைல் தூரத்தில் 'சாந்தி நிகேதனம்' என்ற பெயருடன் ஐந்தே மாணவர்களோடு தொடங்கப்பட்டது. இயற்கையோடு ஒட்டிய முறையில் அங்கு போதிப்பது யாவராலும் புகழப்பட்டதால், வெகு விரைவில் அக்கலாசாலை முன்னேற்ற மடைந்து இன்று உலகெங்கும் புகழ் வீசுகிறது. தவிரவும் நந்தலால் போஸ், அஸித்குமார் ஹால்தார் போன்ற சிறந்த ஓவியப் புலவர்களையும், சதீஸ் சந்திர ராய், த்விஜேந்திரநாத் தாகூர் போன்ற அறிவாளிகளையும், காலஞ் சென்ற தீனபந்து ஆண்ட்ரூஸ் போன்ற அயல் நாட்டு மேதைகளையும் தனது ஆசிரியர் குழாத்தில் அடையப் பெற்றது. 'சாந்தி நிகேதனம்' ஏற்பட்டமை அதன் பெயருக்கு ஏற்ப, ஓர் விதத்தில் நமது புலவர் திலகத்திற்கு உதவியாயிற்று. உலகப் பூசல்களினின்று ஒதுங்கித் தமது கவிதை யுலகில் வாழ அவருக்கு அது அமைதியானதோர் இடமாக ஏற்பட்டது. ஆகவே அவரது பல நூல்கள் இங்கேதான் எழுதப்பட்டன. 1909-ஆம் ஆண்டில் அவரது பிரசித்தி பெற்ற நூலான 'கீதாஞ்சலி' வெளியாயிற்று.

ரவீந்திரர் நிகரில்லாக் கவியாக விளங்கினும், அப்போதைய பண்டிதர்கள் அவரது புதுமையான பாணியை அங்கீகரிக்க முன்வரவில்லை. இவர் 1912-ஆம் ஆண்டில் இங்கிலாந்து சென்றிருந்தபோது தமது 'கீதாஞ்சலி'யின்

ஆங்கில மொழி பெயர்ப்பை உடன்கொண்டு சென் றிருந்தார். அங்கு அதைப் பார்க்க நேரிட்ட ஆங்கிலக் கவிகளுள் ஸ்ரீ ஏட்ஸ் என்பார் அதை மிகவும் பாராட்டி ஞர். அதற்குள் புத்தகம் வெளியிடுவோரான ‘மாக் மில் லன் கம்பெனிக்காரர்கள் கவியரசின் ஆங்கிலப் புத்த கங்களை வெளியிட முன் வந்தனர். இவ்விதம் அவரது ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் ஐரோப்பியரிடையே பரவத் தருணம் ஏற்பட்டது. அந்நூல்கள் மிகவும் சிறந் தனவென்று ஐரோப்பியராலும், அமெரிக்கராலும் புகழப் பட்டன. அவர் இந்தியா திரும்பிய பின் 1913-ஆம் ஆண் டில், அவரது கவிதா மேதையைச் சிறப்பிக்க வேண்டி அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. இப் பரிசைப் பெற்ற முதல் இந்தியர் கவி ரவீந்திரர்தான். ஆகவே இவர் உலகின் முன் கௌரவிக்கப் பட்டதில் இந்தி யாவே தனது கலைச் செல்வத்திற்காகக் கௌரவிக்கப் பட்டதாக நாட்டு மக்கள் பூரிப்பெய்தினர். இவரது புலமையை முன்னர் உணராத பண்டிதர்களும் இப் போது இவரைக் கொண்டாட முன் வந்ததுடன், கல் கத்தா சர்வ கலாசாலையாரும் இவருக்கு ‘டாக்டர்’ பட்டம் வழங்கினர்.

உலகமெங்கும் கவியரசாகக் கொண்டாடப் படுகை யில் பல நாடுகளினின்றும் அவர் அழைப்புப் பெற்றதில் ஆச்சரியமில்லை யல்லவா! ஆகவே அந்த நாட்டாரின் வேண்டுகோளுக்கிணங்கி அந்நாடுகளுக்குச் செல்வது அவ ருக்கு அவசியமாகி வந்தது. ஆகவே பன்முறை அவர் அயல் நாட்டு யாத்திரை மேற்கொண்டு, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ருஷ்யா, அமெரிக்கா, ஜப்பான்

முதலான நாடுகளில் இந்திய ஞானச் செல்வத்தைப் பரப்பினர். இப்பிரயாணங்களில் ரவீந்தரருக்கு வழங்கப்பட்ட பண முடிப்புக்களும், பரிசுகளுமே 'சாந்தி நிகேதனம்,' 'ஸ்ரீ நிகேதனம்' என்ற உட்பிரிவுகளைக் கொண்ட சர்வகலாசாலையான 'விஸ்வபாரதி'யை ஏற்படுத்தப் பெரிதும் உதவியாயிருந்தன. எனினும் அவர் சென்ற நாடுகளில் அந்நாட்டார் பிறநாட்டாருக்கு இழைக்கும் தவறுகளை எடுத்துக் காட்டத் தயங்கினதில்லை.

ரவீந்திர நாதர் அரசியலில் அவ்வளவாகத் தீவிரக் கருத்துக் கொண்டவரல்ல என ஒரு சிலர் கூறுவர். ஆனால் அது சரியன்று. மஹாத்மா காந்திக்கும் கவி ரவீந்திரருக்கும் சிறிய பிரச்சினைகளில் எவ்வளவு அபிப்பிராய பேதமிருப்பினும், நாட்டின் நலத்தைப் பொறுத்த வரை எந்த விதக் கருத்து வேறுபாடும் இல்லையென்பது யாவரும் அறிந்ததே. மகாத்மா இக் கவியரசை 'குருதேவ்' என்று மதித்து வருதலே அதற்குச் சான்றாகும்.

மிகப் பெரிய மேதைகளாயினும், அழியக்கூடிய மனித உடல் அவர்களுக்கும் இருப்பதை மறக்க முடிவதில்லை. தமது வாழ்நாளில் ரவீந்திரர் என்றும் அழியாப் புகழுடலை உண்டாக்கிக் கொண்டு விட்டார். எனினும் அவரது பூதவுடல் சென்ற சில ஆண்டுகளாகவே நலிவெய்தி வந்தது. அவரது அருமைத் தோழரான தீனபந்து ஆண்ட்ரூஸின் மரணம் (1940-ல்) அவருக்கு மிகத் துயர் அளித்திருந்தது. இதனிடை 'ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையார்' இவருக்கு 'டாக்டர்' பட்டம் அளிக்க விரும்பினர். இவரது உடல்நிலை காரணமாக அந்த வைப

வம் இந்தியாவிலேயே இவரது 'சாந்தி நிகேதனத்தில்' சென்ற ஆண்டு ஆகஸ்டு 7-ம் தேதியில் இந்திய பெடரல் கோர்ட் பிரதம நீதிபதியான ஸ்ரீ மாரிஸ்குயர் தலைமையில் நிறைவேறிற்று. அச்சர்வ கலாசாலையின் பட்டமளிப்பு விழா இம்மாதிரி அயல் நாட்டில் நடந்தது இதுதான் முதல் முறையாகும்.

ரவீந்திரரது உடல்நிலை பின்னரும் சீர்ப்படுவதாகத் தெரியவில்லை. இவ்விதம் இவர் நோய் அதிகரித்து, இவ்வாண்டு (1941) ஆகஸ்டு 7-ம் தேதி தேகவியோகமானார். நீண்ட வதனமும், வெண்மை நிறத் தாடியும், வேத கால ரிஷிகளை நினைவூட்டும் அவரது தோற்றமும் அன்று மறைந்தன! உலகமெங்கும் அன்று துயர்கொண்டது என்பது மிகையாகாது. பூதவுடல் பிரிந்தாலும் அவரது புகழுடலை நினைப்பூட்டிப் பல தலைமுறைகள் அவரைக் கொண்டாட அவர் நமக்கு அளித்திருக்கும் நூற் செல்வம் பெரிதும் உதவி புரியும் என்பதில் ஐயமுண்டோ!

I. வினாக்கள்

1. வங்கம் அளித்த பெரியோர்கள் எவர், எவர்?
2. கவிமணியின் இளமைக் கல்வியைப்பற்றி நீங்கள் அறிவதென்ன?
3. தாகூர் வெளியிட்டுள்ள நூல்களுள் நான்கின் பெயர்களை எழுதுக.
4. சாந்தி நிகேதனம் ஏற்பட்ட வரலாற்றை எழுதுக.
5. நோபல் பரிசுபெற்ற இந்தியர்கள் யார் யார்? எதற்காகப் பெற்றுள்ளார்கள்?

II. இலக்கணம்

எ என்ற வினவெழுத்து, அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களின் பின் உயிரும் யகரமும் எய்தினல் இடையில் வகர மெய் தோன்றும்.

உ-ம்
- எ + ஊர்—எவ்வூர்
- அ + ஆடு—அவ்வாடு
- இ + எலி—இவ்வெலி
- எ + யானை—எவ்வானை

இந்நான்கு எழுத்துக்களின்பின் பிற எழுத்துக்கள் (உயிரும் யகரமும் அல்லாதவை) வரின் வந்த எழுத்து மிகும்.

உ-ம்
- எ + பலகை—எப்பலகை
- அ + படம்—அம்மடம்
- இ + நாள்—இந்நாள்
- இ + வண்டி—இவ்வண்டி

III. கட்டுரை யாக்கம்

கீழ்வரும் தலைப்புக்களில் இந்திய சரித்திர வீரருள் ஒருவரின் சரிதையைச் சுருக்கி எழுதுக.

பிறப்பு வளர்ப்பு—அவர் கால நிலை—அவர் சாதித்த விஷயம்—எப்படி சாதித்தார்—குண விசேஷமும் பெருமையும்.

17. ஸ்ரீ சைல யாத்திரை

[தெலுங்கு என்ற பெயர் த்ரிலிங்க என்பதன் திரிபு. மல்லி கார்ஜுனம், த்ராக்ஷா ராமம், நாகார்ஜுனம் இம்மூன்று லிங்க க்ஷேத்திரங்களும் இருப்பதனுல்தான் ஆந்திர தேசத்திற்கு த்ரிலிங்கம் என்று பெயர் வழங்குவதாயிற்று. இவைகளுள்]

ஸ்ரீ சைலமென்னும் மல்லிகார்ஜுனம் மலையடர்ந்த கர்நூல் ஜில்லாவில், நிஜாம் ராஜ்யத்தின் தெற்கு எல்லைக் கருகில் இருக்கிறது. அர்ஜுனன் ஈச்வரனைக் குறித்துத் தவம் செய்து, கிராதகனுக (வேடனுக)த் தோன்றிய சிவ பிரானுடன் மல்லயுத்தம் புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்றது இவ்விடத்திலேயே என்பதும், அதனுல்தான் இந்த ஸ்தலத்திற்கு மல்லிகார்ஜுனம் என்று பெயர் வந்தது என்பதும் புராணச் செய்தியாகும்.

மஹாசிவராத்திரிக்கு முந்தின தினம் காலை 9-மணிக் குக் கர்நூலிலிருந்து நாங்கள் எங்களுக்குப் பரிசயமான ஒருவருடன் அவருடைய 'காரில்' புறப்பட்டோம். 45 மைல்களுக்கு அப்பாலுள்ள ஆத்மகூரில் ஒரு பங்களாவில் 10-30-மணிக்கு இறங்கி வயிற்றுப் பசியையும், வந்த சிரமத் தையும் சற்று ஆற்றிக்கொண்டு, மீண்டும் பிரயாணத்தைத் தொடங்கினேம்.

அங்கிருந்து பெத்த செருவுக்கு 25 மைல்; கொஞ்ச தூரம்வரை பாதை சுமாராக இருக்கிறது. அப்புறம் மூங் கில், பலாசம் முதலியன நிறைந்த காட்டினுள் பாட்டை

செல்கிறது. கவையாகிக் கொம்பாகி நிற்கும் பலாச விருக்ஷங்களிலுள்ள செந்நிற மலர்கள் சில சமயங்களில் மூங்கில்களின் இடையே காட்டுத்தீயோவென நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. இங்கிருந்து பாதை மிகவும் இடக்கு. எலும்பு நோகும்படி மோட்டார் தூக்கித் தூக்கிப்போட்டுப் புழுதியைக் கிளம்பிக்கொண்டே சென்றது. சற்று நேரம் கழித்து ஒரு செஞ்சுக்குடிசை தெரிந்தது. அங்கே 'டோல் கேட்' போல் மூங்கில் கழியொன்று, இருகட்டைத் துண்டுகளின்மேல் பாதைக்குக் குறுக்காக வைத்திருந்தது. அதன் அருகில் செஞ்சு ஒருவன் நின்றிருந்தான். அங்கிருந்த போலீஸ்காரனை விசாரித்ததில் பிரயாணிகள் தலைக்கு ஓர் அணா செஞ்சு வரி கொடுக்கவேண்டுமென்றும், இதே மாதிரி இரண்டு மூன்று இடங்களில் வசூலிப்பார்களென்றும் கூறினன்.

காடுகளெல்லாம் இப்பொழுது சர்க்காரைச் சேர்ந்துவிட்டதால் செஞ்சுக்கள் விறகுவெட்டி விற்றுப் பிழைக்க முடியாமல் போய்விட்டது. அதனல் சர்க்கார் இவர்களை இந்த வரி வசூல் செய்துகொள்ள அனுமதித்திருக்கின்றனர். இவர்கள் காட்டு ஜாதியினர். மோட்டாரையோ, நகர ஜனங்களையோ பார்த்தால் பாதைவிட்டு விலகிக் காட்டுக்குள் ஓடுகிறார்கள். சட்டைமட்டும் போட்டுக்கொண்டு, தலைமுழுதும் மயிர்வளர்த்து, கௌபீனமுடுத்து, கையில் பித்தளைக் காப்புடன், வில்லும், அம்புகளும் ஏந்தி நிற்கும் சில செஞ்சுக்களை வழியில் கண்டோம். காட்டில் மஞ்சம் புல்லினல் குடிசைகள் அமைத்துக் கொண்டு விஷம் தோய்ந்த அம்புகளினல் துஷ்டஜந்துக்களைக் குறிதவருமல் கொன்று அவைகளின் தோலையும், தாங்கள் சேகரிக்கும் தேனையும்

விற்றுப் பிழைத்து வருகின்றனர். அருகில் உள்ள ஊர்களுக்கு ஏதாவது விற்கவோ வாங்கவோ வந்தால், இரவுக்குள் காட்டுக்குத்திரும்பி விடுவார்கள். இல்லாவிட்டால் அவர்களுக்கு நிம்மதி யேற்படாது. காட்டில் தன்னந்தனியே செல்லும் பிரயாணியைக் கண்டால் அவன் மேல் 'கப்' என்று பாய்ந்து மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு போய், உணவு ஏதாவது இருந்தால் அதை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றவற்றை யெல்லாம்—அது பணமா யிருந்தாலும் சரி—அங்கேயே போட்டுவிட்டு—ஓடிப்போய்விடுவார்கள். உணவின்மேல் அவ்வளவு மோஹம்; ஏனென்றால் அங்கே ஆகாரம் அகப்படுவதே அரிது. சர்க்கார் இப்பொழுது அவர்களுக்கு வேலை கொடுத்தும், அவர்கள் குழந்தைகளைப் பள்ளியில் படிக்க வைத்தும், அவர்களை நாகரிகப்படுத்த முயல்கின்றனர்.

மலை வழியே

கொஞ்சதூரம் சென்றதும் மற்றொரு செஞ்சுக்கூடம் தெரிந்தது. இங்கேயும் வரிவசூல் செய்யப்பட்டது. இங்கிருந்து மலைச்சரிவு ஓரமாக மிகக் குறுகலான காட்டு இலாகா பாதை வளைந்து வளைந்து செல்கிறது. இது சில வருஷங்களுக்கு முன்னர்தான் போடப்பட்டது. அதற்கு முன் பெத்தசெருவு வரைகூட நடந்தோ, டோலியிலோ தான் செல்லவேண்டும். அப்பொழுது படிகள் இருந்தன. ஒருபக்கம் அதபாதாளம்; மறுபக்கம் செங்குத்தான மலைக் கற்கள்; எதிர் எதிராக இரண்டு மோட்டார்களோ, மாட்டு வண்டிகளோ வந்துவிட்டால் நிரம்பக் கஷ்டம். ஒருவன் மலைச்சரிவுப்பக்கம் பாதாளத்தில் விழாமல் ஜாக்ரதையாக

நிறுத்திக்கொண்டு மற்றவன் முட்டிநிற்கும் கற்களில் உராய்ந்துகொண்டு போனுலொழிய வேறு வழியில்லை.

மணி இரண்டு. பெத்தசெருவு ஏரி தெரிந்தது ; இங்கிருந்து பாட்டை அவ்வளவு அபாயமானதாக இல்லை. பெத்த செருவிலுள்ள பிரயாணிகள் தங்கும் பங்களாவின் வாயிலில் செம்மண் புழுதிபடிந்த கோலத்துடன் ‘ காரை ’விட்டு இறங்கினேம், இங்கே சற்று நேரம் சிரம பரிகாரம் செய்துகொண்டோம்.

இதற்குமேல் நடந்தோ, டோலியிலோதான் செல்ல வேண்டும். இங்கிருந்து ஸ்ரீ சைலத்திற்கு 12 மைல் தூரம். ஸ்திரீகளை டோலியில் ஏற்றி விட்டு, நாங்கள் நடக்கலானேம்.

கால் பிரயாணம்

[அதிகம் நடந்து பழக்கமில்லாதவர்களுக்கு இந்த மலை யாத்திரை ஒரு பெரிய பரீக்ஷையே. ஓரிரண்டு மைல்கள் நடப்பதற்குள் கால்கள் ஓய்ந்துவிடுகின்றன. கையில் தடி ஊன்றிச்சென்ருல் அவ்வளவு சிரமம் தெரிவதில்லை. கையைத் தொங்கவிட்டுச் செல்வதால் தளர்ச்சி உண்டாகிறது. அதனுல் சிலர் கையில் எலுமிச்சம்பழத்தை எடுத்துச் செல்கிருர்கள். தாகத்தினுல் நா வறண்டு போகிறது. அடிக்கடி தண்ணீர் குடித்தால் சீதளம் தட்டும் என்று நடுநடுவே நாங்கள் கொண்டு வந்திருந்த ‘பெப்பர்மிண்டு’களை வாயிலடக்கிக்கொண்டே வந்தோம்.]

இரு பக்கமும் காடுகள் ; அக்கினிக் கொழுந்தெனச் செம்மலர்கள் நிறைந்த பலாச விருக்ஷங்கள் ; இலையின்றிக் காய் மட்டும் தொங்கும் பெயர் தெரியாக் காட்டு மரங்கள் ; மூங்கில் புதர்கள் ; தேக்கு மரங்கள் ; இவை யாவற்றின்

மீதும் படர்ந்து மந்தாரைக் கொடிகள் அழகார்ந்து விளங்கின. தூரத்தில் மரங்களுக்கு இடையிலிருந்து செஞ்சுக் குடிசைகள் தெரிந்தன. சூரியனின் வெப்பம் வரவரத் தணிந்து வந்தது. ஏற்றம், இறக்கம்; ஒரு மலையைக் கடந்ததும் பள்ளத் தாக்கு; மறுபடியும் ஏற்றம் இறக்கம்.

டோலிப் பிரயாணம்

டோலிகள் சிறு தொட்டில்கள் போலிருக்கின்றன. எப்பொழுதும் குனிந்துகொண்டேதான் உட்கார்ந்திருக்க வேண்டும். நிமிர்ந்தால் சுமந்து செல்வதற்காகக் கட்டப்பட்டிருக்கும் மூங்கில் கொம்பு தலையில் இடிக்கும். ஏற்றங்களிலும் இறக்கங்களிலும் டோலிக்காரர்கள் படும் பாட்டைச்சொல்லி முடியாது. சிலர் அதைக் கண்டு பரிதாபம் கொண்டதாலோ, வெகு நேரம் உட்கார்ந்து கால்கள் மரத்துப் போனதாலோ, கீழே கொஞ்ச தூரம் நடக்கிறார்கள். இறங்காதவர்களைப் பார்த்து டோலியாட்கள் "அதோ பார், அந்த அம்மா எவ்வளவு இஷ்டத்தோடு ஸ்வாமியைப்பார்க்க நடந்து போறாங்கோ! நடந்தால்தான் புண்யமுண்டு" என்று பக்குவமாகச் சொல்லி இறக்கப் பார்க்கிறார்கள். அப்படியும் சிலர் இறங்குவதில்லை. 'நாம் தான் பணம் கொடுத்தோமே முழுதூரமும் போகலாமே' என்ற எண்ணத்தினாலோ நடக்க முடியாததாலோ, டோலியிலேயே உட்கார்ந்திருக்கிறார்கள். அதனால் டோலியாட்கள் அவர்கள் டோலியை அடிக்கடி இறக்கிக் காலதாமதம் செய்கின்றனர். ஆளின் கனத்திற்கேற்றவாறு 5 ரூபாயிலிருந்து 8 ரூபாய்வரை டோலிக்காரர்கள் கூலி கேட்கிறார்கள்.

பீமுனி கோல்லம்

இரண்டு மூன்று மலைகளைக் கடந்ததும் ஒரு பெரிய இறக்கம் வருகிறது. ஒரு பக்கம் காடு. மறுபுறம் பாதாளத்தில் ஒரு சிறு நீர்த்தாரை ஓடுகிறது. இதுதான் பீமுனி கொல்லம் (பீமன் குளம்). பீமன் கதையைப் போட்டதனால் அந்த இடம் பள்ளமாகி ஜலம் தேங்கிவிட்டதாம். தமிழ் நாட்டில் கூட இந்தமாதிரி அநேக இடங்களுக்குப் புராண புருஷர்களின் பெயரிடப்பட்டிருப்பது சகஜமே. 5.30 மணிக்கு பீமுனி கொல்லத்தை யடைந்தோம். சுற்றிலும் மலைகள். ஒரு பக்கம், எத்தனையோ யுகங்களாய் மழை ஜலம் வழிந்து வழிந்து பாறைகள் அறுபட்டு அதனால் இடிந்த கோட்டை மதில்போல் தோன்றும், செங்குத்தான மலை. ஒரு சமயம் இவையெல்லாம் எரி மலைகளாய் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. எதிரேயுள்ள மலையின் அடிவாரத்தில் மறுபடியும் ஏற்றம் ஆரம்பமாகிறது. உயரத்திலுள்ள அம்மலைவழியின் மீது எறும்புக் கூட்டம் போல் சாரிசாரியாக யாத்ரிகர்கள் செல்லும் காட்சி அப்பள்ளத்தாக்கிலிருந்து பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கிறது. இந்த ஏற்றம்தான் மிகவும் சிரமமானது. ஆதலால் சிலர் இங்கேயுள்ள மண்டபத்தில் இரவைக் கழித்துவிட்டு மறுதினம் விடியற்காலை புறப்பட்டு ஸ்ரீசைலத்திற்கு வருகின்றனர். ஆனால் நாங்கள் அடிக்கடி உட்கார்ந்து இளைப்பாறிக்கொண்டே வழியில் தங்காமல் சென்றோம்.

மணி 6-30 க்கு உச்சியை அடைந்தோம். இன்னும் நான்கு மைல் தூரம் இருக்கிறது ஸ்ரீ சைலம். என்னையும் வேறிருவரையும் முன்னணியாகப் போகச்சொல்லி

விடவே, நாங்கள் மூவரும் விரைவாக நடக்கலானேம். சூர்ய அஸ்தமனம்; ஆகாயத்தில் பல வர்ண விநோதங்கள் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. அந்தி வெளிச்சத்தில் காட்டு மரங்கள் பல அரக்கர் கைவிரித்து நிற்பதுபோல் கருமையாக விளங்கின. இனிமேல் நிதானமான இறக்கம் தான். மஹா சிவராத்திரிக்கு இரண்டு மாதங்கள் முன்பு தான் இவ்வழியைச் சீர்திருத்துகிறார்கள். அப்படியும் நெறிஞ்சி முள் காலில் தைத்துக்கொண்டேதான் இருந்தது.

'நந்தன் கோபுர தரிசனம் பண்ணின பாட்டையாவது பாடுமே; நடை சிரமம் தெரியாமல் போகலாமே!' என்றார் என்னுடன் வந்துகொண்டிருந்த ஒருவர் மற்றவரைப் பார்த்து. அவருடைய கால்கள் தடுமாறின. கொஞ்சநேரம் உமிழ் நீரைச் சும்மா விழுங்கிக்கொண்டே இருந்தார் மற்றவர். பிறகு மதுரமான சாரீரத்தில்

கோபுர தரிசனமே - எந்தன் - பாப விமோசனமே

என்று பாட ஆரம்பித்தார்.

இன்னிசையில் எங்கள் மனம் ஈடுபட்டது. தாமாகவே கால்கள் தங்கள் வேலையைச் செய்யத் தொடங்கின. மனம் ஆனந்த முற்றிருக்கும்போது தூரம் எம்மாத்திரம்? இரவென்னும் தேவி தன் ஆட்சியைத் தொடங்கினாள். நிர்மலமான வானில் தாரகைகள் மின்னின.

சாக்ஷி விநாயகர் கோவில்

கொஞ்ச தூரத்தில் ஒரு கோயில் தெரிந்தது. நெருங்கினேம். அதன் வாயிலில் ஓர் ஆண்டி தம்புராவை மீட்டிப் பாடிக்கொண்டிருந்தான். 'இதென்ன கோயில் அப்பா?' என்று கேட்டோம். "சாக்ஷி விநாயகர் கோவில்" என்ருன் அவன். "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டு, இன்னும் ஒரே மைல்தான் ஸ்ரீ சைலம். "வாருங்கள், பிள்ளையாருக்குத் தோப்புக் கரணம் போடலாம்" என்ருர் என்னுடன் வந்தவர்.

தூரத்தில் ஜனங்களின் பேரிரைச்சல் கேட்டது. நாங்கள் முன்னேக்கிச் செல்லச் செல்ல 'மல்லிகார்ஜுனு', மல்லையா' என்று கூவும் சப்தம் வானத்தைப் பிளந்தது. விளக்கு வெளிச்சம்! அப்பாடா அதோ கோபுரம் தெரிந்து விட்டது!

தூளி தரிசனம்

நேராகக் கோயிலுள் நுழைந்தோம். கோயிலில் 'காஸ்' விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. கைகால்களை அலம்பிக்கொள்ளாமல், வந்ததும் ஸ்வாமியைப் பார்க்கவேண்டுமாம். இதற்குத்தான் தூளி தரிசனம் என்கிருர்கள். "ஸ்வாமி! நான் இவ்வளவு கஷ்டப்பட்டு உம்மைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்று அறிவிப்பதற்காகப்போலும் இது.

விடுதி

சற்றுநேரம் கழித்து எங்கள் விடுதியை அடைந்தோம். மூங்கிலால் கட்டப்பட்ட பந்தலின்மேல் மஞ்சம் புல் பரப்

பப்பட்டுச் சுற்றிலும் தட்டி கட்டப்பட்டிருந்தது. இதன் பெயர்தான் விடுதி. எங்களை அழைத்து வந்தவர் உத்தியோகஸ்தராதலால் இந்த விடுதி இலவசமாகக் கிடைத்தது. இல்லாவிட்டால் 4-ரூபாய் வாடகை கொடுத்திருக்கவேண்டும். எங்கள் எதிரே பல உத்தியோகஸ்தர்களின் கூடாரங்கள் இருந்தன.

தண்ணீர் வசதி

கோயிலுக்கு அருகிலுள்ள பெரிய குளத்திலிருந்து ஜில்லா போர்டார் மெஷின் வைத்து, ரப்பர் குழாய் மூலமாக, கரையில் கட்டப்பட்டிருக்கும் பெரிய தொட்டியில் தண்ணீரை நிரப்புகிறார்கள். ஜனங்களின் சௌகர்யத்திற்காகத் தொட்டியின் அடிப்பாகத்தில் நாலைந்து குழாய்கள் வைத்திருக்கின்றனர். சிவராத்திரி யன்று காலை நாங்கள் ரப்பர்க் குழாயைத் தலைக்கு நேராகப் பிடிக்கச் சொல்லி ஸ்நானம் செய்துவிட்டுக் கோயிலுக்குச் சென்றோம்.

I. வினாக்கள்

1. மல்லிகார்ஜுனம்—பெயர்க் காரணத்தைத் தெரிவிக்க. இது எங்கே உள்ள தலம்?

2. இப்பாடத்தில் வந்துள்ள தெலுங்கு மொழிகள் எவை? அவற்றின் பொருளை எழுதுக.

3 செஞ்சுக்களின் வாழ்க்கையைக் குறித்து ஒரு பக்கம் எழுதுக.

4. டோலிப் பிரயாணம் செய்யும்போது நம் மனத்தில் எழும் உணர்ச்சிகள் எவை?

II. கட்டுரையாக்கம்

இப்பாடத்திற் கண்ட மாதிரியில் சிலதலைப்புக்களில் நீங்கள் செய்துள்ள ஒரு உல்லாசப் பிரயாணத்தைக் குறித்து எழுதுக.

III. இலக்கணம்

ஒரு குற்றெழுத்தும் அதனைச் சார்ந்து மெய்யெழுத் தொன்றும் வந்துள்ள சில பதங்களைத் தருக.

கண், பல், பொன், நம்-இச்சொற்கள் சில உதாரணங் களாகும். இவற்றின் ஒற்றுக்கள் (மெய்கள்) தனிக் குறில் முன் ஒற்று எனப்படும். வருமொழி முதலில் உயிர் வரின் தனிக் குறில்முன் ஒற்று இரட்டும்.

உ-ம்
- கண் + அழகு—கண்ணழகு
- பல் + இளி—பல்லிளி
- பொன் + அணி—பொன்னணி
- நம் + ஊர்—நம்மூர்

---

18. ஸ்ரீ ஆண்டாள்

தென்பாண்டி நாட்டிலே ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் ஊரிலே அந்தணர் குலத்திலே விஷ்ணு சித்தர் என்ற திருநாமம் பூண்ட பெரியாரொருவர் ஏறக்குறைய ஆயிரத் திருநூறு ஆண்டுகட்கு முன்னே அவதரித்தார். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினது மன்றி, திருமாலடிமைத் திறத்திலும் மேம்பட்டு நின்றார். அவர் பெருமைகளை யறிந்த அந்நாட்டரசனான பாண்டியன் அவரைத் தன் குருவாகக் கொண்டான். 'பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தார்' என்று அவர் செல்லுமிடங்களெல்லாம் அவர் சிறப்புப் பரவியது.

அவரைப் பெரியாழ்வார் என்று உலகம் கொண்டாடிற்று. ஸ்ரீ கண்ணபிரானின் இளமைப் பருவத்துச் செயல்களையே அவர் அதிகமாகப் பாராட்டியுள்ளார்.

அப்பெரியாழ்வாருக்குக் கோதை என்ற திருமகள் தோன்றினர். அப்பெண்கொடி இளமையிலேயே கலைகள் முழுவதும் தம்மிடம் நிரம்பப் பெற்று விளங்கினர். அவருடைய ஞானமுதிர்வைக் கண்ட பெரியாழ்வார் அடங்கா மகிழ்ச்சிகொண்டு திருமாலின் பெருமைகளையும் அவரைப் பூசிக்க வேண்டிய முறைகளையும் அவ்வம்மையாருக்குச் சொல்லிக் கொடுத்தனர்.

இயற்கையறிவும், பெரியாழ்வாரின் உபதேசங்களும் சேர்ந்தவுடன் கோதையார் முற்றிலும் சிறந்த விஷ்ணு பக்தராகி அவர் கைங்கரியங்களிலே ஈடுபடுவாராயினர். பகவானுடைய அநந்த கல்யாண குணங்களை அறிந்த அவர் மனம் அவரிடமே முற்றிலும் பாய, அப்பெருமானையே அடையவேண்டுமென்ற அவா அவரிடம் குடி கொண்டது. திருமாலையே அவர் தம் நாயகராகக் கருதினர். மனிதர் கடவுளை மணப்பதில்லை யென்பது அவருக்குத் தோன்றவில்லை. தினந்தோறும் கோதையார் தம்மை நன்ருக அலங்கரித்துக்கொண்டு, 'இவ்வுருவம் என் நாதருக்கு உகந்ததோ?' என்று கண்ணுடியில் தம்மைப் பார்த்துக்கொள்வார். தம் பிதா திருமாலுக்காகக் கட்டி வைத்திருக்கும் அழகிய மாலைகளை அவரறியாமல் எடுத்துத் தாம் அணிந்துகொண்டு, கண்ணுடியில் தம்மைக் கண்டு கொண்டே, 'இவ்வழகை எம்பெருமான் ஏற்பாரோ?' என்று வினவிக்கொள்வர். பிறகு அவர் அம் மாலைகளை

முன்னிருந்த இடத்திலேயே வைத்துவிடுவர். கடவுள் தம்மை மணக்க வருவதுபோல் பல தடவைகளும் அவர் கனவு கொள்ளுவர்;மறுநாட்காலையில் அவர் தாம் கண்டகனவைத் தம் தோழிகளிடம் கூறி ஆற்றிக் கொள்வர்; எங்கும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டன போலவும், தோரணம் நாட்டியிருந்தனபோலவும் அவர் கனுக் கண்டார்; கோவிந்தன் வந்து தம்மை மணந்து கொண்டதாக அவர் கூறின கனவின் செய்திகளைத் தெரிவிக்கும் பாட்டுக்கள் இன்றும் வைஷ்ணவர்களின் திருமணங்களிற் பாடப்படுகின்றன.

அவர் தினந்தோறும் பூமாலைகளைச் சூட்டிக்கொண்டு பின் கழற்றி வைப்பதை அறியாத ஆழ்வார் ஒரு நாள் தெய்வச் செயலாய் அம்மாலைகளைப் பார்க்க அவற்றில் ஒரு மயிர் சிக்கி யிருப்பதைக் கண்டு மனம் வருந்தி, “இது செய்தவர் யாரோ? எம்பெருமானுக்கென்று வைத்திருந்த திருமாலை தோஷப்பட்டதே” என்று நைந்துருகி அன்று வெறுங் கையராய்க் கோயிலுக்குச் சென்று பூசைகளை முடித்துத் திரும்பினர். அன்றிரவு திருமால் அவர் கனவில் தோன்றிக் கோதையாரின் பெருமைகளைக் கூறி அவர் சூடிக்கொடுத்த பூமாலைகளே தமக்குகந்தவை யென்றும் அத்தகைய மாலைகளே இனிக் கொணர்தல் வேண்டு மென்றும் புகன்று மறைந்தனர்.

அச்சொற்களைக் கேட்ட பெரியார் திடுக்குற்று. “இதுகாறும் என் மகளென்றெண்ணி வீணிற் காலங் கழித்தேனே! கோதையார் நிலமாமகளோ, திருமா மகளோ அறியேனே!” என்று திகைத்து, அன்றுமுதல் அவரை, ‘ஆண்டாள்’ என்றும் ‘சூடிக்கொடுத்த நாய்ச்சி

ஸ்ரீ ஆண்டாள்

யார்' என்றும் அழைக்கலாயினர். அப்பெயர்களே பிறகு யாவராலும் வழங்கப்பட்டன.

ஆண்டாளுக்கு உரிய பருவம் வந்தவுடன் அவருக்குத் தக்க நாயகன் எங்கே கிடைப்பானென்று ஆழ்வார் அலைய லாயினர். அதனை யறிந்த நாய்ச்சியார், "என் மணாளன் திருவரங்கத்தில் எழுந்தருளி யிருக்கும் பெருமானே! வேறு மானிடரை நான் மணவேன்" என்னலும், ஆழ்வார், "இஃது எவ்வாறு நடைபெறும்?" என்று ஏங்கியிருந்தனர்.

அச்சமயம் திருவரங்கச் செல்வர் ஒரு நாள் ஆழ்வாரின் கனவில் தோன்றி ஆண்டாளைத் திருவரங்கத்துக்கு அழைத்து வருமாறு கட்டளையிட, அவர் உடனே விழித் தெழுந்து கடவுளின் கருணையையும் தம் திரு மகளார் சிறப் பையும் எண்ணி எண்ணி வியந்தனர். பின்பு எல்லாச் சிறப்புக்களுடனும் ஆண்டாளைப் பல்லக்கிலேற்றிப் பல இன்னிசைக்கருவிகள்முழங்க, "ஆண்டாள் வந்தாள்! சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாள் வந்தாள்! சுரும்பார் குழற் கோதை வந்தாள்! பட்டர்பிரான் புதல்விவந்தாள்!" என்று முன்னே கூறிச்செல்ல அடியார்கூட்டமும்மெய்க்காப்பாள ரும் பின் தொடர, அவரைத் திருவரங்கத்திலே அரவணை யின்மீது அறிதுயில் கொள்ளும் நாயகனிடம் சென்று சேர்த்தனர். ஆண்டாள் காந்தத்தா லிழுக்கப்பட்ட இரும்புபோலத் தம் செயலற்றுக் கடவுளருகிற் சென்று மறைந்தனர். இவ்வரிய நிகழ்ச்சியைக் கண்ட அனைவரும் அதிசயித்தனர்.

ஆண்டாள் பாடிய பாடல்கள் திருப்பாவை, நாய்ச்சியார் திருமொழி எனப்படும். இவை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்

தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள், திருப்பாவை மிக்க இனிமையும் புனிதமும் செறிந்தது; அதிலுள்ள பாடல்கள் படிப்பவர் மனத்தை நன்கு பிணிப்பவை. அவற்றில் இயற்கை வருணனைகள் பல மிளிர்கின்றன. கோயில்களி லும் இல்லங்களிலும் அவற்றைப் பாடிப் பலர் மகிழ்ச்சியும் புண்ணியமும் பெறுகின்றனர். ஸ்ரீ ஆண்டாள் விஷ்ணு ஆலயங்களிற் பிற ஆழ்வார்களுடன் ஒருங்கு பூசிக்கப் பெறும் பெருமை பெற்றிருக்கின்றார்.

பயிற்சி

1. நாயன்மார்களிற் பெண்பாலார் ஒருவரின் வரலாறு யாது?
2. கோதையாரின் வேறு பெயர்கள் என்ன? அப்பெயர் களுக்குக் காரணங்களையுங் கூறுக.
3. கோதையார் மாலைகளைத் தாம் கொண்டது ஏன்?

19. குறியீடுகள்

கீழ் வகுப்புக்களில் பல குறியீடுகளைப் பற்றித் தெரிந்துகொண்டீர்கள். இங்கு அவை வருவதற் குரிய இடங்களைக் குறித்து விவரமாகத் தெரிந்துகொள்ளு வோம் :—

. இது முற்றுப்புள்ளி

(1) கேள்வி அல்லது ஆச்சரியத்தைத் தெரிவிப்பன அல்லாத மற்ற வாக்கியங்களின் ஈற்றில் வரும்.

(2) பெயர்களின் முதல் எழுத்துக்கள் மட்டும் தெரி விக்கும் சந்தர்ப்பங்களில் வரும்.

உ - ம். க. த. செல்வணி.

(3) சொற்களைச் சுருக்கிஎழுதுகையில் வரும். 'உதார ணம்' என்ற சொல்லை 'உ - ம்.' என்பது போல.

! இது வியப்புக் குறி

1. வியப்பைத் தெரிவிக்கும் வாக்கியங்கள் அல்லது தொடர்களின் ஈற்றில் வரும்.

2. விளிவேற்றுமையின் பின் காற்புள்ளிக்குப் பதிலாக இதனை இடுதலும் உண்டு.

, இது காற்புள்ளி

(1) வாக்கியத்தில் இருக்கும் விளி வேற்றுமையைத் தனியாகப் பிரிக்கவேண்டிய இடத்து வரும்.

உ - ம். நான் சென்று வருகிறேன், ஐயா, என்றான்; நீ செல், இராமா.

(2) ஒரு பெயரை அதனை யடுத்து வேறு விதமாகக் குறிக்கும் சந்தர்ப்பங்களில் வரும்.

உ-ம். தசரதன், வாய்மையு மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் பெற்றெடுத்த பிள்ளை இராமன்.

(3) உடன்படுதலையும் மறுத்தலையும் தெரிவிக்கும் 'ஆம்' 'இல்லை' முதலியவற்றுள் ஒன்றை வேறு சொற்களினின்று பிரிக்க வரும்.

உ-ம். ஆம், இஃது உண்மை.

(4) சொல்லின் வகை ஒன்றே இருமுறைக்கு மேல் அடுக்கி வரும்போது அவற்றின் இடையே வரும்.

உ-ம். தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் எனப் பாண்டவர் ஐவர். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புல நுகர்ச்சியும் உல்லாசப் பிரயாணத்தில்உண்டு. இவற்றுள் பெயர்களும், வினைகளும் முறையே அடுக்கி வந்தமை காண்க.

(5) விலாச மெழுதுகையில் ஈற்று வரியைத் தவிர்த்து மற்ற வரிகளுக்குப் பின் வரும்.

(6) பெரிய வாக்கியங்களில் துணை வாக்கியங்களைப் பிரிக்க உபயோகிக்கிறோம்.

உ-ம். அந்த மன்னர்களுடைய புகழ் இன்றளவும் நிலைத் திருக்க, அவர்கள் அமைத்த அமைப்புகள்மட்டும்மாறிப்போயின.

(7) தன் கூற்று மொழிகளை வாக்கியத்தின் மற்ற பாகத்திலிருந்து பிரிக்க, அவற்றின் முதலில் மட்டும் இடுவதுண்டு.

உ-ம். இரணியன் பிரகலாதனைப் பார்த்து, நீ கூறும் கடவுளை இத்தூணிடைக் காட்டுவாயோ?'' என்றான்.

; இது அரைப் புள்ளி

கருத்து முற்றிலும் முற்றுப்பெருத வாக்கியங்களின் கடைசியில் இக்குறி வரும்.

உ-ம். அன்று வைகாசி மதியத்துக்கு முதல் நாள்; விடியல் நேரம்; திங்கள் மறைந்து மெல்லிருள் சூழ்ந்து கொண்ட வேளை; கீழ்வானம் ஒளிவிட்டு வெளுக்கும் சமயம்; உடுத்த துகிலோடும் மலர்ந்த முகத்தோடும் கண்ணகியும் கோவலனும் மதுரைக்குப் பிரயாணமானுர்கள். (2) செல்வமும் பதவியும் இருப்பது உண்மையே; ஆனல், விதி வேறு விதமாக இருப்பதற்கு யார் என்ன செய்வார்கள்!

: இது முக்காற் புள்ளி

அதாவது, அவையாவன என்ற பொருள் தரும் சொற்கள் மறைந்தேனும் வெளிப்படையாகவேனும் வருங்கால் அச்சொற்களுக்கு முன் வாக்கியம் இப்புள்ளிகளைப் பெறும்.

உ-ம். புலன்கள் ஐந்தாம்: அவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், சுவை எனப்படும். 'முருகன் கீழ் வருமாறு பேசினுன்' என்று கூறிக் கீழே அவன் பேச்சைத் தரும்போதும் 'பேசினுன்' என்பதற்குப் பின் முக்காற் புள்ளியை அமைத்தல் வேண்டும்.

" " மேற்கோள் குறி

(1) பேசுவோனுடைய சொற்களை அப்படியே தெரிவிக்கும்போது அவற்றை இக் குறிகளுக்குள் அமைத்தல் வேண்டும். (2) செய்யுட்களை வசனப் பகுதியில் எடுத்தாளும்போது அவற்றை இக்குறிகளுள் அமைத்தல் வேண்டும்.

( ) இவை பிறைக் குறி

வாக்கியங்களில் ஒன்றன் விளக்கமாக வரும் சொற்களையும் தொடர்களையும் இக்குறிகளுக்குள் அமைத்தல் வேண்டும்.

உ-ம். அர்ஜுனன் தவம் செய்து, கிராதனுக (வேடனுக)த் தோன்றிய சிவபிரானுடன் மல்யுத்தம் புரிந்தான்.

— — இவை விளக்கக் கோடுகள்

வாக்கியத்தில் ஒரு தொடரின் உத்வேகம் பின்னும் வருமாகில் அதனை இக்குறிக்குள் அமைத்தல் வேண்டும்.

உ-ம். 1. இக்கொடியவன்—இந்தக் கொடுங்கோலன்—இந்தப் பழிகாரப் பாண்டியன் தக்க தண்டனை பெறும் வரையில் இருக்கிறேன். 2. இந்த அரசனுடைய அநியாயத்தால் எனக்கு—பதிசேவையைப் பாக்கியம் என்று நினைக்கும் எனக்கு—விதவைக் கோலமா !

செய்யுள் மஞ்சரி

---

1. திரு மந்திரம்

ஆர்க்கும் இடுமின், அவரிவர் என்னன்மின் ;
பார்த்திருந் துண்மின், பழம்பொருள் போற்றன்மின் ;
வேட்கையுடையீர் ! விரைந்தொல்லை உண்ணன்மின் ;
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே. (1)

உடம்பார் அழியில் உயிரார் அழிவர் ;
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார் ;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே,
உடம்பை வளர்த்தேன் ; உயிர் வளர்த்தேனே. (2)

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா ;
நடமாடக் கோயில் நம்பர்க் கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற் கதாமே. (3)

தீயினும் வெய்யன், புனலினுந் தண்ணியன்,
ஆயினும் ஈசன் அருளறிவா ரில்லை ;
சேயினும் நல்லன் ; அணியன் நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. (4)

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் ;
அன்பேசிவமாவது ஆரும் அறிகிலார் ;
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே. (5)

2. திருக்குறள்

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை ; அஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். (1)

செய்தக்க வல்ல செயக்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். (2)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (3)

கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. (4)

கடலோடா கால்வ னெடுந்தேர் ; கடலோடு
நாவாயு மோடா நிலத்து. (5)

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (6)

எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். (7)

கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார். (8)

நகுதற் பொருட்டன்று நட்டல் ; மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. (9)

ஏவவுஞ் செய்கலான் தான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய். (10)

——

3. நீதிநெறி விளக்கம்

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்;—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா; யாரே
அழகுக் கழகு செய்வார். (1)

முற்றும் உணர்ந்தவர் இல்லை ; முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க ;—சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா கனங் குழாய் !
சொல்லுலைக் கூடத்தி னால். (2)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா ! பெரிதன் றகமகிழ்க ;—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக ; கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று. (3)

ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப ;—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலியதன்றே தாழும் துலைக்கு ? (4)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு ;—பிறர் பிறர்
சீர்எல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். (5)

கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்
குண்டோ உணர்ச்சிமற் றில்லாகும் ;—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண்துயில்வ
பேரா பெருமூச்செறிந்து. (6)

கண்ணேக் கரும்பா நகைமுகமே நாள்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலம்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு. (7)

வாங்கும் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறேூ துயருருு—ஆங்கது கொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்;
ஆரும் கிளையோ டயின்று. (8)

மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணுயி ஞர். (9)

சிறிய பகைஎனினும் ஓம்புதல் தேற்ருர்
பெரிதும் பிழைபா டுடையர்;—நிறைகயத்
தாழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (10)

---

4. மோசம்போன கழுதை

துன்னிய காடொன் றங்கே
துரைத்தனம் பண்ணும் சிங்கம்;
மன்னவன் வாயி லுக்கு
மந்திரி யோரி யொன் றங்கு

அன்னவன் வயிற்றின் நோவாய்
"அமைச்சனே! கழுதை யீரல்
உன்னியே கொடுவா" வென்ன
ஓரியோ ரூரை நாடி. (1)

சென்றொரு வண்ணான் தப்பும்
செழும் புனற் சுனையின் பக்கம்
நின்றது; பொதியைத் தள்ளி
நெடுங்கயிற் றாலே காலை
ஒன்றிடத் தளைந்து வண்ணான்
ஓட்டினன் கழுதை தன்னை;
வென்றிகொள் ஓரி சேர்ந்"துன்
மேனியேன் இளைத்த" தென்ன, (2)

கூறவே கழுதை "வண்ணான்
கொண்டநாள் முதலெந் நேரம்
சீறியே அடித்த லானும்
தீனிபோ டாமை யானும்
ஏறியே பொதியும் என்மேல்
ஏற்றியே தள்ளிப் பின்னை
மாறுகால் பிணைத்த லானும்
வருந்தி நான் இளைத்தே"னென்ன, (3)

அந்தஓ ரியுந்தான் கேட்டே
"ஐயா, நீ வந்தா யாகில்
சிந்தையுள் மகிழ்ந்தே எங்கள்
சிங்கமன் னவன்றன் பக்கல்

மந்திரி யாக உன்னை
வைத்தர சாள்வ னீயும்
சுந்தர அமைச்ச ஞகிச்
சுகத்துட னிருப்பா" யென்ன, (4)

"சிங்கமோ விலங்கை யெல்லாம்
தின்னுமே யென்ன" ஒகோ
எங்களை யெல்லாம் தான்வைத்து
இரக்ஷைசெய் திலனே மன்னன்!
வெங்களிற்று யானை யல்லால்
வேருெரு விலங்கைத் தீண்டான்;
அங்கவன் ஆணை தப்பான்
அதற்கு நான் பிணையே" யென்ருன். (5)

கழுதையும் நல்ல தென்னக்
காலினில் தளைத் திருந்த
பழுதையை ஓரி மெள்ளப்
பல்லினல் கடித்து விட்டே
வழிசொல்லி அழைத்துப் போய்த்தன்
மன்னவன் முனம்வி டுக்கப்
பழிபடு மன்னன் தானும்
பற்றியே பிடிக்க வந்தான். (6)

கண்டது கழுதை தானும்
கதறியே திரும்பி ஓட்டம்
கொண்டது; சிங்கம் நோவு
கொண்டதால் ஓட மாட்டாது

அண்டையில் நிற்க ஓரி
“ஐய,நீ பதறி விட்டாய்;
கொண்டு நான் தந்துன் கையில்
கொடுத்தபின் வதைக்க வென்று” (7)

பின்னையும் ஓரி சென்று
“பேதையாய் இருந்தா யந்தோ!
மன்னவன் உன்னைக் கண்ட
மகிழ்ச்சியால் தழுவி மோந்து
தன்னரு கிருத்திக் கொண்டு
தானுன்னை அமைச்ச ளுைக்க
உன்னினன்; என்னே நீயே
ஓடியிங் குற்றாய்!” என்றும், (8)

“கணக்கிலாப் பாவம் பண்ணிக்
கழுதையாய்ப் பிறந்து வண்ணான்
பிணக்கினால் அடியும் பட்டுப்
பெருஞ்சுமை சுமந்தாய்; நல்ல
இணக்கம்நான் செய்தேன்; அந்த
இணக்கம்நீ அறியாய்; மூட
குணத்தினால் வந்தாய்” என்றும்
கூறிடக் கழுதை கேட்டே, (9)

“உன்னது பேச்சை நம்பி
உற்றனன்; இட்டு முன்னே
மன்னிய சிங்கம் கொல்ல
வந்தது; தப்பி வந்தேன்;

இன்னமேன் வந்தா" யென்ன,
இருநிலம் தொட்டுக் கையால்
தன்னிரு காலு மூடிச்
சத்தியம் சொல்லு மாபோல், (10)

"ஐயையோ, பாவம், பாவம்!
அரச னப்படிச் செய்வானே!
பொய்யுரை சொல்ல வேண்டாம்;
போடு நீ யிந்தப் பேச்சை;
வையகம் போற்றும் சிங்க
மன்னவன் வார்த்தை தப்பான்.
மெய்யிது தானே" யென்று
வேந்தன்மே லாணை யிட்டே, (11)

"தன்னிலே வருஞ்செல் வத்தைத்
தள்ளுவார் ஒருவர்க் காணேன்;
உன்னையே கண்டேன் இப்போது;
உன் தலை விதியோ" வென்றே
தன்னிலே அதிசயித்தே
தான் இதைவிட்டு நீ, நான்
சொன்னதைக் கேட்டு வந்தால்
சுகமெலாம் வரும் உனக்கே. (12)

"இருவரா நாமே கூடி
இருந்தன மாகில் வேறங்கு
ஒருவரால் ஆவ துண்டோ
உலகெலாம் நமதே," யென்ன

வெருவிய கழுதை தானும்
விரும்பியே இதன் பின் செல்லக்
கருதிய ஓரி யுஞ்சிங்
கத்தின்முன் விட்ட தம்மா! (13)

கழுதையார் தம்மைச் சிங்கம்
கண்டு தன் கைகளாரத்
தழுவியே மோந்து கண்டம்
தன்னையு முறித்துப் போட்டே
"பழுது நாம் செய்தோம்; சந்தி
பண்ணியிம் மருந்தைக் கொள்வேம்;
கழுதையைப் பழுது றாமற்
காத்து நீ இருப்பாய்" என்றே (14)

ஓரியைக் காவல் வைத்தே
ஒரு சுனை அருகிற் சென்று
பாரிய சிங்கஞ் சந்தி
பண்ணியங் கிருக்கு முன்னே
ஓரியு மருந்தோ வென்றங்கு
உற்றதன் கண்ணுங் காதும்
ஈரிரண் டுறுப்புந் தின்றே
இருந்தது பயந்து தூர. (15)

சிங்கமுஞ் சந்தி பண்ணிச்
சென் "றிதன் கண்கள் எங்கே?
இங்கிதன் செவிகள் எங்கே?
என்று தான் முடுகிக் கேட்க,

“அங்கமெல் லாமுண் டாகில்
அகப்பட்டும் திரும்பிப் போய்ப் பின்
மங்கிட விறக்க விங்கே
வரநினைத் திடுமோ!” வென்ன. (16)

சிங்கமும் கழுதை யீரல்
தின்னவு மில்லை : வீணே
அங் கொரு நரிதான் வஞ்சித்து
அழைத்துப் போய்க் கொல்லு வித்துத்
தங்குல ஓரிக் கெல்லாம்
தானிரை கொடுத்த தன்றே;
புங்கமா யறிவி லாமற்
பட்டது கழுதை தானே.

—பஞ்ச தந்திரக் கதை.

---

5. இராமர் வில்லை வளைத்தல்

இராமர் எழுதல்

பொழிந்த நெய் யாகுதி வாய்வழி பொங்கி
எழுந்த கொழுங்கனல் என்ன வெழுந்தான்;
அழிந்தது வில்லென விண்ணவர் ஆர்த்தார்;
மொழிந்தனர் ஆசிகள் முப்பகை வென்றார். (1)

பெண்களின் பேச்சு

‘காணும் நெடுஞ்சிலை கால்வலி’ தென்பார்;
‘நாணுடை நங்கை நலங்கிளர் செங்கேழ்
பாணி யிவன்படர் செங்கை படாதேல்
வாணுதல் சீதையும் வாழ்விலள்’ என்பார்.

கரங்கள் குவித்திரு கண்கள் பனிப்ப
'இருங்களி றிச்சிலை ஏற்றிலன் ஆயின்
நரந்த நறைக்குழல் நங்கையு நாமும்
முருங்கெரி யிற்புக மூழ்குதும்' என்பார். (3)

'வல்லள் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மணைத்தவன் வில்லை எடுத்திப்
பிள்ளை முன் இட்டது பேதமை' யென்பார். (4)

இராமர் வில்லண்டை செல்லல்

தோகையர் இன்னன சொல்லிட நல்லோர்
ஓகை விளம்பிட வும்ப ருவப்ப
மாகம டங்கலு மால்விடை யும்பொன்
நாகமு நாகமு நாண நடந்தான். (5)

வில்லை எடுத்தல்

ஆடக மால்வரை யன்னது தன்னைத்
தேடரு மாமணி சீதையெ னும்பொற்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை யிதென்ன எடுத்தான் (6)

வில் ஒடிந்தமை

தடுத்திமை யாம லிருந்தவர் தாளின்
மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார்;
கடுப்பினில் யாரு மறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.

—கம்ப ராமாயணம்

6: மகன் பிரிவுக்கு மறுகல்,

அரிச்சந்திரன் புலம்பல்

'கள்ள வேகத் தரவு கடிக்கநம்
வள்ள லோ இறந் தான்!' என்று மன்னவன்
உள்ளு ளேநொந் துயிர்த்துயிர்த் துப்புறம்
விள்ள லான்; உரை விம்மி மயங்கினுன். (1)

'அன்னை இன்றி அருங்கானில் எய்திய
உன்னை ஓடி உரகம் கடித்தலின்
மின்னையும் உனையும் விற்ற வெவ்வினை
என்னை எவ்வண்ணம் நொந்தனை ஏந்தலே! (2)

'நந்தம் நாடும் நலமும் இழந்து நீ
எந்த மோடு வந் திவ்வணம் பட்டனை!
மைந்த னே! என்ற னுல் பெற்ற வாழ்வுனக்கு
இந்த வாழ்வள வோ!' என் றிரங்கினுன். (3)

'ஒன்றி லாத உயிரினை ஓம்பியே
பொன்றி லாது புலயனுக் காட்பட்டான்
வென்றி வேந்தினி மீட்கத் தகுவனோ?
என்றிறந்தனை யோ' என் றியம்பினுன். (4)

'காத லால் உனைக் காணுத தாயையும்
ஈதெ லாம் விளைத் தெற்றிய என்னையும்
மீதெ லாம்அர வின்விடம் மேய நாள்
ஏதெ லாம் உரைத் தாய்? உரை ஏந்தலே! (5)

'வாளின் மிக்க வயமன்னர் வந்துநின்
தாளில் வீழ்ந்தழல் இன்றிநின் தாய்திருத்
தோளில் ஏற்றிச் சுடலையி லேவர
வேளின் மிக்கவ! வெவ்வினையோ!' என்று (6)

—அரிச்சந்தி

7. தனிப்பாடல்

கூத்தர் எதிர்த்த புலவர்கள்

"மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னாரடா?"
"கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையும் பண்ணு மங்குசப் பையல் யான்." (1)

கோக்கண்டு மன்னர் குரை கடல் புக்கிலர்;
கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில;
பூதலமேழ்
காக்கின்ற மன்ன! கவியொட்டக் கூத்தனின்
கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர் களோதமிழ் பாடிய
பாவலரே. (2)

"மான்நிற்கு மோ அந்த வாளரி வேங்கை முன்;
வற்றிச் செத்த
கான் நிற்கு மோஅவ் வெரியுந் தழல் முன்;
கனை கடலின்
மீன் நிற்கு மோஅந்த வெங்கட் சுறவமுன்;
வீசு பனி
தான் நிற்கு மோஅக் கதிரோன் உதயத்தில்
தார் மன்னனே!" (3)

"மானவன், நான் அந்த வாளரி வேங்கையும்;
வற்றிச் செத்த
கானவன், நான் அவ் வெரியுந் தழலுங்;
கனை கடலின்

மீனவன், நான் அந்த வெங்கட் சுறவமும்;
வீசு பனி
தானவன், நான் அக் கதிரோ னுதயமும்
தார் மன்னனே." (4)

பல புலவரின் பாடல்கள்

நீளத் திரிந்துழன்ருய் நீங்கா நிழல் போலும்
நாளைக் கிருத்தியோ நல்குரவே!—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே? நானெங்கே?
என்றைக்குக் காண்பேன் இனி. (5)

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்;
வையக மடைந்ததுன் கீர்த்தி;
கானுறு புலியை அடைத்ததுன் வீரம்;
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்;
தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்;
செந்தழல் புகுந்ததுன் மேனி;
யானுமென் கலியும் எவ்விடம் புகுவேம்?
எந்தையே நந்தி நாயகனே! (6)

பெற்ருள் ஒருபிள்ளை என் மனையாட்டி; யப் பிள்ளைக்குப்
பற்ருது கஞ்சி குடிக்குந் தரமன்று பாலிரக்கச் [பால்
சிற்ருளு மில்லைமற் றெல்லா வறுமையுந் தீரவொரு
கற்ரு தரவல்லை யோ? வல்லை மாநகர்க் காளத்தியே! (7)

இடுவார் சிலரும் இடாதார் பலரும்
வடுவிலா வையத் திருக்கப்—படுபாவி
கூவத்து நாரணனைக் கொன்றாயே ; கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு? (8)

ஆலெங்கே அங்கே அரும் பறவை, யாற்றுயிலும்
மாலெங்கே அங்கே மலர் மடந்தை,—சோலை தொறும்
செங்கே தகைமணக்கும் செங்குன்றை எல்லன் எங்கே
அங்கே இரவலர் எல்லாம். (9)

அலையான் கவடுபடான் ஆருடனும் காயான்
இலையென்ப தோர்நாளும் இல்லை—கலையுலவு
சாலைமுத்து க்ருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச்
சோலை யென்று சொன்னவரார் சொல்? (10)

குறிப்புரை

1. திருமந்திரம்

திருமந்திரம் என்பது சைவத் திருமுறைகளில் ஒன்று. இதனை எழுதியவர் திருமூலர் என்பவர். இவர் அஷ்டமா சித்திகளைப் பெற்றவர். இவர்கவிகள் எளிய நடையில் இருக்கின்றன; பரந்த நோக்கமுடையன.

1. பார்த்திருந்து—விருந்தினரின் வருகையை எதிர்பார்த்திருந்து. வேட்கை - விருப்பம். ஒல்லை—விரைவாக.

2. உடம்பைப் பேணுதலின் அவசியத்தை இவர் கூறுகிறார். மேன்மையானது என்று நினைத்து உடம்மை 'உடம்பார்' என்றார்.

4. படம் மாடம் கோவில்—விருதுக் கொடியோடு கூடிய மாடத்தை உடைய ஆலயம். நடமாடும் அக்கோயில்—நடக்கும் அந்த உடல்களையுடைய. நம்பர்—அடியார்.

5. சேய்—குழந்தை, அணியன்—அருகிலுள்ளவன்.

2. திருக்குறள்

திருக்குறள் தமிழ் மொழியிலுள்ள சிறந்த நூல். இது நீதிகளைக் கூறுவது. பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த நூலினின்றும் கருத்துக்களை எடுத்தாளாத தமிழ்ப் புலவரே இல்லை எனலாம். இதனை இயற்றியவர் திருவள்ளுவர்

என்பவர். இவருடைய சாதி மதம் ஒன்றும் தெரியவில்லை. இவர் 1800 வருடங்களுக்கு முன்பு இருந்தவர். திருக்குறளுக்குப் பத்து பேர் முன்காலத்தில் உரை எழுதியுள்ளார்கள். இக் காலத்திலும் பலர் பல பதிப்புக்களாக இதனை வெளியிட்டுள்ளார்.

1. அஞ்சுவது-அஞ்சவேண்டியவைகளை. அறிவார்-அறிவுடையவர்.

2. செய்தக்க அல்ல-செய்யத்தகாதவை. கெடும்-கெடுவான்.

3. தோன்று-தோன்றுமல்.

4. கூம்பும் பருவத்து-இடம் காலம் முதலியவை வசதியாக அமையாத காலத்தில். கொக்கு ஒக்க-(பெரிய மீன் வரும் அளவும் அடங்கி யிருக்கும்)கொக்கைப்போல் இருக்கவேண்டும். சீர்த்த-வாய்ப்பு ஏற்பட்ட.

5. கால்-சக்கரம், வல்நெடும் தேர். ஓடா-ஓடமாட்டா. நாவாயும்-கப்பலும்.

7. திண்ணியர்-மன உறுதியை உடையவர்.

8. செல-தம் வார்த்தைகள் செல்லுபடியாகும் விதம்.

9. நகுதல்-அளவளாவி கேளி விலாசங்களில் ஈடுபடுதல். மிகுதி-வரம்பு மீறிய தீய நடத்தை.

10. ஏவவும்-பிறர் ஏவியும், செய்கலான்-செய்யமாட்டான்; தேறான்-தெளிவாக உணரான். அத்தகையவன் இழிவானவன் என்று கருதி 'உயிர்' என்று அஃறிணையாகக் கூறினர்.

3. நீதி நெறி விளக்கம்

இது ஒரு நீதி நூல். இதனை எழுதியவர் குமரகுருபர சுவாமிகள் என்பவராவர். இவர் சுமார் 280 வருடங்களுக்கு முன்பு இருந்தவர். திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ வைகுண்டத்தில் வேளாள மரபில் சைவ சிகாமணியாகத்தோன்றியவர். ஐந்து பிராயம்வரையில் மூங்கையராய் இருந்து, திருச்செந்தூர் முருகன் திருவருளால் புலவரானார். இளமையிலேயே துறவு பூண்டவர்.

2. கல் - மலை, கனம். குழாய் - கனம் பொருந்திய காது அணியை உடைய பெண்ணே! மகடூஉ முன்னிலை.

உபமானம் ஒரு வாக்கியமாகவும் உபமேயம் வேறு வாக்கியமாகவும் வந்ததனால் இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணி.

4. ஆக்கம்-செல்வம். மீச்செலவு-வரம்புகடந்த நடத்தை. தூக்கின்-நிறுத்துப் பார்த்தால்; துலைக்கு - தராசில்: வேற்றுமை மயக்கம், (எடுத்துக்காட்டுவமை.)

5. சுட்டு - மதிப்பு, சொலல் - சொல்வானாக, இவ்வாறு நடந்துகொள்வது கஷ்டமென்பது தோன்ற 'நோற்பது' என்றார்.

6. மாசுணம்-பாம்பு. துயில்வ என்ற பன்மைச்சொல்லால் மாசுணமும் பன்மைப் பொருளது.

7. அரும்பு + ஆ; ஆ - ஆக. நாள்மலர் - அன்று மலர்ந்தபூ. பண்புடையார் - கற்பதரு போல்வர் என்றால் உவமையாகும். இங்கே அவ்வாறு கூறாமல் அவர்களைக் கற்பதரு வென்றே கூறுவதால் இச்செய்யுள் உருவக அணியாகும். கற்பக விருட்சத்துக்குள்ள அரும்பு, மலர், காய், கனிகளாக உருவகப்படுத்தப்பட்டவை எவை?

8. தூங்கும் - அசையும் இயல்பை உடைய, களிறு: பன்மை. ஆரும் கிளை-நிறைந்த சுற்றம். அயின்று - தின்று. இச்செய்யுளை அன்வயப்படுத்துக.

9. மெய் - உடல், செவ்வி - காலம்.

10. கயம் - குளம். காண்பு - பார்ப்பது.

---

4. மோசம் போன கழுதை

தமிழில் பஞ்ச தந்திரக் கதை என்ற நூல் வசனத்தில் இருக்கிறது. அது சிறந்ததாகும். அதனை ஒட்டிச் செய்யுளில் அப்பெயராலேயே மற்றொரு நூல் இருக்கிறது. அதுவும் சிறந்தது. எளிய நடையிலுள்ளது. அதிலிருந்து இக்கதை எடுக்கப் பட்டிருக்கிறது.

1. துன்னிய - மரம் அடர்ந்த. ஓரி - நரி, உன்னி - யோசித்து.

2. தளைந்து - கட்டி.

3. பிணைத்தல் - கட்டுதல்.

5. இரக்ஷை - காவல். பிணை - ஜவாப்தாரி.

6. பழுதை - கயிறு.

13. இருவரா - இரண்டு பேராக. வெருவிய - அஞ்சின.

14. கண்டம் - கழுத்து.

---

5. இராமர் வில்லை வளைத்தல்

இப்பகுதி கம்பராமாயணத்தினின்று எடுக்கப்பட்டது. தமிழ் மொழியிலுள்ள சிறந்த நூல்களுள் கம்ப ராமாயணமும் ஒன்று. இதனை எழுதிய கம்பரின் பெருமையை விளக்க "கம்பரின்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றும், "கல்வியிற் பெரியன் கம்பன்" என்றும் சில பழமொழிகள் வழங்குகின்றன. கம்பர் காலம் 1000-வருஷங்களுக்கு முற்பட்டதாக இருத்தல்வேண்டும்.

1. ஆகுதி—ஓமத்தில் அக்கினி பகவானுக்கு உணவாக இடும் பொருள். முப்பகை—காமம், வெகுளி, மயக்கம்; வென்றார் – இருடிகள்.

2. சிலை—வில். நங்கை—சீதை. செங்கேழ்பாணி—சிவந்த நிறமுடைய கை. வாள் நுதல் - பிரகாசமான நெற்றி, வாளைப் போன்ற புருவம்.

3. பனிப்ப - நீர் துளிக்க. இரும் களிறு - பெரிய யானை; என்றது ராமனை. நரந்தம் நறை - கஸ்தூரி வாசனை. முருங்கு - அழிக்கும். எரி - தீ.

4. வள்ளல் - இராமன். வெள்ளம் அணைத்தவன் - கங்கையைச் சடையில் தரித்தவன்; சிவ பெருமான்.

5. தோகையர் - பெண்கள்; ஓகை - உவகை. உம்பர் - தேவர். மாகம்மடங்கல்-ஆகாயத்துக்குப் பாயும் சிங்கம். மால் விடை - பெரிய காளை. பொன்நாகம் - மேருமலை. நாகம் - யானை.

6. ஆடகம்-பொன். வரை-மலை; சூடகம் -கைக்காப்பு. வால் - வெண்மை நிறம். வால்வளை - சீதை.

7. நாண் - வில்லின் கயிறு. நுதி - வில்நுனியில். கடுப்பினில் - விரைவினில்.

---

6. மகன் பிரிவுக்கு மறுகல்

இப்பகுதி அரிச்சந்திர புராணம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. லோகிதாசன் இறந்தமைக்குத் தாயும் தந்தையும் வருந்தும் பகுதி மிக அழகாக வருணிக்கப்பெற்றுளது. அதில் தகப்பன் புலம்புவது பாடமாக வந்துளது. இப் புராணம் எளிய நடையது. ஆதல்பற்றித் தமிழ் பயில்வோர் தொடக்

கத்தில் இந்நூலைப் படித்தல் நம் நாட்டில் வழக்கமாக இருந்து வந்தது. சில கிராமங்களில் இவ்வழக்கம் இன்றும் காணப்படும். இதனை இயற்றியவர் வீரை ஆசு கவிராயர் என்பவராவர்.

1. விள்ளலான் - சொல்லான்.

2. உரகம் - பாம்பு. மின்னையும் - சந்திரமதியையும். வெவ்வினை - கொடிய வினையை உடைய. ஏந்தல்-மேலானவனே.

4. ஒன்றிலாத - நிலைக்காத. பொன்றிலாது - இறவாமல்.

6. வேளின் - மன்மதனைக் காட்டிலும்.

---

7. தனிப்பாடல்

ஒரு நூலையும் சாராமல் அவ்வப்போது தக்க சந்தர்ப்பங்களில் புலவர் பாடிய பாடல் தனிப்பாடலாகும். அநேகமாகத் தனிப்பாடல் மிகச் சுவையுள்ளனவாக இருக்கும்.

ஒட்டக்கூத்தர் ஒருகாலத்தவர்; புகழேந்தி மற்றொரு காலத்தவர். இவ்விருவரையும் ஒருகாலத்தவராக்கி இவர் பாடியனவாகப் பல பாடல்களைக் காட்டிக் கதை கட்டியிருக்கிறார்கள். கதையின் உண்மை எப்படியிருப்பினும் இப்பாடல்கள் சுவை பொருந்தியனவாகும்.

ஒட்டக்கூத்தர் போலிப் புலவரைக் கேள்வி கேட்டு மடக்கிச் சிறையிட்டு விடுவாராம். பின் விஜயதசமி யன்று அவர்களை அழைப்பித்துக்கேள்வி கேட்டு, தக்கபடி விடை பகராதவர்களைத் தண்டிப்பாராம். இப்படி ஒழுகு நாளில் ஒரு சமயம் கூத்தர் புகழேந்தியாரைச் சிறை செய்தனராம். அவர் சிறையிலிருந்த பல ஜாதிப் போலிப் புலவர்களைச் சிறந்த கவிகளாக்கி மறு விஜய தசமியன்று கூத்தரை அவமானப்படுத்தினராம்.

இப்பகுதியில் முதல் பாடல் கூத்தரின் வினவும், அவர் எதிர்த்த ஒரு குயவரின் விடையும் அடங்கியதாகும். அடுத்த பாடல்ஒரு வேளாளர் கூத்தரை எதிர்த்துப் பாடியதாக உள்ளது.

1. மோனை: ஒரு செய்யுளடியில் முதற் சீரின் முதலெழுத்து அல்லது அதற்குப் பொருத்தமுள்ள எழுத்து பின்னுள்ள சில சீர்களின் முதலெழுத்தாக வருவது மோனையாகும். மோனை எழுத்துக்களாவன. (1) அ, ஆ, ஐ, ஔ—(2) இ. ஈ. எ. ஏ—(3) உ, ஊ, ஒ, ஓ—மெய்களில் தகர சகரங்களும், வகர மகரங்களும், நகர ஞகரங்களும், தம்முள் மோனையாக வரும்.

முத்தமிழ்—இயல், இசை, நாடகத் தமிழ். கூத்தர் தம்மை யானையாகக்கொண்டு கூறுகிறார். யானைக்கு மும்மதமிருப்பது போல் தமக்கு முத்தமி ழுண்டென்றபடி. அங்குசப் பையல்-அழகிய குயவன்; யானையை அடக்கும் அங்குசமென்ற கருவியை உடையவன்.

2. கோ-பெரிய மன்னர். குரை-சப்திக்கும். கோ தநகப்பூ-தாமரை! 'காக்கின்ற மன்ன' என்றது சோழனை.

3. 'புகழேந்தியும் சிறந்த புலவர் தாமே' என்று சோழன் கூத்தரை வினவியபோது இக்கவியைக் கூத்தர் கூறினாராம்.

கான்—காடு. கனை-ஒலிக்கும்; சுறவம்—கடலில் வாழும் பெரு மீன்; திமிங்கிலம் என்பர்.

4. கூத்தர் இப்படிப் பாடியதைக் கேட்ட புகழேந்தி அதற்கு உத்தரமாக அப்பாடலை ஒட்டிப் பாடிய பாட்டு இது.

5. நல் குரவு—வறுமை. நின்றை—காளத்திநாதன் என்ற பிரபுவின் ஊர்.

6. 'உன்னிடமிருந்த பல நல்லியல்புகள் தத்தமக்கு ஏற்ற பிற விடங்களுக்குச் சென்றுவிட்டன; யானும் என் வறுமையும் எங்கே செல்வது,' என்பது கருத்து, நந்திநாயகன்-ஒரு பல்லவ மன்னன்.

7. கன்று + ஆ, கற்று—கன்றோடு கூடிய பசு.

8. கூவம்—ஓர் ஊர்.

9. ஆல் + துயிலும்—ஆற்றுயிலும் = ஆலிலையில் தூங்கும். கேதகை—தாழை மலர்.

10. கவடு—கபடம். காயான்—கோவியான். இலை என்பது—இல்லை என்று சொல்வது. கலை—கல்வி. 'சோலைமுத்து' என்ற வள்ளல் மீது ஒருவர் பாடிய பாட்டு இது. 'சோலைக்குள்ள இயல்புகளாகிய அலைவது, கவடு (கிளை) தோன்றுவது, காய்வது, இலையோடிருப்பது என்னும் குணங்கள் இவன்பால் இல்லை; அங்ஙனமிருக்க இவனைச் 'சோலை' என்றல் எங்ஙனம்பொருந்தும்' என்றபடி.

முற்றிற்று.